உதயன்

விலை ரூபா 7.00

கூடார்18 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 10 சனிக்கிழமை (22-02-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:88

பெண் போராளிகள் வவுனியாவில் வழிமறிக்கப்பட்டனர்

வவுனியா,பெப்.22

வவுனியா கிடாச்சூரிப்பகுதியில் நேற்று அரசியல் பணிகளை முடித்துக்கொண்டு திரும்பிய விடுதலைப் புலிகளின் 4பெண் போராளிகளை வழிமறித்த படையினர் இடுப்பில் அணிந்திருந்த பட்டிகளைக கழற்றுமாறு வற்புறுத்தியதாகக் கூறப்படுகிறது.

இந்தச்சம்பவத்தைக் கேள்வியுற்று அப்பிரதேச மக்கள் அங்குகூடி தமது எதிர்ப்பை வெளிக்காட்டியதுடன் வவுனியாவில் உள்ள புலிகளின அலுவலகத்துக்கும் தகவல் அளித்தனர்.

இந்த விடயத்தை உடனடியாகக் கண்காணிப்புக்குழுவிடம் புலிகளின் நிர்வாகப்பொறுப்பாளர் இளம் தென்றல் தெரிவித்தார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த கண்காணிப்புக்குழுவினர் இராணுவ அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி சமாதானமாகத்தீர்வு கண்டனர். இதன் காரணமாக அங்கு ஏற்பட விருந்த விபரீதம் தவிர்க்கப்பட்டது என்று பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3-164)

கடைகள் மூடப்படும்! போக்குவரத்து நிறுத்தப்படும்!!

குடாநாடு இன்று காலையில் சில மணிநேரம் ஸ்தம்பிக்கும்!

யாழ்ப்பாணம்,பெப்ரவரி22

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்பாடு நடைமுறைக்கு வந்து ஒரு வருடம் நிறைவடையும் வேளையில், தமிழ் மக்களின் வாழ்க்கையில் இயல்பு நிலை இதுவரை ஏற்படாமைக்கு அதிருப்தி தெரிவிக்கும் வகையில் இன்று காலை 10 மணி வரை குடாநாடு ஸ்தம்பிதம் அடையும் வகையில் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் இதற்கான அழைப்பை விடுத்துள்ளது.

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாடு கடந்த வருடம் பெப்ரவரி மாதம 21ஆம் திகதி கைச்சாத்தாகியது. இந்த உடன்பாடு நடைமுறைக்கு வந்து ஒரு வருடம் இன்று பூர்த்தியாகிறது இதனையொட்டி அரசு தெற்கில் விசேட நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்துவருகிறது.

ஆனால், இந்த உடன்பாடு நடைமுறைக்கு வந்தும் தமிழ் மக்களின் வாழ்க்கை நிலை இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை இதனால் தமது அதிருப்தியை வெளிக்காட்ட வடக்கு - கிழக்கில் தமிழ்மக் (12ஆம் பக்கம் பார்க்க)

இறந்த படையினருக்கு புலிகளின் பகுதியில் பொலீஸார் அஞ்சலி!

கிளிநொச்சி,பெப்.22

கிளிநொச்சியில் நடைபெறும் தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழாவில் பங்குபற்றும் அம்பாறை மாவட்ட பொலீஸ் அணியினர் முல்லைத்தீவுத் தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் நினைவுக் கற்கள் நடப்பட்டுள்ள இடத்தில் அஞ்சலி செலுத்தினர்.

அம்பாறை மாவட்டத்தின் கரப்பந்தாட்ட சம்பியன் அணியான பொலீஸ் அணி இந்த விளையாட்டு விழாவில் பங்குபற்ற கிளிநொச்சிக்கு வந்துள்ளது. இந்த அணியில் 12பொலீஸார் இடம் பெறுள்ளனர். இந்த அணியினருக்கு தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தேநீர் விருந்தளித்தார்.

அச்சமயம் அங்கு உரையாற்றிய பாப்பா தெரிவித்ததாவது:-

'ஓயாத அலைகள்!' நடவடிக்கையின் போது முல்லைதீவு முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அத்தாக்குதலில் உயிரிழந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினரின் சடலங்களை மீட்டிருந்தோம். அந்தச் சடலங்களைப் பொறுப்பேற்கும்படி இலங்கை அரசி (12ஆம் பக்கம் பார்க்க)

முகமாலையில் புலிகளின் நிலைக்குள் பிரவேசித்த பொலீஸ் கான்ஸ்டபிள்

கிளிநொச்சி நீதிமன்றத்தின் விளக்கமறியலில்

கிளிநொச்சி,பெப்.22

முகமாலையில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைக்குள் பிரவேசித்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டிக்கின்றார். அவரை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி கிளிநொச்சியில் உள்ள தமிழீழ நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முகமாலையில் விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைக்குள் நேற்று முன்தினம் நண்பகல் ஊடுருவிய சமயம் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்ட நீர்கொழும்பு, தர்க்கா நகரைச் சேர்ந்த டொன் சிமித் ஆனந்த குணசேகர (வயது - 38 R.31224) என்ற பொலீஸ் கான்ஸ்டபிளே தமிழீழ காவல்துறையினரிடம் கையளிக்கப்பட்டார்.

பிரஸ்தாப கான்ஸ்டபிள் கிளிநொச்சி தமிழீழ நீதிமன்ற நீதிவான் சி.மணியரசன் முன்னிலையில் நேற்றுக்காலை ஆஜர்செய்யப்பட்டார்.

தெல்லிப்பழைப் பகுதியில் கடமையாற்றிவந்த பிரஸ்தாப கான்ஸ்டபிள் முகமாலைப் பகுதிக்கு மாற்றப்பட்டார் (12ஆம் பக்கம் பார்க்க)

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும்

படையினரின் செயற்பாட்டை கண்டித்து உண்ணாவிரதம்

நல்லை ஆலயம் முன்பாக நாளை

யாழ்ப்பாணம்,பெப்.22

அரசு - புலிகள் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் ஸ்ரீலங்கா படையினரின் செயற்பாடுகளைக் கண்டித்தும் -

சமாதானம் நிலைத்து நிலைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரியும் -

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிமுதல் நல்லைக்கந்தன் ஆலயம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தையும் பிரார்த்தனை வழிபாடுகளையும் யாழ்மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்கம் மேற்கொள்ள விருக்கின்றது.

யாழ். மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்கத்தின் விசேட கூட்டம் ஒன்று நேற்று இடம்பெற்ற சமயம் இது தொடர்பாக முடிவு எடுக்கப்பட்டது. (12ஆம் பக்கம் பார்க்க)

'ஹெல்மெட்' அணியாத இளைஞரிடம் லஞ்சம் வாங்கிய பொலீஸ்காரர்!

மனித உரிமை அலுவலரிடம் சிக்கினார்

யாழ்ப்பாணம்,பெப்.22

தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிள் செலுத்தியவரிடம் லஞ்சம் வாங்க முற்பட்ட பொலீஸ்காரர் ஒருவர் தன்னிடம் கையும் மெய்யுமாகச் சிக்கியதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரி ஆர்.பி.சந்திரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:

நேற்று மாலை 'றக்கா' வீதியில் அமைந்துள்ள பொலீஸ் சோதனைச் சாவடியில் கடமையில் இருந்த பொலீஸ்காரர் ஒருவர் அவ்வீதி வழியாக தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் சென்ற மாணிக்கம் சுரேஷ் குமார் என்பவரை வழிமறித்தார். தலைக்கவசம் அணியாமல் செல்வதனைக் காரணம் காட்டி அவரிடம் இருந்து அந்தப் பொலீஸ்காரர் சிறுதொகைப் பணத்தை அறவிட்டார்.

மேற்படி நபரிடம் தண்டப்பணம் பெற்றுக்கொண்ட பொலீஸ் உத்தியோகத்தர் அதற்குரிய பற்றுச் சீட்டு எதனையும் வழங்கவில்லை.

அவ்வீதியால் சென்றுகொண்டிருந்த நான் இச்சம்பவத்தினை நேரடியாக அவதானித்தேன். சம்பந்தப்பட்ட (12ஆம் பக்கம் பார்க்க)

இராணுவமும் புலிகளும் சமபலம் பேணவேண்டும்

கண்காணிப்புக் குழு கருத்து

கொழும்பு,பெப்.22

இன்றுடன் ஓராண்டு நிறைவடையும் அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு இராணுவமும் புலிகளும் தொடர்ந்து தற்போதுள்ள சமபலத்தைப் பேணவேண்டும்.

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்த ஓராண்டு நிறைவையொட்டி கருத்துத் தெரிவிக்கையில் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொன் புறூவ்கோவ்டே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

இனத்துவ யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கு அரசு மேலும் பேச்சுக்களை நடத்துவதற்கு முன்னதாக புலிகளின் ஆயுதங்களைக்களையுமாறு எதிர்க் கட்சியினர் கோரிக்கை விடுப்பதானது சமாதானப் பேச்சுகளுக்கு குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கையாகும்.

புலிகள், இராணுவத்தினர் தத்தமது இடங்களில் நிலைகொண்டிருக்கும் சாத்தியத்தை போர்நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தியது. பல இடங்களில் இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்ட நிகழ்வானது இராணுவ சமநிலையை சீர்குலைத்துள்ளது. இதனால் நிச்சயமற்ற தன்மை ஏற்பட்டது.

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சமஷ்டி ஆட்சிமுறை பற்றி இருதரப்பினரும் பேசிமுடிவு செய்வதற்கு முன்னர் ஆயுதங்களைக் கைவிட முடியாது என புலிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலங்களில் பல இடங்களில் யுத்தநிறுத்த மீறல்கள் இடம் பெற்றபோதிலும் அமைதி தொடர்ந்து பேணப்பட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

உள்ளூராட்சிச் சபைகளிடம்

வாகனங்களை ஒப்படைக்க மறுக்கும் முன்னாள் தலைவர்கள் மீது நடவடிக்கை

ஆணையாளர் தலைமையிலான கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம்,பெப்.22

வடக்கில் பதவி இழந்த உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களில் இதுவரை சபைகளின் வாகனங்களை சபைகளிடம் ஒப்படைக்காதவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுலகத்தில் நேற்று நடந்த கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி தேஅவிஜயலட்சுமி தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

சபைகளின் செயலாளர்கள், யாழ் மாநகர ஆணையாளர் உட்பட உள்ளூராட்சித்திணைக்கள அதிகாரிகளும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்களுக்கு பதவிவழியாக வழங்கப்பட்ட வாசகங்கள் அந்தந்த சபைகளின் நிர்வாகத்திடம் மீளக் கையளிப்பதே ஜனநாயக வழிமுறை என்று கலந்துரையாடலின் போது சுட்டிக்காட்டப்பட்டது. (12ஆம் பக்கம் பார்க்க)

இன்று இரவு நாட்டு மக்களுக்கு பிரதமர் உரை

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியடைவதை முன்னிட்டு இன்று சனிக்கிழமை இரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார்.

இன்று இரவு 9.30 மணிமுதல் 10.30 மணிவரை பிரதமர் இலங்கையின் சகல தொலைக்காட்சி சேவைகளிலும் உரையாற்றவுள்ளார்.

சமாதான முன்னெடுப்புகளின் ஒருவருடகால சவால்கள் தொடர்பாக பிரதமர் தனது உரையின்போது நாட்டு மக்களுக்கு விளக்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)

யாழ். நூல் நிலையத்தின்

திறப்புவிழா தடைப்பட்டது போல் சபை விவாதமும் கைவிடப்பட்டது

கொழும்பு,பெப்.22

புனரமைக்கப்பட்ட யாழ்.பொது நூலகம் கடந்த 14ஆம் திகதி திறக்கப்பட இருந்த போதிலும் கடைசி நேரத்தில் அது கைவிடப்பட்டது.

அதேபோல நேற்று நாடாளுமன்றத்தில் நூலக திறப்பு பற்றி நடைபெற இருந்த விவாதமும் கடைசி நேரத்தில் கைவிடப்பட்டது. காரணம் பிரேரணையைக் கொண்டு வந்த ஜே.வி.பி. உறுப்பினர் ஆர்.சந்திரசேகரன் அதை முன்மொழிவதற்கு உரிய நேரத்தில் சபையில் இருக்கவில்லை. அவரைத் தேடிப்பிடிப்பதற்கு ஜே.வி.பியினருக்கு ஐந்து நிமிட அவகாசம் அளித்தார் சபைக்குத் தலைமைதாங்கிய குழுக்களின் பிரதித் தலைவர்.

எங்கெல்லாம் தேடியும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பிரேரணையை விவாதிக்காமலே சபையை மார்ச் 4ஆம் திகதிவரை ஒத்திவைத்தார் குழுக்களின் பிரதித் தலைவர்.

யாழ்நூலகத் திறப்பு பற்றிய பிரே (12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஓராண்டுப் பூர்த்தி மற்றும் மீள் குடியமர்வுக் கொடுப்பனவுக்கான அங்கீகாரக் கடிதம் வழங்கல் ஆகிய நிகழ்வுகள் யாழ்.செயலகத்தில் நேற்று இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளில் மேலதிக அரச அதிபர் திருமதி ப.தில்கநாயகம்போல், அகதிகளுக்கான ஐ.நா.ஸ்தானிகராலயப் பிரதிநிதி ஜொகானா மைக்வே ஆகியோர் குத்துவிளக்கேற்று வதையும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ்.அரச அதிபர் எஸ்.பத்மநாதன் ஆகியோர் பயனாளிகளுக்கு கொடுப்பனவுக்கான அங்கீகாரக் கடிதங்களை வழங்குதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: தேவராஜன்)*

தேசிய சமாதான தின நிகழ்வு யாழ். செயலகத்தில் நடந்தது

யாழ்ப்பாணம்,பெப்.22

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணாவு உடன்படிக்கை கைச்சாத்தாகி ஓராண்டு நிறைவடைவதையொட்டி பிரகடனம் செய்யப்பட்டுள்ள தேசிய சமாதான தினத்தின் விசேட நிகழ்வுகள் நேற்று யாழ்.செயலகத்தில் இடம்பெற்றன.

யாழ்.செயலக திட்டப் பணிப் பாளர் பு.சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் சமாதானம் தொடர்பான கருத்துரைகள் வழங்கப்பட்டதுடன் மீளக் குடியமர்ந்த 100 குடும்பங்களுக்கு தலா 25ஆயிரம் ரூபாவுக்கான காசோலையைப் பெற்றுக்கொள்வதற்கான அத்தாட்சிக் கடிதங்களும் வழங்கப்பட்டன.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சாவகச்சேரி நகரம் (ஜே/300), கோயிலாக்கண்டி (ஜே/295), கோயில் குடியிருப்பு (ஜே/301), கைதடி நுணாவில் (ஜே/309) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கே இக்கடிதங்கள் வழங்கப்பட்டன. 25 ஆயிரம் ரூபாவுக்கான காசோலைகள் ஏற்கனவே வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றுக்கான அத்தாட்சிக் கடிதங்களே வழங்கப்படுவதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். மேலும் 250 குடும்பங்களுக்கு அடுத்த வாரம் இக்கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.கே.சிவாஜிலிங்கம், அகதிகளுக்கான ஐ.நா.தூத ரகப் பிரதிநிதி ஜொகானா மைக்வே, பிரதமரின் சர்வதேச ஆலோசகர் எஸ். நாராயணசாமி மற்றும் பிரதேச செயலகள், செயலக அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(ஒ-10-8)

ஆர்.சி.ரி.மிஷன் பிரதிநிதிகள் குழு நாளைமறுதினம் யாழ்.விஜயம்

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ்மாவட்டத்தில் உள்ள குடும்ப புனர்வாழ்வு நிலையத்துக்கு நிதி வழங்கும் ஆர்.சி.ரி மிஷனைச் சேர்ந்த குழுவொன்று நாளைமறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளது. இக்குழு இங்கு இருநாள்கள் தங்யிருந்து நிகழ்வுகளில் கலந்து கொள்கிறது.

இக்குழுவினர் நாளை மறுதினம் காலை 8.30 மணிக்கு யாழ். ஆயரை சந்திப்பர். பின்னர் யாழ் போதனா வைத்தியசாலைக்குச் செல்லும் இவர்கள் அங்கு பேராசிரியர் தயா சோமசுந்தரத்துடனும் வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்சதாமுகததுடனும் கலந்துரையாடவுள்ளனர்.

அதே தினம் முற்பகல் 11.30 மணிக்கு யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையில் இணையப் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ள குழுவினர் பிற்பகல் 1.30 மணிக்கு அகதிகளுக்கான ஐநா. தூதரகத்திலும், 2.30 மணிக்கு 'அக வொளி' உளவளத்துணை நிலையத்திலும் அதனைத் தொடர்ந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திலும் கலந்துரையாடல்களில் கலந்துகொள்ளவுள்ளனர்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு பல்கலைக் கழக துணைவேந்தருடனும் முற்பகல் 11 மணிக்கு யாழ்.செயலகத்தில் அரச அதிபருடனும் கலந்துரையாடவுள்ள இக்குழுவினர் பிற்பகல் 1.30 மணிக்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்கின்றனர். மாலையில் சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறைப் பகுதிகளுக்கு சென்று யுத்தச் சேதங்களைப் பார்வையிடுவர். (ஒ-10)

நாடாளுமன்றத்திலும் நேற்று ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டம்

அமளிதுமளியால் சபை நடவடிக்கைகள் ஒத்திவைப்பு

கொழும்பு,பெப்,22

நேற்றுமுன்தினம் அரசுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்திய ஜே.வி.பியினர் நேற்று நாடாளுமன்றத்தில் அப்போராட்டம் மீதான தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். பதாகைகளைப் பிடித்த வண்ணம் சபா மண்டபத்தின் மத்திக்கு வந்து அமளிதுமளியில் ஈடுபட்டனர். பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்கு எதிராக கோஷம் எழுப்பினர். பதாகைகளைத் தூக்கிப்பிடித்துக் கொண்டு ஆடினர்.

ஜே.வி.பியினரின் இந்த ஆர்ப்பாட்டத்தால் சபையில் ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது. ஆளும் கட்சித் தரப்பினரும் எதிர்க் கோஷங்களை எழுப்பினர்.

சபைக்கு அவ்வேளை தலைமை வகித்த பிரதித் தலைவர் ஹன் ஹெந்தி சபையில் ஒழுங்கை நிலை நாட்ட பெரும்பாடுபட்டார். ஆயினும் ஒழுங்கை நிலைநாட்ட முடியாமற் போகவே காலை 10.40 மணியளவில சபையை அவர் 15 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

சபை நடுவே வந்த ஜே.வி.பி. உறுப்பினர்கள் செங்கோலையும் தூக்க முற்பட்டனர். படைக்கல சேவிதரின் சமயோசிதத்தால் அவர்கள் சபா பீடத்தை அண்மிக்காது தடுக்கப்பட்டனர்.

சபாநாயகர் ஜோசப்' மைக்கல் பெரேரா தலைமையில் நேற்றுக்காலை 10 மணிக்கு சபை கூடியது வழமை போல வாய்மூல வினாக்களுக்கான பதில்கள் அளிக்கப்பட்டன.

வினாக்களை எழுப்பிய ஜே.வி.பி. உறுப்பினர்கள் அப்பொழுது சபையில் இருக்கவில்லை. நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் இதனைக் கண்டித்தார். இதனால சபையிலிருந்த ஏனைய ஜே.வி.பி. உறுப்பினர்களுக்கும் அமைச்சருக்குமிடையே சூடான வார்த்தைப் பிரயோகங்கள் பரிமாறப்பட்டன.

சபாநாயகர் இரு தரப்பினரையும் அமைதிப்படுத்தினார்.

தொடர்ந்து ஜே.வி.பி. உறுப்பினரான சுனில் ஹந்துன் ஹெத்தி சதொச நிறுவனத்தால் சந்தைக்கு விடப்பட்டிருக்கும் மலிபன் பால்மா குறித்து எழுப்பிய ஒரு கேள்வியும் சபையில் பெரும் வாதப்பிரதிவாதங்களை எழுப்பியது.

தரம் பற்றிய பரிசீலனைக்கு உட்படுத்தப்படாத அப்பால்மாவுக்கு இலங்கை தரச்சான்று முத்திரை பதிக்கப்பட்டிருப்பது குறித்து ஜே.வி.பி. உறுப்பினர்கள் குற்றச்சாட்டுக்களை தொடுத்தனர். ஜே.வி.பி. உறுப்பினர் விமல்வீரவன்ஸ அமைச்சர் ரவி கருணாநாயக்க குறித்து எழுப்பிய ஒரு கேள்வியை வாபஸ் பெறுமாறு உத்தரவிட்ட சபாநாயகர், வாபஸ் பெறப்படாததால் விமல்வீரவன்ஸ கூறிய வடயங்களை நாடாளுமன்றப் பதிவேட்டிலிருந்து நீக்குமாறு கட்டளையிட்டார்.

அதனையடுத்து குழுக்களின் பிரதித் தலைவர் சபைக்குத் தலைமை தாங்கினார்.

ஜே.வி.பியினர் மீது நேற்று முன்தினம் பொலீஸார் நடத்திய குண்டாந்தடியடிப் பிரயோகம் குறித்து விமல்வீரவன்ஸ அப்பொழுது பேச முற்பட்டார். பிரதித் தலைவர் அவரைப் பேச இடமளிக்கவில்லை.

இந்த நிலையிலேயே ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தினால் ஆத்திரம் அடைந்த ஆளும் கட்சி கம்பஹா மாவட்ட எம்.பி. ஒலித்த பிரமிதிரட்ன ஆசனத்தில் இருந்து சபாமண்டபத்தை நோக்கி பாய்ந்து ஓடி வந்தார். அப்போது அமைச்சர் பந்துல குணவர்த்தனவும் மஹிந்த சமரசிங்கவும் அவரைக் கட்டிப்பிடித்து சபாமண்டபத்திற்குச் செல்லவிடாமல் தடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டமும் கூச்சலும் ஏற்பட்டபோது, பார்வையாளர் கலரியில் பாடசாலை மாணவர்கள் நிறைந்து காணப்பட்டனர்.

எனவே, பாடசாலை மாணவர்களைப் பார்வையாளர் கலரியில் இருந்து அப்புறப்படுத்தும்படி பொலீஸாருக்கு உத்தரவிட்டார் படைக்கல சேவிதர்.

ஜே.வி.பியினர் கொண்டுவந்த போஸ்டர்களில் "நாட்டை புலிகளுக்கு தாரை வார்த்த பிரதமர் ரணில் ஒழிக"

"அமைதியான போராட்டத்தினை பொலீஸாரை ஏவிவிட்டு குழப்பிய பிரதமரே வந்து பதில்சொல்" என்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

பொதுஜன ஐக்கிய முன்னணியினர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. 10.40 இற்கு ஒத்தி வைக்கப்பட்ட சபை 11 மணிக்கு மீண்டும் கூடியது. (ஒ)

சந்திரராசாவின் மரணவிசாரணை கிராம சேவையாளர் சாட்சியம்

யாழ்ப்பாணம்,பெப்.22

வட்டுக்கோட்டையில் இருந்து சித்தங்கேணி நோக்கிச்சென்று கொண்டிருந்த சந்திரராசாவின் மோட்டார் சைக்கிளுடன் எதிர்த்திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் மோதியதைக் கண்டேன்.

விபத்தில் உயிரிழந்த முன்னாள் பிதேச செயலர் சந்திரராசாவின் மரண விசாரணையில் சாட்சியம் அளிக்கையில் கிராம சேவையாளர் கணபதிப்பிள்ளை விஜயவேல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்நீதிமன்றில் நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா முன்னிலையில் மரண விசாரணை நேற்று இடம்பெற்றது.

மரணவிசாரணையின் போது சம்பவத்தை நேரில் கண்ட கிராம சேவையாளர் விஜயவேல் மேலும் கூறியதாவது:-

வட்டுக்கோட்டையில் இருந்து சித்தங்கேணி நோக்கி சந்திரராசா மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். வட்டு. இந்துக்கல்லூரியில் இருந்து சுமார் 150 மீற்றர் தூரத்தில் சந்திரராசா சென்றுகொண்டிருந்த சமயம் அவருக்கு முன்பாக மின்சார சபையின் வாகனம் சென்றது.

அச்சமயம் எதிர்த்திசையில் இருந்து வந்துகொண்டிருந்த சந்தேக நபரின் மோட்டார் சைக்கிள் மின்சாரசபை வாகனத்தை விலத்தி வரும் போதுவாகனத்துக்கு பின்னால் வந்த சந்திரராசாவின் மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியது. சந்திரராசா கீழே வீழ்ந்து மயங்கினார்.

'ஹைஏஸ்' வான் ஒன்றில் சங்கானை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் - என்றார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணக்கல்லூரி மாணவனான விமலசூரிய கேசல்ராசாவை பிணையில் விடுமாறு கோரி மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தச்சம்பவம் தொடர்பான விசாரணை முடிவடையாத காரணத்தால் பிணை வழங்க முடியாது எனத் தெரிவித்த நீதிவான் விசாரணையை ஒத்திவைத்தார்.

(ஒ-3)

குடாநாட்டு வளங்களைப் பயன்படுத்தி அபிவிருத்தி அடைவதில் கவனம் செலுத்துக!

ஜப்பானியப் பிரதிநிதிகள் குழு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.22

குடாநாட்டில் உள்ள வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி அபிவிருத்தி அடைவதிலேயே முதலில் கவனம் செலுத்த வேண்டும். அதன் பின்பு தொழில்நுட்ப வளர்ச்சியில் கவனம் செலுத்தலாம்.

நேற்று யாழ்.செயலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

யாழ்.அரச அதிபர் செபத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள் 5 பேர் கலந்துகொண்டனர். இலங்கை முழுவதுக்கும் உதவிவழங்கும் திட்டத்தின் கீழ் உத்தியோக பூர்வ அபிவிருத்தி உதவிகள் குறித்து இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

குடாநாட்டில் தேவைகள் குறித்து அரச அதிபராலும் ஏனைய அதிகாரிகளாலும் ஜப்பானியப் பிரதிநிதிகளுக்கு இக்கலந்துரையாடலின் போது எடுத்துக்கூறப்பட்டது. கடந்த காலத்தில் குடாநாட்டில் இயங்கிவந்த அரிசி ஆலைகளை மீள இயக்குவதன் அவசியம் பற்றியும் எடுத்துக்கூறப்பட்டது. இதனால் மக்களுக்குத் தேவையான தரமான அரிசியை இங்கேயே பெற்றுக்கொள்ள முடியும் எனச் சுட்டிக் காட்டப்பட்டது.

ஸமது கடற்பிரதேசத்தில் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி மீனவர்கள் தொழிலில் ஈடுபட முடிந்தால் அதன் மூலம் பெரும் வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும் என அரச அதிபர் ஜப்பானியப்பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

நேற்றுக்காலை வருகை தந்த ஜப்பானியக்குழுவினர் காலை 10 மணியளவில் யாழ்.வணிகர்கழகப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியதுடன் பிற்பகல் 3 மணியளவில் கைத்தொழில் வணிகர் மன்றப்பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடினர்.

இக்குழுவில் ஜப்பானிய தூதரகத்தின் பொருளாதார, வர்த்தக விவகாரங்களுக்கான 2ஆவது செயலாளர் ஹந்சுயோ இகுச்சி, ஜப்பானிய அபிவிருத்திக்கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதி சிகுச்சிடச்னியா, ஜப்பானிய பல்கலைக்கழக சமூக விஞ்ஞான விரிவுரையாளர் கிசாசி நக்கமுறா, பொருளியற்பீட விரிவுரையாளர் கிடிகிசோ, வெளிவிவகார அமைச்சின் அபிவிருத்திக்கூட்டுத்தாபனப் பணியாளர் டொட்சுயாசி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். (ஒ-10-8)

வங்கிக்குள் புகுந்து கொள்ளை!

கொழும்பு,பெப்.22

ஹிரிதும பொலீஸ் பிரிவிலுள்ள தவலம இலங்கை வங்கிக் கிளை நேற்றுக்காலை ஆயுதமேந்திய கொள்ளைக் கோஷ்டி ஒன்றினால் கொள்ளையடிக்கப்பட்டது.

காலை 9 மணிக்கும் 9.30 மணிக்கு மிடைப்பட்ட நேரத்தில் இக் கொள்ளை நடந்திருப்பதாக ஹிரிதும பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

லொறியொன்றில் வந்த ஆயுதமேந்திய சிலர் வங்கிக்குள் புகுந்து, துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு வங்கி ஊழியர்களைப் பயமுறுத்தி கொள்ளையிட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. கொள்ளை நடந்த பொழுது ஒரு சில ஊழியர்களே வங்கிக்குள் இருந்தனர் எனவும் கூறப்பட்டது.

கொள்ளையரைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகளில் ஹிரிதும பொலீஸார் ஈடுபட்டிருக்கின்றனர். (ஒ)

யாழ். மாவட்ட பாடசாலைகளில் சமாதான தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.22

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஓராண்டு நிறைவடைவதையொட்டி நேற்று யாழ். மாவட்டப் பாடசாலைகளில் சமாதான நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு பாடசாலைகளில் தேசியக்கொடி, பாடசாலைக்கொடி என்பன ஏற்றப்பட்டன. அதனைத் தொடர்ந்து பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன. அத்துடன் விசேட உரைகளும் இடம்பெற்றன.

நேற்றைய தினம் அரசினால் சமாதான நாளாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருந்தது. இதனால் நேற்று பாடசாலைகளில் சமாதானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வுகளை நடத்துமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருந்தது.(ஒ-30-51-117-175)

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel IBM hp Mercury PROLINK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077-7308417
MPAQ COMPUTERS

SHARP
உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2225150
Browns

ASIAN COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

கென்ய ஆட்டமும் முக்கியமானதே!

ஜெயசூரிய கருத்து

நைரோபி,பெப்.22

கென்யாவுடனான ஆட்டத்தை நாம் இலகுவானதாக எடுத்துக்கொள்ளப் போவதில்லை என்று இலங்கை கிரிக்கெட் அணித் தலைவர் சனத் ஜெயசூரிய நைரோபியில் வைத்துத் தெரிவித்தார்.

"நாம் இதுவரை அடைந்த வெற்றிகள் குறித்து திருப்திப்படப் போவதில்லை. மேலும், கென்யா தன் சொந்த நாட்டில் தனக்குப் புழக்கப்பட்ட இடத்தில் ஆடுகின்றது. எனவே நாம் மிகக் கவனமாகவே இருப்போம். 1999இல் நாங்கள் அவர்களை வென்றுள்ளோம். தொடர்ந்தும் அதைச் செய்ய நாம் விரும்புகிறோம்" - என்றார் ஜயசூரிய.

கென்யா சென்று சேர்ந்த இலங்கை அணித் தலைவர்

"கடந்த ஆட்டங்களில் எங்களுடைய திறன் குறித்து நான் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன். குறிப்பாக நியூஸிலாந்துக்கெதிராகப் பெற்ற வெற்றி பெரும் உற்சாகத்தைக் கொடுத்த ஒன்று. அத்துடன் முக்கியமானதும் ஆனாலும் எமது நடுவரிசைத் துடுப்பாட்டம் குறித்து நாம் அதிகம் கவனம் செலுத்த வேண்டியுள்ளோம். கென்யாவை வெல்வது எமக்குத் (10ஆம் பக்கம் பார்க்க)

யார் வெல்வார் இன்று?

கிரிக்கெட் உலகக்கிண்ணப் போட்டித் தொடரில் இன்று நடைபெறும் இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டி இரு அணிகளுக்கும் முக்கிய ஆட்டம்.

அடுத்தகட்டப் போட்டியான 'சுப்பர் சிக்ஸ்'ற்கு செல்வதற்கு இந்த ஆட்டம் இரு அணிகளுக்குமே அவசியமானது. இன்றைய ஆட்டம் பலப் பரீட்சைக்குரியதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

எஸிம்பாப்வேயுடனான போட்டியில் பங்குபற்றாது அடம்பிடித்து அநியாயமாக 4 புள்ளிகளை சிம்பாப்வேக்கு தாரைவார்த்துக் கொடுத்த இங்கிலாந்திற்கு இந்த ஆட்டம் மிக முக்கியமானது.

'ஏ' பிரிவில் உள்ள அணிகளில் 'ஆஸ்திரேலியா' 'சுப்பர் சிக்ஸ்'க்கு தகுதி பெறுவது நிச்சயமாகிவிட்டது. ஏனைய இரு அணிகள் எவை என்பது பற்றி இங்கிலாந்து, இந்தியா, ஸிம்பாப்வே மற்றும் பாகிஸ்தான் ஆகியவற்றுக்கிடையில் பலத்த போட்டி நிலவுகின்றது.

அதிலும் ஸிம்பாப்வே, இந்தியா மற்றும் இங்கிலாந்து என்பன தலா மூன்று ஆட்டங்களில் பங்குபற்றி 8

புள்ளிகளைப் பெற்று சமநிலையில் உள்ளன.

எனவே, இங்கிலாந்து அணி வெல் (10ஆம் பக்கம் பார்க்க)

500ஆவது விக்கெட்டை நெருங்குகிறார் அக்ரம்

லாகூர்,பெப்.22

பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் வஸீம் அக்ரம் ஒருநாள் போட்டிகளில் தனது 500 ஆவது விக்கெட்டை இன்று வீழ்த்துவார் என எதிர்பார்க்கப் படுகிறது.

36 வயதான அக்ரம், இதுவரை 352 போட்டிகளில் 498 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். சராசரி 23.50 ஆகும் 17 தடவை 4 இற்கு மேற்பட்ட விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார் அவர்.

இங்கிலாந்தின் லங்காஷயர் அணியில் விளையாடியவர் அக்ரம். இவ்வணி வீரரான அன்ரூ பிளின்டொவ்வை ஆட்டமிழக்கச் செய்வதன் மூலம், தனது 500 ஆவது விக்கெட்டை கைப்பற்றுவதற்கும் அக்ரம் விரும்புகிறார்.

அக்ரம்

"பிளின்டொவ் எனது நண்பர்களில் ஒருவரும் லங்காஷயர் அணி சகாவும் ஆவார். 500 ஆவது விக்கெட்டாக அவரை வீழ்த்துவது சிறப்பானது" - இவ்வாறு அக்ரம் கூறியுள்ளார். "விவியன் ரிச்சட்ஸ், மார்ட்டின் (10ஆம் பக்கம் பார்க்க)

தென்னாபிரிக்க அணியின் கனவு கலையவில்லை!

ஷோன் பொலக் தெரிவிப்பு

கேப்டவுன்,பெப்.22

தென்னாபிரிக்க அணியின் உலகக் கிண்ணக் கனவு இன்னமும் உயிர்ப்புடனேயே இருக்கிறது என்று அணித் தலைவர் ஷோன் பொலக் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

பொலக்கின் தலைமை குறித்து கடும் வாதப் பிரதிவாதங்கள் எழுந்து வரும் நிலையில், அவரது இந்த நம் (10ஆம் பக்கம் பார்க்க)

SHARP Action of the day

நமீபியாவுடனான ஆட்டத்தில் இங்கிலாந்து ரசிகைகளின் கலாட்டா

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ்
BROWNS ELECTORINICS
Browns

புள்ளிகளை இழந்தது நியூஸிலாந்து அணி!

நியூஸிலாந்து அணியுடனான போட்டிக்குரிய வெற்றிப் புள்ளிகள் கென்ய அணிக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஐ.சி.சியின் நிறைவேற்றுச்சபை இத்தீர்மானத்தை அறிவித்தது.

நியூஸிலாந்து - கென்ய அணிகளுக்கிடையிலான போட்டி நேற்று கென்யாவில் நடைபெறவிருந்தது. ஆனால், பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக கென்யாவுக்குச் செல்வதற்கு நியூஸிலாந்து மறுப்புத் தெரிவித்தது. இப்போட்டியை தென்னாபிரிக்காவுக்கு மாற்றுமாறும் ஐ.சி.சியிடம் நியூஸிலாந்து கிரிக்கெட் சபை கோரியது.

இக்கோரிக்கையை ஐ.சி.சி. நிறைவேற்றுச்சபை ஆராய்ந்தது. அதன்பின் மேற்படி கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகவும் போட்டிக்குரிய 4 புள்ளிகளும் கென்யாவுக்கு வழங்கப்படுவதாகவும் ஐ.சி.சி. அறிவித்தது -

இரவு விடுதிக்கு அருகில் நியூஸி. வீரர்கள் அடிதடி!


கெய்ன்ஸ்

டேர்பன்,பெப்.22

நியூஸிலாந்து கிரிக்கெட் அணி வீரர்களுக்கும் வேறு சிலரும் இரவு விடுதியொன்றுக்கு வெளியே அடிதடியில் ஈடுபட்டனர் என அறிவிக்கப்படுகிறது.

தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் வியாழனன்று இரவு இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

சகலதுறை வீரர் கிறிஸ் கெய்ன்ஸ் மீது பின்னாலிருந்து விடப்பட்ட குத்தொன்றினால் கீழே விழுந்தார். இதனையடுத்து அணியின் ஏனைய வீரர்கள் தாக்குதலில் ஈடுபட்டோருடன் மல்லுக்கட்டினர்.

இதையடுத்து அணியின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த ஆயுதந்தாங்கிய பாதுகாப்பு அதிகாரிகள் வீரர்களை விலக்கி, கார்களுக்குள் திணித்து ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றனர்.

தாக்குதல் காரணமாக கிறிஸ் கெய்ஸின் வாயில் காயம் ஏற்பட்டுள்ளது. எனினும் இந்த மோதல் சம்பவம் குறித்து பொலீஸாருக்கு அறிவிக் (10ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை வீரர் சமிந்தவாஸ் முன்னணியில்

கேப்டவுன்,பெப்.22

கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம்வரை நடைபெற்ற ஆட்டங்களில் இலங்கை வீரர் சமிந்தவாஸ் ஆகக் கூடுதலான

விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். அவர் 3 போட்டிகளில் 9 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். வஸிம் அக் (10ஆம் பக்கம் பார்க்க)

ஷேன் வோர்ன் விவகாரத்தில் தலையிட அதிகாரமில்லை!

சிட்னி,பெப்.22

ஆஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் மீதான, தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தை அருந்தியதான குற்றச்சாட்டு விடயத்தில் தாம் தலையிடுவதற்கு அதிகாரம் இல்லை என ஐ.சி.சி. நேற்று அறிவித்தது. ஷேன் வோர்ன் மீதான விசாரணை நேற்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஐ.சி.சி. பேச்சாளர் ஒருவர் இது தொடர்பாக கூறுகையில்,

உலகக் கிண்ணப் போட்டிகள் ஆரம்பமாகும் முன்னர் ஆஸ்திரேலிய விளையாட்டுத்துறை, ஊக்கமருந்து முகவரகத்தினால் இச்சோதனை நடத்தப்பட்டது. இதனால் ஷேன்வோர்ன் மீதான ஆஸி.கிரிக்கெட் சபையின் விசாரணை முடிவு கிடைக்கும் வரை ஐ.சி.சி. இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளமுடியாது என்றார்.

ஷேன்வோர்ன் விடயத்தில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை மேற்கொண்ட நடவடிக்கைகளை ஐ.சி.சி. பாராட்டியுள்ளது.

இதுபற்றி உடனடியாக எமக்கு அறிவித்ததுடன், வோர்னை சுற்றுப் போட்டியிலிருந்தும் நீக்கியது. இந்த நடவடிக்கைகளை ஐ.சி.சி. பாராட்டுகிறது. இவ்வாறு ஐ.சி.சி. பேச்சாளர் கூறினார். (ம-5)

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம்.
கொட்டாஞ்சேனை - ரத்மலானை - கொட்டாஞ்சேனை
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
1ஈ, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே: 021-2225408

என்றென்றும் தரம் அது நிரந்தரம்
10 YEARS WARRANTY Japanese Technology
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

வீட்டுத்திட்டத்தில் கூரை ஓடுகள் திருட்டு

தென்மராட்சி, பெப்.22

மந்துவில் கிழக்கு வேரக்காடுப் பகுதியிலுள்ள 50 வீட்டுத்திட்டத்தில மக்கள் குடியிருக்காத வீடுகளின் கூரை ஓடுகள், மரங்கள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வீட்டின் உரிமையாளர்கள், இடம்பெயர்வின் பின்னர் இன்னமும் மீளக்குடியமராததால் இப்பொருள்கள் திருடர்களின் கைவரிசைக்கு இலக்காவதாகவும், இதுவரை 35 வீடுகளின் கூரைகள் அகற்றப்பட்டுள்ளதாகவும் இப் பகுதி மக்கள் தெரிவித்தனர்(எ-117)

சமுர்த்தி வங்கிச் சங்கம் இன்று இணுவிலில் திறப்பு

வலிகாமம்தெற்கு,பெப்.22

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்கம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு கே.கே.எஸ். வீதி, இணுவிலில் திறந்து வைக்கப்படவுள்ளது.

உதவிப் பிரதேச செயலர் எஸ். ஆர்.ஜெயப்பிரகாசம் தலைமையில் நடைபெற உள்ள இந்நிகழ்வில் யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் ந. சிவபாதசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சுன்னாகம் இலங்கை வங்கி உதவி முகாமையாளர் எஸ். நாகரத்தினம், உடுவில் கோட்ட அரசியற்றுறை பொறுப்பாளர் ஐரமணன், பதில் உதவி பிரதேச செயலர் த.தேவராஜன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஆர்.ரகுநாதன், கணக்காளர் ஜெ. எலிசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.(எ-152)

காணி உறுதிகளைப் பெற்றுக்கொள்ளவும்

காங்கேசன்துறையைச் சேர்ந்த சட்டத்தரணி அ.குமரகுருவிடம் பதிவுசெய்யப்பட்ட காணி உறுதிகள் யாவும் அவரது மகன் சட்டத்தரணி கு.செல்வேந்திரனால் வழங்கப்பட இருக்கின்றன. நாளையும், நாளை மறுதினமும் குறும்பன், ஏழாலை மேற்கு ஏழாலையிலுள்ள முன்னாள் அதிபர் சு.தளையசிங்கம் இல்லத்தில் வைத்து இக்காணி உறுதிகள் வழங்கப்பட இருக்கின்றன. உரியவர்கள் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

கு.செல்வேந்திரன்
(சட்டத்தரணி)

(14794)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 18-02-1940

இறப்பு 26-01-2003

அமரர் வேலாயுதம் பாலகிருஷ்ணன்

வியாபாரிமூலை, பருத்தித்துறை.

திதி : 23.02.2003

இராமநாதன் வீதி, திருநெல்வேலியிலுள்ள ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் இறைதொண்டு செய்த அமரர் வேலாயுதம் பாலகிருஷ்ணனின் நினைவாக 24.02.2003 (திங்கட்கிழமை) வியாபாரிமூலையிலுள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
திருமதி மகேஸ்வரி சிவகுரு
(சகோதரி)

வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

(14701)

யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் புதிய விளையாட்டு மைதான திறப்பு விழா பான்ட் வாத்திய ஆரம்ப விழா இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு - 2003

காலம் : இன்று(2003-02-22) சனிக்கிழமை பி.ப. 2.30 மணி
இடம் : வித்தியாலய மைதானம்
தலைவர்: திரு.ச.சத்தியவரதன் (அதிபர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.

(14779)

மரண அறிவித்தல்

திருமதி மேரி திரேசா தம்பிரட்ணம்

வசாவிளான் உத்தரிய மாதா கோயில் பங்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பிரான்ஸில் வசித்தவருமான, திருமதி மேரி திரேசா தம்பிரட்ணம் அவர்கள் 19.02.2003 புதன்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் ராஜன் (பிரான்ஸ்), றெக்ஸ் (பிரான்ஸ்), விமல் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் லதா (பிரான்ஸ்), மங்களா (பிரான்ஸ்), நிசாந்தா (கொழும்பு) ஆகியோரின் அருமை மாமியாரும் சோனியா (பிரான்ஸ்), நத்தானியேல் (பிரான்ஸ்), சோபி (பிரான்ஸ்) ஆகியோரின் நேசமிகு பேர்த்தியும் மரியாம்பிள்ளை, இம்மானுவேல் வேளாயுதம், மேரி யோசப்பின் பேதுருப்பிள்ளை, அருட்சகோதரி கொண்சிலியா (திருச்சிலுவை கன்னியாசபை), காலஞ்சென்ற செபரட்ணம், அருட்சகோதரி மரியா (திருச்சிலுவை கன்னியர்சபை), லூட்ஸ் விமலநாதன், றுபி தங்கராஜ் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
திரு.விமல்
No.331 690 65541 (சி-26638)

தகவல்:
திருமதி நிசாந்தா விமல்.

உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

தினம் ஒரு பரிசு - 15

நாளை (23.02.2003) இடம்பெறவுள்ள இந்தியா - நமீபியா ஆட்டத்தில் சச்சின் டென்டுல்கர் சதமடிப்பாரா?

முழுப்பெயர் : .....
முகவரி : .....
அ.அட்டை எண்: .....

இக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (23.02.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 15, உதயன் பண்மனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

Super Six பரிசுகள்

இம்முறை சுப்பர் சிக்ஸ் பிரிவுக்குள் நுழையக்கூடிய அணிகள் எவை?

1. ..... 2. .....
3. ..... 4. .....
5. ..... 6. .....

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முடிவு திகதி: பெப்ரவரி 28

முழுப்பெயர் : .....
முகவரி : .....
அ.அட்டை எண்: .....

முதற் பரிசு
மைக்கிறோ பிசி தரும்
கணனி

2ஆம் பரிசு
சிங்கர் நிறுவனம் தரும்
தொலைக்காட்சி

விசேட பரிசுகள்
அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டின்
கூப்பன்கள்

SuperSix பரிசு
லுமாலா நிறுவனம் தரும்
சைக்கிள்கள்

3ஆம் பரிசு
ஷார்ப் நிறுவனம் தரும்
வானொலி

ஆறுதல் பரிசுகள்
எக்ஸ்போ நிறுவனம் தரும்
விமான
ரிக்கெட்டுக்கள்

தினம் தினம் ஒரு பரிசு
ஏசியன் நிறுவனம் தரும்
கழிவுக் கூப்பன்கள்

உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

மாபெரும் இறுதிப் போட்டி

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது? (.....)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்? (.....)

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முடிவு திகதி: மார்ச் 15

முழுப்பெயர் : .....
முகவரி : .....
அ.அட்டை எண்: .....

தினம் தினம் ஒரு பரிசு:
ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம் வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

விசேட பரிசுக் கூப்பன்கள்:
முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருண்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

Super Six பரிசுகள்:
Super Six இற்கான சரியான அணிகளைத் தெரிவுசெய்யும் மூவருக்கு லுமாலா நிறுவனம் வழங்கும் புத்தம் புதிய சைக்கிள்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி இம்மாதம் 28ஆகும்.

மாபெரும் இறுதிப் போட்டி:
இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

விதிகள்:-
ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

உதயன்

ஊருக்கு உபதேசம்

அரசும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகின்றது.

நமது நாட்டில் போர் மேகம் சற்றுக் கலைந்து, சமாதான சூரியனின் அமைதி ஒளிக்கீற்று ஓரளவில் தென்படத் தொடங்கியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் சர்வதேச ரீதியில் யுத்த மேகம் கவியத் தொடங்கியிருக்கின்றது.

ஈராக்மீது பெரும் போர் தொடுக்க அமெரிக்கா செய்து வரும் முஸ்தீபு மனிதப் பேரவலத்துக்கு - பேரழிவுக்கு - வழிகோலப் போகின்றது என மனிதாபிமான ஆர்வலர்கள் அஞ்சுகின்றனர். அமெரிக்காவின் இந்த யுத்த கர்ஜனைக்கு எதிராக முழு உலக மக்களுமே கிளர்ந்து நிற்கின்றனர்.

அதேசமயம், யுத்தப் பேரழிவால் அவலங்களை- அனர்த்தங்களை - அழிவுகளை - மட்டும் சந்தித்து வந்த நமது நாட்டில் கடந்த ஒரு வருட காலமாக நிம்மதிப் பெருமூச்சு.

அந்த அமைதிநிலை உருவாகி இன்றோடு ஒரு வருடம் பூர்த்தியாகின்றது.

இந்தச் சூழ்நிலையில்தான் இங்கும் சர்வதேச மட்டத்திலும் அரசியல்வாதிகளின் - தலைவர்களின் - இரட்டைவேடப் போக்கு மக்களுக்குத் தெளிவாக அம்பலமாகத் தொடங்கியிருக்கின்றது.

இலங்கைத் தமிழர்களின் வாழ்வியலுக்கான- இருப்புக்கான - உரிமைக்கான - போராட்டத்தை, இலங்கை அரசும் பெரும்பான்மைச் சிங்களவர்களும் சில உலக நாடுகளும் 'பயங்கரவாதம்' என்று வர்ணிக்கின்றன. என்றாலும், இலங்கைத் தமிழர்களுக்கு அடிப்படைப் பிரச்சினைகள், உரிமைப் பிரச்சினைகள் இருக்கின்றன என்றும், அவை நீதியான முறையில் தீர்க்கப்பட்டால் இப்போது விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கும் 'பயங்கரவாதப் பிரச்சினை' தீர்ந்து விடும் என்றும் சர்வதேச சமூகம் உட்பட அனைத்துத் தரப்பினரும் ஒப்புக்கொண்டுள்ளனர்; திரும்பத்திரும்ப அப்படியே கூறியும் வருகின்றனர்.

இலங்கை அரசும்கூட அதனை ஏற்றுக்கொண்டுள்ளது. அந்த அடிப்படையில்தான் தமிழர் தரப்போடு அமைதிப் பேச்சுக்களை இலங்கை அரசு ஆரம்பித்தும் இருக்கின்றது.

ஆக, இலங்கையின் இனப்பிரச்சினையைப் பயங்கரவாதப் பூச்சாண்டியாகக் காட்டி, அதற்குப் பேச்சுமூலம் தீர்வுகாண வற்புறுத்தும் அமெரிக்காவும் சர்வதேச சமூகமும் ஈராக் விடயத்தில் வேறுவிதமாகத் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றன.

மனித குலத்திற்குப் பேரழிவைத் தரும் ஆயுதங்களை ஈராக் வைத்திருப்பதாகக் குற்றஞ்சுமத்தும் அமெரிக்கா, அதை இதுவரை சர்வதேச சமூகத்துக்கு நிரூபிக்கத் தவறிவிட்டது. ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்களுக்கு ஈராக் கதவைத் திறந்துவிட்டு மாதங்கள் கடந்து விட்டன. ஆனால், காத்திரமான சாட்சியங்களையோ தகவல்களையோ ஆதாரங்களையோ பரிசோதகர்களால் காட்டமுடியவில்லை.

அப்படியிருந்தும், ஈராக்கைப் பயங்கரவாத நாடாகச் சித்திரித்து, அதன்மீது கொடூரப் போரைத் தொடுக்க மார்தட்டி நிற்கிறது அமெரிக்கா. உலக நாடுகள் பலவும் அதற்கு ஒத்து ஊதுகின்றன.

ஜப்பான் மீது பேரழிவு தரும் அணுகுண்டுகளை வீசி ஒரு கணத்தில் பல லட்சம் பேரையும் பல நகரங்களையும் பூண்டோடு அழித்த அமெரிக்கா, இன்று மனிதப் பேரழிவுக்கு எதிரான ஆயுதங்களை ஈராக் வைத்திருப்பதாகக் கூறிக்கொண்டு, அந்த ஆயுதங்களை ஒழிக்கப் புறப்பட்டிருப்பது விந்தையிலும் விந்தை.

இலங்கையில் உள்ளது 'பயங்கரவாதப் பிரச்சினை' தான். அதற்கு பேச்சுமூலம் - அமைதி வழியில் - தீர்வு காணுங்கள் என்று கூறும் அமெரிக்காவும் அதன் நேச சக்திகளும் ஈராக் விடயத்தில் அமைதி வழியை ஒதுக்கி நிற்கின்றன.

அதேபோல, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - பேச்சுமூலம் - தீர்வுகாண இலங்கை அரசு முயற்சிப்பதை ஜே.வி.பி., சிஹல உறுமய மற்றும் அவற்றுக்கு ஆதரவு வழங்கும் சிங்களப் பேரினவாத சக்திகள் ஆகியவை கடுமையாக எதிர்க்கின்றன. தமிழர் தரப்பை யுத்தம் புரிந்து அடக்குங்கள் என்று சன்னதத்தோடு நிற்கின்றன அந்தத் தரப்புகள்.

ஆனால், பயங்கரவாதத்தை ஒடுக்குகிறேன் என்ற கோஷத்தோடு ஈராக் மீது அமெரிக்கா தொடுக்க முயற்சிக்கும் பேரழிவு யுத்தத்தை அவை முழுமூச்சாக எதிர்க்கின்றன.

இப்படி சர்வதேச ரீதியில் அமெரிக்காவும் மற்றும் அதன் அணி சேர்ந்த பிரிட்டன் போன்ற நாடுகளும் உள்ளூரில் ஜே.வி.பி., சிஹல உறுமய போன்ற பேரினவாத சக்திகளும் இரட்டை வேடம் போடுவது அம்பலமாகி வருகின்றது.

அவற்றைப் பொறுத்தவரை 'ஊருக்குத்தான் உபதேசம்; உனக்கில்லையடி' என்பதுதான் அவற்றின் நிலைப்பாடு போலும்!

பாடசாலை மாணவர்களிடையே

அழகியல் கல்வியை மேம்படுத்த போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் அழகியல் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் 'அழகெழில்' என்னும் போட்டி நிகழ்ச்சி நடத்தப்படவுள்ளது.

யாழ். கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றத்தினர் இந்தப் போட்டிக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

சித்திரம், நடனம், சங்கீதம், நாடகம் ஆகிய போட்டிகள் மாணவர் மத்தியில் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் சுயமாக தயாரித்த விண்ணப்பங்களை எதிர்வரும் மார்ச் 10ஆம் திகதிக்கு முன்பாக 'நுண்கலை மன்றம், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான மேலதிக விவரங்களை 0777034745 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

திருவீதி மான்மியம்

கண்போன கிழடு பின்னே
கன்னியோ அதற்கு முன்னே
இன்ப நற்குழந்தை தன்னை
இதனிடை சொருகிக் கொண்டு
அன்பு சேர் மனையாள் தன்னை
அதன் முன்னே இருத்திகொண்டு
முன்புறம் முழுதுமாக
முட்டையாய் புத்தகங்கள் ஏற்றி
பண்புசேர் பரமசாமி மாஸ்டர்
பள்ளியை சென்றடைந்து
எண்ணரும் வீதியொழுங்கு பற்றி
எடுத்துரைத்தாற் பேருரைய தொன்று.

- விகடகவி.

உதவி வழங்கும் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும்

உடனடி மனிதாபிமானத் திட்டம்; கிளிநொச்சியில் விரிவாக ஆராய்வு

எதிர்வரும் ஜுன் மாதம் ரோக்கியோவில் இடம்பெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வடக்கு - கிழக்கு உடனடி மனிதாபிமானத் திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள 'சிரான்' அலுவலகத்தின் 'சிரான்' அமைப்பின் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் இத்திட்டம் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் பிரதமரின் சர்வதேச உதவிகளுக்கான ஆலோசகர் எஸ்.நாராயணசாமி, வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன், எட்டு மாவட்டங்களின் அரச அதிபர்கள், மாகாண மத்திய அரசுகளின் உயர் மட்ட அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்கள் என சுமார் எண்பதுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

உலகவங்கி, ஆசிய அபிவிருத்திவங்கி, ஐ.நா. அபிவிருத்தி திட்டம் ஆகியவற்றின் அதிகாரிகள் அங்கம் வகிக்கும் மதிப்பீட்டுக் குழுவினரும் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய உடனடி மனிதாபிமானத் திட்டங்கள் குறித்து அரச அதிபர்கள் எடுத்துக் கூறினர். மதிப்பீட்டுக் குழுவினர் சகல மாவட்டங்களுக்கும் நேரில் சென்று திட்டங்களை இனங்கண்டு அறிக்கை தயாரிக்க இருப்பதாகவும் - அரசும் விடுதலைப் புலிகளும் தனித்தனி அறிக்கையை மதிப்பீட்டுக் குழுவுக்கு சமர்ப்பிக்கவிருப்பதாகவும் - கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.(எ-3-8-ரி)

கொழும்பில் ரயில் மோதி நுணாவில்வாசி மரணம்!

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் ரயில் மோதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கொழும்பு, வெள்ளவத்தை, பீச் றோட் பகுதியில் இடம்பெற்ற இந்த ரயில் விபத்தில் கைதடி - நுணாவில் என்ற முகவரியைச் சேர்ந்த இராஜரட்ணம் ஜெயச்சந்திரன்(வயது 40) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

தனது சொந்த வசிப்பிடத்திலிருந்து இடம்பெயர்ந்து கொழும்பில் குடும்பத்துடன் வசித்துவரும் இவர், சம்பவதினத்தன்று வெள்ளவத்தை, பீச்றோட் பகுதியிலுள்ள ரயில் தண்டவாளத்தில் காலை 7.30 மணியளவில் நடந்து சென்றுகொண்டிருந்த போது பின்னால் வந்த ரயில் இவரை மோதியதாகக் கூறப்பட்டது. (எ-5)

நவாலி சந்தைப் பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு

நவாலி பிரசாத் சந்தைப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடு நிறைந்து காணப்படுவதால் இப்பிரதேசத்தில் பல வகையான தொற்று நோய்கள் பரவக்கூடிய ஏதுநிலை உருவாகிவருவதாக பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இச்சந்தையில் வெட்டப்படும் மீன்களின் கழிவுகளை நாய்கள் இழுத்துச் சென்று வீதிகளிலும், சந்தையின் ஏனைய பகுதிகளிலும் விட்டுச் சென்றுவிடுகின்றன. இதனால், அப்பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுகின்றது.

இதனால், வீதிகளில் செல்வோர் மூக்கைப் பொத்திக்கொண்டு செல்லவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், இப்பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

எனவே, கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மானிப்பாய் பிரதேச சபையிடம் நவாலிகிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.(எ-100)

ஆசிரியர் நியமனம், பதவி உயர்வுகளில் இனரீதியான பாகுபாடுகள் ஏராளம்!

குற்றஞ்சுமத்துகிறது தமிழர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம்,பெப்.22

தமிழ் ஆசிரியர் நியமனங்களிலும் பதவி உயர்வுகளிலும் இனரீதியான பாகுபாடு காட்டப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

ஆசிரியர் சங்க பொதுச் செயலர் தமகாசிவம் அனுப்பிவைத்துள்ள அம்மகஜரில், இப்பாகுபாடுகளுக்கு கல்விச் சேவைகள் ஆணைக்குழுவின் முன்னாள் செயலரும், தற்போதைய பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் மேலதிக செயலருமான ரி.எம்.எம். தென்னக்கோனே காரணமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணைகளை நடத்தி பாதிக்கப்பட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் ஆசிரியர்களுக்கு நீதி கிடைக்க ஆவன செய்யப்படவேண்டும் என்றும் - அதில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய குற்றச்சாட்டுக்களாவன:-

★ 1999ஆம் ஆண்டில் ஆயிரத்து 650 தமிழ் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவேண்டிய நியமனங்கள் இன்றுவரை வழங்கப்படவில்லை.

★ 2000ஆம் ஆண்டில் 3 ஆயிரம் தமிழ் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவேண்டிய நியமனங்கள் இன்றுவரை வழங்கப்படவில்லை.

★ 2000ஆம், 2001ஆம் ஆண்டுகளில் தமிழ் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவேண்டிய நியமனங்கள் இன்றுவரை வழங்கப்படவில்லை.

★ அதிபர் சேவை பதவி உயர்வுகளில் இனவிகிதாசார முறை பேணப்படும் என வர்த்தமானிமூலம் அறிவிக்கப்பட்டது. ஆனால், போட்டிப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு, தமிழ் ஆசிரியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

அதிபர் சேவை வகுப்பு Iஇல் வழங்கப்பட்ட 200 நியமனங்களில் 198 சிங்கள ஆசிரியர்களும் ஒரு தமிழ் மற்றும் ஒரு முஸ்லிம் ஆசிரியர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். அதிபர் சேவை வகுப்பு IIஇல் வழங்கப்பட்ட 500 நியமனங்களில் 470 சிங்கள ஆசிரியர்களும் 19 தமிழ் மற்றும் 11 முஸ்லிம் ஆசிரியர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அதிபர் சேவை வகுப்பு IIIஇல் வழங்கப்பட்ட 500 நியமனங்களில் 487 சிங்கள ஆசிரியர்களும் 13 தமிழ் மற்றும் முஸ்லிம் ஆசிரியர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

★ வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள கல்வி நிர்வாக சேவை வெற்றிடங்களை நிரப்ப விசேட பரீட்சையொன்று கடந்த 1999ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நடத்தப்பட்டது. இதற்குரிய பெறுபேறுகளை பரீட்சை ஆணையாளர் அனுப்பியபோதிலும், அதனை இரத்துச் செய்து பதவி உயர்வு நியமனங்களை வழங்கவில்லை.

★ கடந்த 2000ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதமளவில் பதில் உதவிக் கல்விப் பணிப்பாளர்களாகக் கடமையாற்றிய வடக்கு - கிழக்குக்கு அப்பால் உள்ள அனைத்து சிங்கள ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. ஆயினும், வடக்கு - கிழக்கில் சேவையாற்றிய சுமார் 375 தமிழ் மற்றும் முஸ்லிம் உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு இன்றுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

இவையாவும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இனப்பாகுபாட்டு நடவடிக்கை எனச் சங்கம் கருதுவதாகவும் -

இது தொடர்பாக ஆராய்ந்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் - அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9-5)

நாளை

மாசி 11
ஞாயிற்றுக்கிழமை
(23.02.2003)
திதி : ஸப்தமி
பிற்பகல் 3.29வரை.
நட்சத்திரம்: விசாகம்
பிற்பகல் 1.32வரை.
சுபநேரம் : 9.31 - 11.01
ராகுகாலம் : 5.01 - 6.31
(பழைய நேரப்படி)

உதய வாக்கு

ஒரு குழந்தைக்குரிய சிறந்த இரு நூல்கள், உத்தமத் தாயின் வதனமும் வாழ்க்கையும் தாம்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
நாவற்குழி வீடமைப்புத் திட்டத்திலுள்ள வீடுகள் விற்பனை செய்தல்

மேற்படி வீடமைப்புத் திட்டத்திலுள்ள கீழ் குறிப்பிடப்படும் நிலையிலுள்ள வீடுகளை விற்பனை செய்வதற்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

வீட்டின் விவரம்:

01. இத்திட்டத்திலுள்ள மொத்த வீடுகள் - 298
02. ஒவ்வொரு வீட்டினதும் தரைப்பரப்பளவு - 800 சதுர அடி

வீடுகளின் தற்போதைய நிலையும் அவற்றிற்கான பெறுமதியும்.

01. கூரையுடனான வீடுகள் - 75,000.00
02. கூரைகளற்ற வளைமட்டத்துடனான வீடுகள் - 50,000.00
03. அத்திபாரத்துடனான வீடுகள் - 25,000.00

விண்ணப்பதாரிகளிற்கான தகைமைகள்:

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பதாரி நடுத்தர வருமானமுடையவராக இருத்தல் வேண்டும்.
03. விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது குடும்ப அங்கத்தவருக்கோ யாழ்.மாவட்டத்தில் சொந்த வீடுகள் இல்லாதிருத்தல் வேண்டும்.
04. வீட்டை வாங்கும்போது வீட்டின் பெறுமதியில 25% ஒரே தடவையாக செலுத்தல் வேண்டும். (25% இற்கு மேலான பெறுமதியை முதற் கட்டணமாகச் செலுத்தக்கூடியவரிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.)
05. விண்ணப்பதாரி வீடமைப்புத் திணைக்களத்திலோ அல்லது வீடமைப்பு அதிகார சபையிலோ வீடுகளைப் பெற்றுக்கொள்ளவில்லையென சத்தியக் கடதாசிமூலம் ஒப்புவித்தல் வேண்டும்.
06. விண்ணப்பங்களின் இறுதித் தெரிவுகள் அரசாங்க அதிபரினால் நியமிக்கப்பட்ட குழுவினராலேயே தெரிவுசெய்யப்படும்.
07. இதற்கான விண்ணப்பங்களை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்டக் காரியாலயத்தில் ரூபா 30/= செலுத்திப் பெற்றுக்கொள்ளவும்.
08. விண்ணப்பங்கள் 2003 மார்ச் மாதம் 26ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ *முகாமையாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்* என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும். விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடது மூலையில் *"நாவற்குழி வீடமைப்புத் திட்ட வீடுகளை விற்றல"* எனக் குறிப்பிடவும்.

சு.மாசிலாமணி
மாவட்ட முகாமையாளர்,
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம்.

17.02.2003 (C/26599)

'நியாப்' வேலைகள் குறித்து இருநாள் பயிற்சி

இணுவில்,பெப்.22

'நியாப்' திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் வேலைகளின் தரத்தை மேம்படுத்துவது தொடர்பாகவும், தரத்தை உறுதிசெய்வது தொடர்பாகவும் இருநாள் பயிற்சி நெறியொன்று திருநெல்வேலி விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25ஆம், 26ஆம் திகதிகளில் காலை 9.00மணிதொடக்கம் 4.30மணிவரை இப்பயிற்சி வகுப்பு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இப்பயிற்சி நெறி யாழ்.மாட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள 'நியாப்' வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்த மிகவும் அவசியமானது என்பதால் சம்பந்தப்பட்டவர்கள் இதில் தவறாது கலந்துகொள்ளவேண்டுமென 'நியாப்'பின் யாழ்.மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பயிற்சி நெறியில் பங்குபற்றுவோருக்குக் கொடுப்பனவு வழங்கப்படும்.

(எ-ரி)

வீடு விற்பனை

நல்லூர், செம்மணி வீதி, நாயன்மார் கட்டுச் சந்தி, பாரதி வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- வ.அன்பழகன்
12, பாரதி வீதி, நாயன்மார்கட்டு.
(14785) T.P.0777 - 113050

அரியசந்தர்ப்பம்
தரம் 5 புலமைப் பரீட்சை

ஞானக்குழந்தை கல்விக் கழகத்தில் ஆசிரியர் வே.அன்பழகனின் பரீட்சை எழுதவிருமும் மாணவர்கள் நாளை (23.02.2003) ஞாயிறுகலிமை காலை 8.00 மணிக்கு சமுகந்தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

நிர்வாகி,
ஞானக்குழந்தை கல்விக்கழகம்,
சிவன் வீதி, திருநெல்வேலி.
(14786)

வழுத்துகிறேன்

நீர்வை மணி
பிரம்மஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள்

நாளை, நீர்வைச் செல்லக் கதிர்காம சுவாமி கோவிலில், ஷஷ்டியப்தபூர்த்தி காணும் **நீர்வை மணி** ஐயா தம்பதியர் முருகன் திருவருளால் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு எய்தப் பிரார்த்திக்கிறேன்.

ச.லலீசன்
(ஆசிரியர்).

நீர்வேலி. (14751)

சிங்கள மொழி

வழிகாட்டல் ஆசிரியர்: திரு.மல்வான

★ புதிய வகுப்புகள் சில உடன் ஆரம்பம் *(ஆண் - பெண் இருபாலாருக்கும்)*
★ G.C.E. O/L 2003 சிங்கள மொழி வகுப்பு
சனி - ஞாயிறு பி.ப. 4-5 மணி
★ சிறுவர்களுக்கான வகுப்பு சிங்களமும், ஆங்கிலமும்
திங்கள், செவ்வாய், புதன் ஆண்டு 4,5,6,7 பி.ப. 3-4 மணி
★ பெண்களுக்கான விசேட வகுப்புகள் அரிச்சுவடி முதல்.
★ பேச்சு பழகும் வகுப்புகள்

இடம்: சிறாம்பியடி லேன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மணியம் கட்டடம், கோசி ரெஸ்ரோறன்றுக்கு அருகில்)
(14752)

இப்போது யாழ். நகரில்

இலங்கையின் முன்னணியிலுள்ள
முற்றிலும் கணனி மயப்படுத்தப்பட்ட
ASIRI HOSPITAL LTD., COLOMBO - 5 இன்
ஆய்வுகூட சேவை
எல்லாவிதமான இரத்த, சல பரிசோதனைகளும் செய்துகொள்ளலாம்.

JAFFNA MEDICAL CENTER
678, Hospital Road,
Near O.L.R. Church.
(Laboratory and Authorized Collecting Center For Asiri Hospital LTD.) (14689)

உங்களுக்குச் சமாதானம்
நற்செய்திப் பெருவிழா
2003

சுவி.மோகன் C. லாசரஸ்
(இந்தியா)

பாஸ்ரர். வின்சன்ட் சகாயநாதன்
(கனடா)

இடம் : மானிப்பாய் செல்லமுத்து மைதானம்
திகதி : பெப்ரவரி 22, 23
நேரம் : பி.ப. 4.00 மணி

அனுமதி இலவசம்

பாஸ்ரர். ஜோன்ராஜ்
(இந்தியா)

அந்தோனி
பலவருடங்களாக அசுத்த ஆவியின் பிடியிலிருந்தேன். ஜெபவேளையில் இயேசு விடுதலை தந்தார்.

பூங்கோதை
3 வருடங்களாக மார்புக் கட்டியினால் மிகவும் கஷ்டப்பட்டேன். ஜெபவேளையில் இயேசு விடுதலை தந்தார்.

ஜசா காதிர் முகம்மது
5 வருடங்களாக சிறுநீரகம் பாதிக்கப்பட்டு, சரீரமெல்லாம் வீங்கியிருந்தது. ஜெபவேளையில் இயேசு விடுதலை தந்தார்.

காலையில் விசுவாசிகளுக்கான வேதப் படிப்பு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

தொடர்புகளுக்கு:- 021 222 3653, 021 222 2930

(C/26503)

வாருங்கள்! ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளுங்கள்!!
2 நாள்களும் பெருவிழா முடிவில் பிரயாண ஒழுங்கு செய்துதரப்படும்.

SPONSORED BY: TORONTO HARVEST MISSIONARY CHURCH
96, Benshire Dr.Scarborough, ON M1H 1M5, Canada.
Tel:(416) 289-3662 Fax:(416) 289 - 2775

இலங்கைக்கு ஜப்பான் உதவி வழங்க புலிகள்மீது நிபந்தனை விதிக்கக் கோருகிறது எதிர்க்கட்சி!

பாதிக்கப்படுபவர்கள் நாட்டு மக்களே என்கிறார் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு,பெப்.22

ஜப்பான் அரசு இலங்கைக்கு வழங்கும் நிதியுதவிகளை நிறுத்த எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர். இதற்காக நிதியுதவிகளை வழங்கும் முன் புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் கைவிடவேண்டும் என்று நிபந்தனை விதிக்குமாறு அவர்கள் ஜப்பானின் விசேட தூதுவர் யகூஷி அகாஷியிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். உதவிகள் நிறுத்தப்பட்டால் பாதிக்கப்படப் போவது இந்நாட்டு மக்களே.

அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு கூறினார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்தப் பத்திரிகையாளர் மாநாடு நேற்றுமுன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற பொழுதே அமைச்சர் பீரிஸ் இவற்றைக் கூறினார்.

அமைச்சர் பீரிஸ் மேலும் கூறியதாவது:-

எந்தச் சந்தர்ப்பத்திலும் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் என்ற அச்சத்தை எதிர்க்கட்சிகள் ஏற்படுத்தியுள்ளன. இலங்கைக்கு ஜப்பான் வழங்கும் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு மூன்றாம் தரப்பான புலிகள் இயக்கத்திற்கு நிபந்தனை விதிக்கவேண்டிய அவசியமில்லை.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள நம்பிக்கை காரணமாகவே ஜப்பானின் உதவி வழங்கப்படுகின்றது. இந்த உதவி தென்பகுதி நெடுஞ்சாலை அபிவிருத்தி, சமனலவெவ நீர்மின் நிலையம், வலவே நீர்ப்பாசனத் திட்டம், திரிந்தே - தங்காலை மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி, மாத்தறை, இரத்தினபுரி வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் நாட்டின் வறுமை ஒழிப்பு என்பவற்றிற்கே பயன்படுத்தப்படும்.

நிலைமை இவ்வாறு இருக்கும் போது, ஜப்பானிய உதவியை நிறுத்தக் கோரும் எதிர்க்கட்சியின் நோக்கம் புரிகிறது. ஆனால், அவர்கள் முன்வைக்க முயற்சிக்கும் வாதம் தான் புரியவில்லை - இவ்வாறு அவர் சொன்னார். (எ)

வினாவிடைப் போட்டி நேர மாற்றம்

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தால் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் இன்று சனிக்கிழமை நடத்தப்படவுள்ள விஞ்ஞான வினாவிடை மற்றும் கட்டுரைப்போட்டிகள் முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் இன்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (ஒ)

சந்தேகநபரிடம் வாக்குமூலம் பெற அனுமதி

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய கிணற்றிலிருந்து சடலமாக மட்கப்பட்ட மாணவியின் மர்ம மரணம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரான தில்லையம்பலம் ரமணன் (வயது 21) என்பவரிடம் இருந்து மேலதிக வாக்குமூலம் பெறவேண்டும் என யாழ்.மாவட்ட நீதிவானிடம் கோப்பாய் பொலீஸார் கோரியதை அடுத்து சந்தேகநபரிடம் வாக்குமூலத்தை பெறுவதற்கு யாழ்மாவட்ட நீதிவான் அனுமதியளித்துள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து நேற்று முன்தினம் பொலீஸார் வாக்கு மூலம் பெறுவதற்கு அனுமதிக்குமாறு யாழ் சிறைச்சாலை ஆணையாளருக்கும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். சந்தேகநபர் எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஒ-8)

தையல் பயிற்சி நிலையம் திறப்பு

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களம், வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பணிமனையின் அனுசரணையுடன் மகளிருக்கான தையல் பயிற்சி நிலையம் ஒன்றை மருதங்கேணியில் ஆரம்பித்து வைத்துள்ளது.

மருதங்கேணி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எல்.எச்.ஜே.சீவரட்ணம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது. மருதங்கேணி உதவி அரச அதிபர் வியவேலாயுதபிள்ளை தையல் நிலையத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

சிறையில் நடந்த தாக்குதல்

சமயாசமய சிறைக்காவலர் தற்காலிமாக வேலைநீக்கம்

மனித உரிமைகள் ஆர்வலர் மைக்கல் இமானுவேல் பெர்னாண்டோ சிறையில் தாக்கப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக சிறைச்சாலையின் சமயாசமய சிறைக் காவலர் ஒருவர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

நீதிமன்றத்தை அவமதித்தார் என்று உயர் நீதிமன்றத்தினால் அவருக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விக்கப்பட்டிருக்கிறது.

மனித உரிமைகள் ஆர்வலர் மீதான தாக்குதலில் அந்தச் சிறைக் காவலரும் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பது விசாரணைகளில் தெரிய வந்திருப்பதையடுத்தே, தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டார் என்று சிறைத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இத்தாக்குதல் குறித்து சிறைத் திணைக்களமும், உள்துறை அமைச்சும், குற்ற விசாரணை பொலீஸாரும் தனித்தனியே விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர். (எ)

சந்தைக்கு வந்த பெண்மீது பாலியல் வல்லுறவு முயற்சி

சாவகச்சேரியில் சம்பவம்

தென்மராட்சி,பெப்.22

சந்தைக்கு வந்த பெண்மீது சனநடமாட்டம் இல்லாத பகுதியில் பாலியல் வல்லுறவு முயற்சி மேற்கொள்ளப்பட்ட சம்பவம் கடந்த புதன்கிழமை காலை சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி சந்தைக்கு வருவதற்காக சரசாலை ஊடாகவரும் பஸ்ஸை தவறவிட்டதால் கனகன்புளியடிச் சந்தியிலிருந்து நடந்து வந்துகொண்டிருந்ததாகவும்-

சனநடமாட்டம் இல்லாத பகுதியில் பற்றைக்குள் மறைந்திருந்த ஒருவர் திடீரெனப் பாய்ந்து தனது கையைப் பிடித்து பற்றை மறைவுக்கு இழுத்துச் சென்றதாகவும் - தான் கூக்குரலிட்டுக் கொண்டு வீதிக்கு ஓடிவந்த போதிலும் மீண்டும் பற்றைக்கு இழுத்துச் சென்றபோது அவ்வழியே சைக்கிளில் ஒருவர் வரவே அந்த நபர் ஓடித் தப்பியதாகவும் -

சம்பந்தப்பட்ட பெண் தெரிவித்தார்.

ஏற்கனவே இப்பகுதியில் திருடர்களும், விஷமிகளும் தனித்து வருவோரிடம் கைவரிசை காட்டுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

மண்டைதீவு பாடசாலை விரைவில் சொந்தக் கட்டடத்தில் இயங்கும்

மண்டைதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் சொந்தக் கட்டடத்தில் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளதாக மண்டைதீவுக்கான பொதுசனத் தொடர்பு அதிகாரி தயானந்த வீரசூரியா தெரிவித்தார்.

மண்டைதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் நலன்காப்புக் கழகத்தினர் விடுத்த கோரிக்கையை அடுத்து தனியார் வீடு ஒன்றில் இப்பாடசாலை முன்னர் இயங்க அனுமதிக்கப்பட்டது.

தற்பொழுது கடற்படையின் தலைமைக் கரியாலயத்தில் இருந்து 50 யார் தூரத்தில் அமைந்துள்ள பாடசாலையின் நிரந்தரக் கட்டடத்தில் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. (ஒ-88)

உரும்பிராய் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில 'அன்னை இல்லத்தில்' உள்ள சிறுவர்களுக்கு சிற்றுண்டிகளும், அப்பியாசக் கொப்பிகளும் அண்மையில் வழங்கப்பட்டன. உடுவில் இராணுவ பொறுப்பதிகாரி என்.மகேஸ் சிறுவர்களுக்கு அவற்றை வழங்குகிறார். (ஐ)

சிவராத்திரி தினத்தன்று

மறவன்புலோ ஆலயத்துக்கு பக்தர்கள் செல்ல அனுமதி

தென்மராட்சி,பெப்.22

மூன்று வருடங்களின் பின்னர் மறவன்புலோ ஸ்ரீவள்ளி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் மகா சிவராத்திரி தினப் பூஜைகளில் அடியார்கள் கலந்து கொள்ள படையினர் அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஒகஸ்ட் மாதம் தொடக்கம் இந்த ஆலயத்திற்கு பூசகரும் தர்மகர்த்தாவும் மட்டும் தினமும் சென்று பூஜை நடத்த படையினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

இப்பகுதி பொது அமைப்புகள் வடுத்த வேண்டுகோளையடுத்து எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி நடைபெறவுள்ள மகா சிவராத்திரி உற்சவ பூஜைகளுக்கு அடியார்கள் செல்ல பலாலி படையின் தலைமையக உயர் அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு ஓராண்டு பூர்த்தி:

சகல இந்து ஆலயங்களிலும் இன்று விசேட பூஜை நடத்துவதற்கு முடிவு

கொழும்பு,பெப்.22

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டு ஓராண்டு நிறைவுபெறுவதை முன்னிட்டு சகல இந்து ஆலயங்களிலும் விசேட பூஜைகள் மேற்கொள்ளுமாறு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கேட்டிருக்கிறார்.

சமாதான பூஜை நடத்துவது தொடர்பாகக் கொழும்பில் உள்ள இந்து ஆலயங்களின் சிவாச்சாரியார்கள் இந்து சமய விவகார அமைச்சில் நேற்றுமுன்தினம் கூடி ஆராய்ந்தனர்.

அமைச்சின் செயலாளர் கபரமேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இன்று நாட்டில் உள்ள சகல இந்து ஆலயங்களிலும் விசேட பூஜை நடத்தும்படி கோருவதென தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் இன்று மாலை 6.50 மணிக்கு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெறும் சமாதான தீபம் ஏற்றும் நிகழ்வில் பங்குபற்றி சமய அனுஷ்டானத்தில் ஈடுபடுவதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

இந்த சமாதான பூஜையில் சகல மதங்களையும் சேர்ந்த 11 மதகுருமார்கள் கலந்து கொண்டு தத்தமது மத அனுஷ்டானங்களில் ஈடுபடுவர்.

அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க, அமைச்சர் எல்.ஜே.எம்.லொக்குபண்டார ஆகியோர் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் தொழில் துறைகளை சார்ந்த நூறுபேர் சமாதான புறாக்களைப் பறக்கவிடுவர். (ஐ)

கசிப்பு வழக்கில் குற்றவாளிக்கு 18 மாதகால சிறைத்தண்டனை!

வலி.வடக்கு,பெப்.22

கசிப்பு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு 18 மாத கால சிறைத் தண்டனை விதித்து மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் தீர்ப்பு வழங்கினார்.

உடுவில் மேற்கு, முருகன் கோவிலடியைச் சேர்ந்த பொன்னன் தேவராசா என்பவர் 30 போத்தல் கசிப்பு, 200 போத்தல் கோடா மற்றும் கசிபு காய்ச்சுவதற்கான உபகரணங்களுடன் சுன்னாகம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டார்.

கசிப்பு உற்பத்தி விற்பனையில் ஈடுபட்ட முன் குற்றம் இவர்மீது இருப்பதாக நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து கசிப்பு வைத்திருந்தமை, கோடா வைத்திருந்தமை, கசிப்பு உற்பத்திக்கான உபகரணம் வைத்திருந்தமை ஆகிய ஒவ்வொரு குற்றத்திற்கும் தலா 6 மாதம் வீதம் 18 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதேவேளை, 30 போத்தல் கசிப்பு, 195 போத்தல் கோடா, கசிபு காய்ச்சும் உபகரணம் என்பன வைத்திருந்த குற்றத்திற்காக நாகராசா சோதிலிங்கம் என்பவருக்கும் - தலா ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இவர்கள் இருவரும் சகோதரர்களாவர்.

உடனடியாக அபராதப் பணத்தைக் கட்டமுடியாதபடியால் இருவரையும் தலா இருவர் வீதம் 40 ஆயிரம் ரூபா நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆட்பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது. (ஒ-86)

ஒத்திவைப்பு

இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவிருந்த யாழ். வர்த்தக ஊழியர் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் எஸ்.என். இராமச்சந்திரா அறிவித்துள்ளார். (எ-10)

வீடியோப் படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக்காட்சி தொடரில் பி.எஸ். நாராயணா இயக்கிய தெலுங்கு திரைப்படமான "நிமஞ்ஞனம்" 'வுமன் இன் கொன் விளிக்ட்' என்ற ஆவணத் திரைப்படமும் நாளை காலை 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளன. ஆர்வலர்கள் கலந்துகொண்டு பயன்பெறலாம் என புறநிலைப்படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் தெரிவிக்கின்றார்.

காலத்தினால் அழியாத காவியநாயகன் நடிகமணி

ஈழத்தமிழ்க் கலை உலகின் சொத்தாக விளங்கிய அமரர் நடிகமணி வைரமுத்துவின் 79ஆவது பிறந்த தினம் அண்மையில் நினைவு கூரப்பட்டது. அதனை முன்னிட்டு காங்கேசன்துறை நடிகமணி வைரமுத்து வஸந்தகானசபா இந்த ஆக்கத்தை வெளியிடுகிறது.

ஈழத்தமிழ் நாடக வரலாற்றிலே ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒரு மாபெரும் கலைஞனாகத் திகழ்ந்தவர் நடிகமணி வைரமுத்து ஆவார். வைரமுத்து தனது கணீரென்ற குரலால் பாடி, நடித்து பல்லாயிரக் கணக்கான ரசிகர்களின் நெஞ்சங்களைக் கவர்ந்தவர்.

எவ்வளவுதான் புகழ் உச்சியில் இருந்தபோதும் சிறிதேனும் தலைக்கனம் இல்லாத அர்ப்பணிப்பு மிக்க ஒரு கலைஞர் இவர். இலங்கை வானொலியில் கர்நாடக இசைக் கச்சேரி செய்து வந்தவர். மிருதங்கம், ஆர்மோனியம், வயலின், ஜலதரங்கம முதலிய வாத்தியங்களை இசைப்பதில் வல்லவர; ஒரு நாடக நெறியாளர். ஆசிரியத் தொழிலை கலைக்காக இழந்தவர். சரித்திர, புராண, இதிகாசக் கதைகளை தத்ரூபமாக பாடி நடித்து மக்கள் மனங்களில் பதிய வைத்தவர். இவர் நடித்த 'அரிச்சந்திர மயான காண்டம்' நாடகமே முதன் முதலாக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஒளிபரப்புச் செய்த தமிழ் நாடகம் ஆகும்.

கலையரசு சொர்ணலிங்கம், வைரமுத்துவுக்கு 'நடிகமணி' என்ற பட்டத்தை வழங்கினார். பேராசிரியர் கா.சிவத்தம்பி தமிழ் நாடகத்தின் 'மரணிக்காத குரல்' என்று 'நாடக தீபம்' நூலில் குறிப்பிட்டு பெரிதும் பாராட்டினார்.

பேராசிரியர் வித்தியானந்தன் "கலைக்கோமான்" விருதையும் பேராசிரியர் க.கைலாசபதி "நவரஸதிலகம்" விருதையும் தென்னிந்திய தமிழ் முதறிஞர் ம.பொ.சிவஞானம் "நாடக வேந்தன்" விருதையும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரி.திருநாவுக்கரசு "நடிப்பிசைச் சக்கரவர்த்தி" விருதையும் பாஷையூர் சென்றோக் படிப்பகத்தினர் "முத்தமிழ் வித்தகர்" விருதையும் கொடுத்து வைரமுத்து வைப் பெருமைப்படுத்தினர்.

வைரமுத்து கலை உலகில் பிரவேசிக்க ஆரம்ப இசைக்குருவாக விளங்கிய நடிகமணியின் தாய் மாமன் வ.பிள்ளைநாயகம், சகோதரரான மிருதங்க வித்துவான் வி.வி. காசிநாதன் ஆகியோரையும் நினைவு கூருவது அவசியமாகும். அவருடன் இணைந்து நடித்த கலைஞர்கள், பக்க வாத்தியக் கலைஞர்கள் அனைவரையும் இந்நாளில் நினைவுகூருவது தமிழர் தம் நன்றியறிதலாகும். ★

யாழ்நகரில்! புதியதோர் உதயம்!!

கவிதாஸ் எலக்ரோனிக்ஸ்

- புதிய V.D.O-CD, O.D.O-CD பாடல்கள், அவற்றிற்கான கவர்கள்.
- எம்ரி (EMPTY) CDக்கள்
- ஜெனரேட்டர்கள் (டைகர் 950 W)
- கரட் பிளேயர்ஸ்
- 'சன்கா' V.D.O ரேப் றிவைண்டர்கள்.
- 'சார்ச்' லைட் வகைகள்.

இவைபோன்ற இன்னும் பல எலக்ரோனிக்ஸ் பொருள்களை மெ' த்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள..... இதோ!

கவிதாஸ் எலக்ரோனிக்ஸ்

181, நவீனசந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

(c26632)

மீன்பிடித் திட்ட கடனுதவி

வடமராட்சி கிழக்கு,பெப்.22

தாளையடி கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு மீன்பிடித்திட்டத்துக்கென ஒரு லட்சம் ரூபா கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதி அப்பகுதியில் தெரிவுசெய்யப்பட்டுள்ள 20 பயனாளிகளுக்கு சுழற்சி முறை கடனாக வழங்கப்பட்டது. (ஒ-182)

சாவற்கட்டில் ஜி.ரி.இசற்றின் உதவியுடன் கிணறு, மலசலகூடம்

வலி.தெற்கு,பெப்.22

ஆனைக்கோட்டை சாவற்கட்டு வீட்டுத் திட்டக் குடியிருப்பாளர்களுக்கு கிணறுகள் மற்றும் மலசல கூடங்கள் ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

மேற்படி நிறுவனத்தினால் சாவற்கட்டு கிராமத்தில் அமைத்துக் கொடுக்கப்பட்ட 13 வீட்டுத்திட்ட குடியிருப்பாளர்கள் கிணறு, மலசலகூட வசதிகள் இன்மையால் மக்கள் குடியிருப்புகளில் குடியேறிய போதிலும் மிகவும் கஷ்டமடைவதாக சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து ஜி.ரி.இசற் நிறுவனம் அவற்றையும் அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது. (எ-152)

சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம்,பெப்.22

தீவக லயன்ஸ் கழக ஆதரவுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தில் கணனிப் பயிற்சியை நிறைவு செய்த அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய மாணவர்கள் 50 பேருக்கு பயிற்சியை நிறைவு செய்ததற்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வித்தியாலயத்தில் இடம்பெற்றது. அதிபர் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில சிறுவர் பாதுகாப்பு நிதிய யாழ்ப்பாண ஒருங்கிணைப்பாளர் அலெக்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கினார். கௌரவ விருந்தினர்களாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தைச் சேர்ந்த எம்.சிவநாதன மற்றும் தீவக லயன்ஸ் கழகத் தலைவர் ப.தேவநாயகம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம)

நூலகப் பொறுப்பாளர் சேவைக்கு உள்ளீர்க்க நடவடிக்கை

வலிகாமம்தெற்கு,பெப்.22

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச நிறுவனங்களில் நூலகர்களாகக் கடமையாற்றி வரும் சகலரையும் இணைந்த நூலகப் பொறுப்பாளர் சேவைக்கு உள்ளீர்க்க அரசாங்க நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி அமைச்சின் செயலாளர் திணைக்களங்களுக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மூலம் சகல நூலகங்களும் இணைந்த நூலகப் பொறுப்பாளர் சேவைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களும் சகல திணைக்கள தலைவர்களுக்கும், செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நூலகர்கள் சகலரும் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஊடாக அனுப்பிவைக்குமாறு மேற்படி அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார். (எ-152)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

இடைக்குறிச்சி J/341
கிராம உத்தியோகத்தர்

திரு.ந.இராசகுமாரன்

அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் 1 இற்குப் பதவியுயர்வு அடைந்ததையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இடைக்குறிச்சி,
வரணி.

(14678)

கா.கந்தசாமி
குடும்பத்தினர்

மொழிபெயர்ப்பாளர் தேவை

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்ய மொழிபெயர்ப்பாளர்கள் தேவை. க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்வேண்டும். பணி செய்யுமிடம் கிளிநொச்சி. தங்குமிட வசதி அளிக்கப்படும். சம்பளம் பேசித்தீர்க்கப்படும். சான்றிதழ் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. :- 1796,
C/o உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(14803)

கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்டத்தின் கல்வித் திணைக்களத்தில் நிர்வாக உத்தியோகத்தராகவும், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி ஓய்வுபெற்று யு.என்.எச்.சி.ஆர்.திட்ட இணைப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும்வேளை அகால மரணமடைந்த

கார்த்திகேசு சந்திரராசா

அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன், இவரது பிரிவால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும்,
பிரதேச செயலகம்,
வடமராட்சி தெற்கு, மேற்கு, கரவெட்டி.

உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், கரவெட்டி.

(சி-26645)

கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின்
முன்னாள் விசேட ஆணையாளர்

கா.சந்திரராசா

அவர்களின் அகால மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு, எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

(C/26639)

செயலாளர்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

கண்ணீர் அஞ்சலி

சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலராகவும், யு.என்.எச்.சி.ஆர். நிறுவன யாழ். மாவட்ட இணைப்பாளராகவும் இருந்து எமது பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்க அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும், கட்டட புனரமைப்பிற்கும் மகத்தான சேவையாற்றிய

கார்த்திகேசு சந்திரராசா

அவர்களின் அகால மரணத்தால் துயருறும் அன்னாரது குடும்பத்தினரோடு எமது துயரையும் பகிர்ந்து, கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி, அவரது ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்,
பண்டத்தரிப்பு.

(c/26640)

பணிப்பாளர்களும்,
பணியாளர்களும்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 - 04 - 1942

உதிர்வு 04 - 03 - 2002

அமரர் கு.வேலுப்பிள்ளை மகாதேவா

திதி:-22.02.2003

இந்தன் விநாயகர் கழல் போற்றி வாழ்ந்ததால்
உந்தன் சுற்றம் சூழல் பற்றிட வாழ்ந்தாய்
சாந்தம் சமாதானம் கமழ் வேளை யதனில்
பந்தபாசம் யாவும் ஒழித்து இறை பதமதில்
எய்தியும் காலம் ஆண்டொன்று சென்றாலும்
எம் படர் சோகம் ஆறவில்லை ஐயாவே!
எம் கண்முன்னே எப்போதும் நிழலாய் நிற்கின்றாய்
நின் தன் ஆத்மா சாந்தியுற விழிநீருடன் பிரார்த்திக்கின்றோம்.

எம் உயிரோடு கலந்துவிட்ட எம் அன்புத் தெய்வத்தின் முதலாம் ஆண்டு திதிப் பிரார்த்தனை இன்று (22.02.2003) சனிக்கிழமை மதியம் எம் இல்லத்தில் நிகழவிருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புளியங்கூடல் வடக்கு,
ஊர்காவற்துறை.

(14789)

என்றும் ஆறாத்துயர் சூழ்ந்த:
மனைவி, சகோதரர்கள்,
மைத்துனர்மார், மகள்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தேவை

கடைவேலைக்கு ஆள் தேவை.
தொடர்பு:
"அபீஸ் கேரப்பி"
115, ஆஸ்பத்திரி வீதி
(மரக்கறி மார்க்கட் அருகில்),
யாழ்ப்பாணம். (14802)

வீடு விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரி முன் வீதியில் இரண்டாவது வலப்பக்க ஒழுங்கையில் மூன்று பரப்புக் காணியில் சகல வசதிகளுடனும் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
துளசி மாடம்
இல.251, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.222 2918 (14801)

உலகப் புகழ் பெற்ற L.G
குளிர்சாதனப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட

LG
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA.
TEL: 021-222-5766
(C-26637)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் விளையாட்டுக்கழகத்துக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான விளை யாட்டு உபகரணங்கள் அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. தமிழ் பாடசாலைகள் விளையாட்டுக் கழகம் இவற்றை வழங்கியது.

அன்பளிப்புப் பொருள்கள் கையளிக்கப்படுவதைப் படத்தில் காணலாம். (ஐ)

30வருடம் கடந்தும், முழுமை பெறவில்லை

பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்ட நிலைமை நூலகத்துக்குமா? வேண்டவே வேண்டாம்

மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.22

அரைகுறை வளங்களுடன் திறக்கப்பட்ட யாழ்பல்கலைக்கழகம் 30வருடங்களைக் கடந்தும் முழு நிறைவான பல்கலைக்கழகமாகவில்லை. இந்நிலை யாழ்நூலகத்திற்கும் ஏற்படக் கூடாது.

யாழ்மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

யாழ்.பொதுநூலகம் திறக்கப்படாமை தொடர்பாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி விடுத்துள்ள அறிக்கை தொடர்பாக பேரவை விடுத்துள்ள அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பொது நூலகம் என்பது கல்வியில் அக்கறையுடைய எவருடைய தேவையையும், ஆதங்கத்தையும் நிறைவுசெய்யும் வகையில் மொழியியல், வரலாறு, சமூகவியல், தொழில் நுட்பம், விஞ்ஞானம், மருத்துவம், கணிதம், வாழ்வியல் போன்ற பல்வேறு துறைகள் சார்ந்த நூல்களையும், நவீன தகவல தொழில்நுட்பச் சாதனங்களையும் உள்ளடக்கிய கட்டடத தொகுதியாக இருக்கவேண்டுமேயனறி வெறும் கட்டடமல்ல.

அரசியல் லாபம் கருதியும், தமது பெயரை வரலாற்றில் பதிக்கவேண்டுமென்ற விருப்போடும் அரைகுறையில் புனரமைக்கப்பட்ட நிலையில் நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்ட வரலாறுகள் உண்டு. எடுத்துக்காட்டாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவ்வாறு தற்துவைக்கப்பட்டதொன்று. ஆனால், அது ஆரம்பிக்கப்பட்டு முப்பது வருடங்கள் ஆகியும் இன்னமும் முழு நிறைவாக பல்கலைக்கழகத்திற்குரிய வளங்கள் அனைத்தையும் கொண்டதாகவில்லை. இந்தநிலை யாழ். பொது நூலகத்திற்கும் ஏற்படக்கூடாதென்பதற்காகவே நூலகத்திற்கான வளங்கள் யாவும் நிறைவு செய்யப்பட்ட பின்ன அது திறக்கப்படுதல் சாலச்சிறந்ததாகும் என்ற வேண்டுதலையே பொது அமைப்புக்கள் ஒன்றாக முன்வைத்தன.

அவ்வாறு செய்வதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் அறிக்கையில் குறிப்பிட்டது போன்று யாழ் மாணவர்களுக்கு எந்த வகையிலும் துரோகம் விளைவித்ததாகக் கூற முடியாதென்பது பேரவையின் அபிப்பிராயமாகும். ஏனெனில், நூலகம் திறக்கப்பட்டிருப்பினும் அதனை நிரம்பல் செய்யவிருந்த வளங்கள் யாவும இப்போது யாழ்மாநகரசபை வளாகத்தில் செயற்பட்டுவரும் பொது நூல் நிலையம் கொண்டுள்ள நூல்களும், தளபாடங்களும்தான் .அவை ஏற்கனவே யாழ்ப்பாண மாணவர்களாலும், கல்வி ஆர்வலர்களாலும் பயன்படுத்தப்பட்டு வருவதொன்றாகும்.

உண்மையில் யாழ்.மாணவர்களுக்கு இன்றைய தேவை அவர்கள கல்வி அறிவினை மேம்படுத்தக்கூடிய நிறைவான வளங்களைக் கொண்ட நூல்நிலையம் தான். இன்றைய மாணவ சமுதாயம் விரும்பும் கற்றல் முறையானது தாமாக வாசித் தறியாது பிறர் வாயிலாகக் கேட்டறி வதன் மூலம் தமது அறிவை வளர்த்துக்கொள்வதோடு, பிரச்சினைகளையும் விடுவித்துக்கொள்வதுமாகும் ஆதலால் அதற்கு ஏற்ற தகவல் தொழில் நுட்பச்சாதனங்களை நூல நிலையம் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும்.

யாழ்.பொதுநூலகம் ஒரு காலத்தில் தமிழ் மாணவர்கள் உச்சப் புள்ளிகளைப் பெற்று உலகத்திற்கே முன்மாதிரியாக இருந்தமை உண்மைதான். இன்று அந்நிலை மாறியமைக்குப் பொது நூல்நிலையம் இல்லாமை மட்டும்தான் காரணமல்ல என்பது பேரவையின் கருத்தாகும். இன்று தமிழ் பிரதேசத்திலுள்ள மாணவர்கள் போர்க்கால அனர்த்தங்களினால், ஏற்பட்ட பேரழிவு காரணமாக அடிப்படைத் தேவைகள் இல்லாத பாடசாலைகளில் கல்வி பயில்கின்றார்கள். மகிழ்வான சூழலில் கல்வியைப் பெறமுடியாது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள பாடசாலைகளில் அச்சத்தின் மத்தியில் படிக்கின்றார்கள்.

ஒருமாணவனின் உடல், உள விருத்தியை ஏற்படுத்துமுகமாக மேற்கொள்ளப்படும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளைப் பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரத்தில் செயற்படுத்த முடியாது. இராணுவத்தின் உயர் பாதுகாப்புப் பிரதேசப் பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் மனவுளைச்சலுக்குட்பட்டுள்ளன. இவை யாவும் நாடாளுமன்ற உறுப்பினர் அறிந்து கொள்ளாத விடயங்களல்ல. இவை யாவும் மாணவர்களின் கல்வி பின்னடைவுக்குக் காரணமாகும். தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவிற் காணப்படுகின்றன.

உண்மையில் யாழ்மாணவர்களின கல்வி வளர்ச்சியில் அக்கறையுள்ளவர்களின் கடப்பாடு யாதெனில் அறிவுத் தேடலுக்குரிய உயர்ந்த வசதி வாய்ப்புக்களையும், வளங்களையும் பெற்றுக்கொடுப்பதும் அவற்றினூடாக சமூக தேசிய வளர்ச்சிக்கு வழிகாட்டுவதுமேயாகும். ஆனால், கல்வியும் அறிவுத் தேடலுக்கான நூலகமும் அரசியல்வாதிகளின் கைகளில் சிக்கி சமூகப் பயன்பாடற்றுப்போனது மனவேதனையைத் தரும் விடயமாக உள்ளது - என்றுள்ளது

(எ-3)

குட்டியப்புலம் பாடசாலைக்கு விரைவில் அடிப்படை வசதிகள்

விளையாட்டு நிகழ்வில் மாவை எம்.பி. உறுதி

வலிகாமம் தெற்கு,செப்.22

வசாவிளான் குட்டியப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் மாணவர்களின் கல்வி நலனுக்காக இப்பாடசாலையில் இருமாடிக் கட்டடம் ஒன்றை அமைக்கவும், தண்ணீர்த்தாங்கி அமைக்கவும் நடவடிக்கை எடுப்பேன்.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேற்படி பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அதிபர் செ.கந்தசாமி தலைமையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

மாவை சேனாதிராசா எம்பி. தமது உரையில் மேலும் கூறியதாவது:-

குட்டியப்புலம் பாடசாலை மிகவும் பின்தங்கிய ஒரு கிராமத்தில் உள்ளது. மிகவும் கஷ்டமான, வறுமைக் கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களைக் கொண்ட இக்கிராமத்தின் கல்வித் தேவைகள் நிறைவுசெய்யப்படவேண்டும். இப்பாடசாலை அடிப்படை வசதிகள், பௌதிக வளங்கள் இன்றிக் காணப்படுகின்றது.

இலங்கையில் வாழும் சுமார் 38 லட்சம் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களுள் 70 சதவீதமானவர்கள் வடக்கு - கிழக்கு மகாணங்களில் வாழ்கின்றார்கள். அதிலும் குறிப்பாக இதுபோன்ற கஷ்டப் பிரதேசங்களில் அதிகமான மக்கள் வாழ்கின்றனர்.

நாட்டில் இடம்பெற்ற யுத்தங்களினால் உயிரிழப்புகளையும், சொத்து அழிவுகளையும் எதிர்கொண்ட மக்கள் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளனர். அவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும் இப்பாடசாலைக்கு மாணவர்கள் சென்றுவரும் வீதிகள் செப்பனிடப்படவேண்டும் கட்டட வசதிகள், குடிதண்ணீர்வசதிகள் போன்ற சகல வசதிகளும் அமைத்துக் கொடுக்கப்படவேண்டும். இவற்றைச் செய்துகொடுப்பதில் நான் முழு மூச்சுடன் செயற்படுவேன் - என்றார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் அரசியல்துறையைச் சேர்ந்த எஸ். யாழவன் கூறியதாவது:-

தமிழ் மக்களின் சுயாதிபத்தியம், தேசிய இனம் மற்றும் தாயகக் கோட்பாடு என்பவற்றில் விடுதலைப் புலிகளாகிய நாம் மிக உறுதியாகவுள்ளோம்.

தமிழ் மக்களின் தார்மீக உரிமையை நாம் ஒருபோதும் எவரிடமும் விட்டுக்கொடுக்கமாட்டோம்.

அரசும் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டு சமாதானத்தை முன்னெடுப்பதில் அக்கறை காட்டிவருகின்றனர். சமாதான முயற்சிகளைக் குழப்பி மீண்டும் ஒரு யுத்தத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் சில சக்திகள் ஈடுபட்டுவருகின்றன. ஆனால், நாம் எந்த நிலையிலும் பொறுமையை இழந்துவிடாது நிதானமாக நின்று செயற்பட்டு வருகிறோம்.

எமது எதிர்கால இளைஞர்கள் சமூகத்தில் நற்பிரஜைகளாக விளங்க வேண்டும். ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும் பண்பு, சகிப்புத் தன்மை போன்ற மனப்பாங்குகளும் அவர்களுடைய ஆளுமை மற்றும் திறமைகளும் வளர்க்கப்படவேண்டும். அதற்கு இது போன்ற விளையாட்டுப் போட்டிகள் அவசியமானவை -- என்றார். (எ-152)

சமாதானத்தின் இலட்சினையே சாரணியம்



சாரணியத் தந்தை பேடன் பவலின் 146ஆவது பிறந்த தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

யுத்தம் என்பது அன்றுமுதல் இன்றுவரை தொடர்கின்றது. இது உள்நாட்டு யுத்தம், வெளிநாட்டு யுத்தம் என இருவகைப்படுத்தலாம். உள்நாட்டு யுத்தமானது இரு சமூகங்களிடையே உரிமை வேண்டியும், இனத்திடையே சுயநிர்ணய உரிமை, சமத்துவம் வேண்டியும் ஏற்படுகின்றது. இவை பல்லாண்டு காலமாகத் தொடர்வதுமுண்டு.

ஆனால், வெளிநாட்டு படையெடுப்பு யுத்தம் பலதரப்பட்ட நோக்குடன் இடம்பெறுகின்றது. இவை அனைத்தும் அன்றும் இன்றும் உயிரழிவு, பொருளாதார அழிவு என்பவற்றை ஏற்படுத்தியதே தவிர, சாதித்தது வேறு ஏதுமில்லை. இதனால் மக்கள் பலவீனப்படுத்தப்பட்டார்களே தவிர, அவர்களிடம் ஏற்பட்ட காழ்ப்புணர்வு, குறிக்கோள் அழிந்துவிட விஸ்வரூபம் இதனைத்தான் விடுதலை வேண்டும் இனம் என்றும் பறைசாற்றி நிற்கின்றது.

இன்று சாரணியத் தந்தை பேடன் பவல் அவர்களின் நினைவு தினம். இந்நன்னாளில் அவரிடம் இருந்த சில நற்பண்புகளையும், சாரணியத்தின் தோற்றப்பாட்டினையும், சமூக மேம்பாட்டிற்கான வழிகாட்டலையும் நாம் அறிந்திருந்தாலும் அதற்கு அமைய ஒழுகுதலும் சாரணரிடத்தும், சமூகத்திடமும் இன்றியமையாதது ஆகும்.

பேடன் பவல் மூன்று வயதில் தன் தந்தையை இழந்தபோதிலும் தாய்ப்பாசம் மிக்கவராகவும், சகோதர ஒற்றுமையுடையவராகவும் திகழ்ந்தமை அவரது குடும்பம் எழில்மிகு குடும்பமாகத் திகழ வழிவகுத்தது.

தாயிடம் சமயற்கலையும் சகோதரர்களிடம் புறக் கலைகளையும் பெற்றமையால் இராணுவ சேவையில் இருக்கும் காலத்திலும் வாழ்க்கையிலும் அதன் பலாபலனைப் பெற்று சிறந்து விளங்கினார்.

த.நாகபோஜன்
செயற்குழுத் தலைவர்,
கரங்கேசன்துறை மாவட்ட
சாரணர் கிளைச் சங்கம்.

உரிய காலத்தில் கல்வியைக் கற்றார். பட்டப்படிப்பினை முடித்து நாட்டுப்பற்றுடன் இராணுவப் பணியில் இணைந்து பணி புரிந்தார் தகுதி சிறிய படைப்படை அதிகாரியில் உள்ள மேல்கிப் நகரை 221 நாள்களுக்கு சிறுவர்கள் துணை கொண்டு ஒற்று அறிந்து காப்பாற்றிய பேடன் பவல் 1901ஆம் ஆண்டு பெரும் வெற்றி வீரனாக இங்கிலாந்துக்குத் திரும்பியதும் யுத்தத்தினால் எதனையும் சாதிக்க முடியாது என்ற நிலைப்பாட்டுக்கு வந்தார்.

தனது இராணுவ கால அனுபவத்தினையும் வாழ்க்கை அனுபவத்தினையும் கொண்டு சாரணியத்துக்கு துணை எனும் நூலினை ஆக்கினார். இது மக்கள் மத்தியில் பெரும் நன்மதிப்புப் பெற்றது இதன்மூலம் மக்கள் மத்தியில் ஏற்பட்ட உணர்வு சமாதானத்தின் இலட்சினையான சாரணிய இயக்கத்தை 1907ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பிரவுன்ஸி தீவில் 20 பேருடன் உருவாக்கியது.

இன்று 150 நாடுகளுக்கு மேல் 2 கோடியே 65 லட்சம் சாரணர்களைக் கொண்ட அமைப்பாக சாரணர் இயக்கம் திகழ்கின்றது. இந்த அமைப்பினை ஊக்கம்பித்து வழிநடத்திய பெருந்தகை 'ரொபேட் ஸ்ரீவின்சன் சிமித் பேடன் பவல் பிரபு' அவர்களதும் சாரணியர்களது தலைவர் என விளங்கிய துணைவியார் 'ஒலேவ் சேர்லிஸைபர் சோம்ஸ் (சீமாட்டி பேடன் பவல்) அவர்களதும் பிறந்த நாள் இன்றாகும்.

இந்நன்னாளில் சமாதானத்தின் அவசியத்தையும் நிரந்தர சமாதானத்தின் வலியுறுத்தலுக்கான முனைப்பினையும் மேற்கொள்ள திட்சங்கற்பம் கொள்வோமாக. ★

காலாவதியான மருந்துகள் சங்கானையில் சிக்கின!

சங்கானை, சித்தன்கேணிப் பகுதிகளிலுள்ள மருந்தகங்களிலிருந்து காலாவதியான மருந்துவகைகளும், உணவுப் பொருள்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் 7 பேர் கொண்ட குழுவினர் கடந்த வாரம் மருந்தகங்கள்மீது திடீர் பரிசோதனை மேற்கொண்டபோதே இவை சிக்கிக்கொண்டன.

இவற்றைப் பறிமுதல் செய்த குழுவினர், சம்பந்தப்பட்ட மருந்தக உரிமையாளர்களுக்கெதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-100)

இந்து மாநாட்டை முன்னிட்டு பிராந்திய ரீதியிலும் நிகழ்வுகள்

யாழ்ப்பாணத்தில் மே 9முதல் மூன்று தினங்கள்

யாழ்ப்பாணம்,செப்.22

எதிர்வரும் மே 2ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரையும் கொழும்பில் நடைபெறவுள்ள அகில உலக இந்து மாநாட்டைத் தொடர்ந்து மாதில இந்து மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டை மே மாதம் 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் நடத்துவதற்கு மாநாடு தொடர்பான பிராந்தியக்குழு தீர்மானித்துள்ளது. முதல்நாள் நிகழ்வுகள் நல்லை ஆதீனத்திலும், அடுத்த இருநாள் நிகழ்வுகள் யாழ். மத்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிலும் நடைபெறவுள்ளன.

மூன்றுநாள் மாநாட்டில் முதல் நாளான 9ஆம் திகதி திருமுறை மாநாடும்,10ஆம் திகதி இளைஞர் மாநாடும், 11ஆம் திகதி மகளிர் மாநாடும் நடைபெறும் என்று இந்து கலாசார அமைச்சின் யாழ்பிராந்திய உதவிப் பணிப்பாளர் சிவத் தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

மாநாட்டில் கலந்துகொண்டு விசேட சொற்பொழிவுகளை நிகழ்த்துவதற்கென இந்தியாவில் இருந்தும் பேச்சாளர்கள் வருகைதரவுள்ளனர். மூன்று நாள்களும் மாலையில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (எ-10)

சமாதானத்தை வலியுறுத்தும் ஓவியப்போட்டிகள்

யாழ்ப்பாணப் பாடசாலை மாணவர்களிடையே சமாதானத்தை வலியுறுத்தும் வகையிலான ஓவியப் போட்டியொன்றை நடத்தி சிறந்த ஓவியங்களுக்கு பரிசுகள் வழங்க மானிப்பாய் லியோ கழகம் முன் வந்துள்ளது.

கோட்ட மட்டங்களில் நடைபெறும் கண்காட்சியில் காட்சிப் படுத்தப்படும் ஓவியங்களுக்கு லியோக் கழகம் பரிசில்கள் வழங்கும். (எ-152)

இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

ஸ்ரீ சோடா நிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளிஅம்மன் வாக்குப் பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

மணிசாமி P.T.R.

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி.
இல. 54, மனிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).
பார்வையிடும் நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 4.00மணிவரை.
(வியாழக்கிழமைகளில் விடுமுறை)

(14834)

கண்ணீர் அஞ்சலி

யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் ஆசிரியராக இருந்து அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச்சென்று இளைப்பாறிய

மு.வேலாயுதம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர் கழகம்,
யா/அச்செழு சைவப்பிரகாசவித்தியாலயம். (14830)

கண்ணீர் அஞ்சலி

எமது கோட்டக் கல்விப் பணிப்பாளர்
திரு. கா.சந்திரபாலன் அவர்களின் பாசமிகு சகோதரன்

கார்த்திகேசு சந்திரராசா

அவர்களின் மறைவினால் துயருறுகின்ற குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர்கள், பா.அ.சங்கம்.
யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை.

(14839)

துயர் பகிர்கின்றோம்

எமது சங்கத்தில் கடமையாற்றும் திரு. வே.முத்துபன் அவர்களின் தந்தையார்

மு.வேலாயுதம்

(ஓய்வுபெற்ற அதிபர், யா/குப்பிளான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்)

அவர்களின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

47/2, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (C/26653)

உறுப்பினர்கள்,
உத்தியோகத்தர்கள்,
ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்.

துயர் பகிர்கின்றோம்

எமது கோட்டக் கல்விப் பணிப்பாளர்
திரு. கா.சந்திரபாலன்
அவர்களின் பாசமிகு சகோதரன்

கார்த்திகேசு சந்திரராசா

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர் சங்கம்,
தெல்லிப்பழைக் கல்விக்கோட்டம்.

(14840)

கண்ணீர் அஞ்சலி

வலி.மேற்கு சங்கானைப் பிரதேச செயலராகவும், பிரதேச சபை விசேட ஆணையாளராகவும், யூ.என்.எச்.சீ.ஆர். திட்டமிடல் அதிகாரியாகவும் வலி.மேற்கில் கடமை புரிந்தவரும், சிறந்த அரச நிர்வாகியும், வலி.மேற்குப் பிரதேச மக்களின் மனங்களைத் தன் சேவையினால் கவர்ந்தவரும், பல வருடங்கள் தனது தன்னலமற்ற மகத்தான சேவையினால் மக்களின் துயரறிந்து அவற்றை நிவர்த்தி செய்தவருமான

அமரர் கார்த்திகேசு சந்திரராசா

அவர்களின் அகால மரணம் இப்பகுதி மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும். அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாரோடு சங்கானை வர்த்தக சங்கத்தினராகிய நாமும் எமது துக்கத்தைப் பகிர்ந்து, கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாமவல்ல இறைவனையும் பிரார்த்திக்கின்றோம்.

(சி-26656) - சங்கானை வர்த்தகர் சங்கம்.

கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து வலிகாமம் மேற்கில் தற்காலிகமாக தங்கி இருந்த போது பல பேருதவிகள் செய்தும் பளைப் பிரதேச செயலகம், சங்கானைப் பிரதேச செயலகப் பகுதியில் செயற்படுவதற்கு உதவியிருந்தும் கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தராகவும் கண்டாவளை பிரதேச செயலக ஆரம்ப பிரதேச செயலராகவும் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு மகத்தான சேவையும் ஆற்றிய

கார்த்திகேசு சந்திரராசா

அவர்களின் அகால மரணம் இப்பிரதேச மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவினால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகிறோம்.

பிரதேச செயலகம்,
பச்சிலைப்பள்ளி. (14841)

பிரதேச செயலரும், கிராம அலுவலர்களும்,
உத்தியோகத்தர்களும்.

தென்னாபிரிக்க...

(3ஆம் பக்கத் தொடாசசி)

பிக்கை ஊட்டும் கருத்து வெளியாகியுள்ளது. இன்று தென்னாபிரிக்க அணி பங்களாதேஷ் அணியைச் சந்திக்கிறது. தான் சந்தித்த மூன்று ஆட்டங்களில் இரண்டில் தென்னாபிரிக்கா தோற்றது. எனினும், இனிவரும் ஆட்டங்களிலும் இலங்கையைத் தவிர மற்றைய இரு ஆட்டங்களும் அதற்கு சவாலாக இருக்கப்போவதில்லை. இந்நிலையில்,

"எங்களுடைய பாதை நகைப்புக்கிடமானது. எனினும், நாம் அதனை சரிப்படுத்தி சாத்தியமானதாக்க முயல்கிறோம். மூடிய கதவுகளே எமக்கு முன்னே இருக்கின்றன. அதனை நாங்கள் உணர்கிறோம் ஆனால் நாம் முன்னகர்ந்தே ஆகவேண்டும். அடிப்படையில் இது முடியாதது அல்ல. எனவே, எமது கனவு இன்னும் உயிர்ப்புடனேயே உள்ளது" என்றார் பொலக்.

(ம)

இலங்கை...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரம் 2 போட்டிகளில் 8 விக்கெட்டுக்களை வீழ்த்தி இரண்டாமிடத்தில் உள்ளார்.

ஆகக் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றவர்களில் தென்னாபிரிக்கவீரர் ஹேர்சல் கிப்ஸ் 254 ஓட்டங்களுடன் முன்னணியில் உள்ளார். ஸிம்பாப்வே வீரர் கிரேக் வைஷார்ட் 2 போட்டிகளில் 184 ஓட்டங்களையும், சனத் ஜெயசூரிய 3 போட்டிகளில் 184 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

குமார் சங்கக்கார களத்தடுப்பில் ஆகக் கூடுதலான (7) ஆட்டமிழக்கச் செய்தவீரராகத் திகழ்கிறார்

(ம-5)

யார்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர் போட்டியில் தமது முழுப் பலத்தையும் ஒன்று திரட்டி விளையாடி வெற்றியீட்டியாக வேண்டும். 'சுப்பர் சிக்ஸ்'க்கு செல்ல அதுவே வழி. தோல்வியடைந்தால் அவர்களின் நிலை கேள்விக் குறியாகும்.

மறுமுனையில் பாகிஸ்தான் அணி 2 போட்டிகளில் - பங்குபற்றி ஒரு போட்டியில் வெற்றியும், ஒரு போட்டியில் தோல்வியும் தழுவி 4 புள்ளிகளுடன் 4ஆம் இடத்தில் இருக்கின்றது. அவர்களுக்கும் இந்த ஆட்டம் முக்கியமானது. இன்னும் மூன்று ஆட்டங்கள் (ஸிம்பாப்வே, இந்தியா, நெதர்லாந்து) அதற்கு இருக்கின்றன.

இருந்தாலும், இப்போட்டியில் தமது பலத்தை வெளிக்காட்ட அவர்கள் முயல்வார்கள்.

இதேவேளை - கழுத்தில் ஏற்பட்ட உபாதை காரணமாக நமீபியா அணியுடனான போட்டியில் பங்குபற்றாத இங்கிலாந்து அணித்தலைவர் நஸர் ஹுசேன் இப்போட்டியிலும் பங்குபற்றுவது சந்தேகத்துக்கிடமாகவே உள்ளது.

புதனன்று நடைபெற்ற இப்போட்டியில் அலெக்ஸ் டுவார் தலைவராக கடமையாற்றினார். இவரே இன்றைய போட்டிக்கும் தலைவராக கடமை புரிவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகக்கிண்ணப் போட்டிகளில் இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகள் 8 தடவைகள் மோதியுள்ளன. இவற்றில் பாகிஸ்தான் 4 தடவைகளும் இங்கிலாந்து 3 தடவைகளும் வெற்றி பெற்றுள்ளதோடு ஒரு போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

எது எவ்வாறு இருப்பினும் அண்மைக்கால பெறுபேறுகளின் அடிப்படையில் இரு அணிகளும் சமபலம் கொண்ட அணிகளாக விளங்குகின்றமையால் இன்றைய ஆட்டம் பரபரப்பு மிகுந்ததாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். (ம)

500 ஆவது...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

குரோ, ஜாவிட் மியான்டட் ஆகியோரின் விக்கெட்டுக்களை வீழ்த்துவதே அரிதானதாகக்கருதுகிறேன்.

எனது கணிப்பின் படி ஒரு நாள் போட்டி வரலாற்றில் விவியன் ரிச்சர்ட்ஸ் தான் சிறந்த துடுப்பாட்ட வீரர். 1992 ஆம் ஆண்டு உலகக்கிண்ண இறுதிப் போட்டி எனது சிறந்த போட்டிகளில் ஒன்றாகும்." இவ்வாறு அக்ரம் மேலும் கூறினார்.

இங்கிலாந்து அணியுடனான மேற்படி உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் 49 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்திய அக்ரம், 19 பந்து வீச்சுகளில் 33 ஓட்டங்களைப் பெற்றார். (ம-5)

கென்ய ஆட்டமும்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேவை. ஏனென்றால் முக்கியமான இன்னும் இரு ஆட்டங்கள் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் தென்னாபிரிக்காவுக்கும் எதிரே எமக்கு இருக்கின்றன." என்றும் ஜெயசூரிய மேலும் தெரிவித்தார்.

கென்யாவில் தாம் ஆடவந்தது குறித்து கவலைப்படவில்லை என்றும் அவர் கூறினார். பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி நேற்று கென்யாவுடன் நடைபெறவிருந்த ஆட்டத்தை நியூஸிலாந்து புறக்கணித்தமை குறிப்பிடத் தக்கது.

இரவு விருந்துக்கு...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்படவில்லை.

நேற்று வெள்ளிக்கிழமை கென்யா - நியூஸிலாந்து அணிகள் கென்யாவில் போட்டியிடவிருந்தன.

ஆனால், பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக நியூஸிலாந்து அணி இப்போட்டியில் பங்குபற்ற மறுத்துவிட்டது.

நியூஸிலாந்து அணி எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள பங்களாதேஷுடனான போட்டிக்கான பயிற்சிக்காக டேர்பன் நகருக்குச் சென்றுள்ளது.

(ம-5)

வேம்படி மகளிர் கல்லூரி
இல்ல விளையாட்டுப்போட்டி - 2003

காலம்: இன்று (22-02-2003) பி.ப.2.00 மணி.
இடம்: கல்லூரி மைதானம்
பிரதம விருந்தினர்: திரு.செ.பத்மநாதன்
(அரச அதிபர், யாழ்ப்பாணம்)

பெற்றோர், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

(சி-26655) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

மரண அறிவித்தல்கள்

கார்த்திகேசு சந்திரராசா

(ஓய்வுபெற்ற பிரதேச செயலர், சங்கானை)

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், பறாளாய் வீதி, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சந்திரராசா (ஓய்வுபெற்ற பிரதேச செயலர், சங்கானை - சிரேஷ்ட உறுப்பினர் த.வி.கூட்டணி, திட்ட இணைப்பாளர் - U.N.H.C.R.) அவர்கள் 19.02.2003 புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சின்னம்மாவின் சிரேஷ்ட புதல்வனும் சகலகலாவல்லியின் (ஆசிரியை, மெய்கண்டான் மகாவித்தியாலயம், பண்ணாகம்) அன்புக் கணவரும் தரணிதரன் (லண்டன்), ஸ்ரீதேவி (ஆசிரியை, விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்), துளசிதரன், ஸ்ரீபிரியா (சித்தமருத்துவ மாணவி), ஸ்ரீரதி ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரபூபதி, சந்திரபாலன் (கோட்டக்கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழை), சந்திரவரதன் (சவூதி அரேபியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சு.கணபதிப்பிள்ளை (சங்கீத பூஷணம், ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர்), ராஜேஸ்வரி, செல்வரத்தினம் (ஆசிரியை, இந்துமகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி), கமலலோசனி, கேசவதாஸன் (சிங்கப்பூர்) ஆகியோரின் மைத்துனரும் கண்ணதாசன் (விரிவுரையாளர், மருத்துவபீடம் யாழ். பல்கலைக்கழகம்), சிவகாந்தினி (லண்டன்) ஆகியோரின் அருமை மாமனாரும் சியாமளனின் அன்புப் பேரனும் சுகந்தன், சுதர்சினி, சுபோதினி, சுகன்யா, சஸ்மிலா, சதுஷா, சிந்துஜன் ஆகியோரின் பெரிய தந்தையும் தேவகல்யாணி, தேவசுதன், தேவரேணுகா, தேவதாஸ், தேவரமணன், தேவகாந்தன் ஆகியோரின் சிறிய தந்தையும் செல்வம், சரஸ்வதி, சிவநாதன், தெய்வீகராணி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2003) சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பொன்னாலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி ச.சந்திரராசா
(மனைவி)

பறாளாய் வீதி,
சுழிபுரம். (14831)

திருமதி மனவல் பாக்கியம்

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கரம்பொன்னை வசிப்பிடமாகவும் கொழும்பில் தற்காலிகமாக வாழ்ந்தவருமான திருமதி மனவல் பாக்கியம் 19.02.2003 புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சூசை - இன்னாசியாப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் சூசை மனவலின் அன்பு மனைவியும் அக்னேஸ், அமிர்தநாயகம், சகாயமலர், ஊர்துமலர், பீற்றர், இராஜநாயகம், செல்வநாயகம், கிறேஸ், அந்தோனியாப்பிள்ளை, றதினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் பேரின்பநாயகம், செல்வநாயகம், ஜேசுதாசன், ஆசைத்தம்பி, வினிபிறேட், டெய்சி, சந்திரா, டொறிற்றா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதித்திருப்பலி ஆராதனைகள் இன்று (22.02.2003) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் கரம்பொன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சூசை மனவல் (கணவர்).

கரம்பொன் தெற்கு,
ஊர்காவற்றுறை. (14836)

வல்லிபுரம் நடராசா

இணுவில் மேற்கு, பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நடராசா 20.02.2003 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வல்லிபுரம் - சின்னத்தங்கத்தின் மகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ராசம்மா மற்றும் தம்பிராசாவின் சகோதரனும் செல்வராசா, ராஜேஸ்வரன் (ஜேர்மனி), சரோஜினிதேவி (இந்தியா), விக்கினேஸ்வரி, இன்பரதி (கனடா), ஸ்ரீகாந்தா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மனோன்மணி, ஜாஜி, விஜயசிங்கம் (லண்டன்), நித்தியானந்தன், குகதாஸ் (கனடா), சுமேந்திரா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.நித்தியானந்தன் (மருமகன்).

ஒஸ்கா லேன்,
உரும்பிராய். (14835)

வாழைச்சேனை - வாகரை வீதி 20 ஆண்டுகளின் பின் மீண்டும் திறப்பு

வாழைச்சேனை,பெப்.22

வாழைச்சேனையிலிருந்து வாகரை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை இணைக்கும் ஏ-15 நெடுஞ்சாலை கடந்த வியாழக்கிழமை முதல் பொதுமக்கள் போக்குவரத்திற்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

இராணுவ அதிகாரிகளான மேஜர் போட்டி பெரேரா, கப்டன் ஹெட்டியாராச்சி ஆகியோர் இந்த வீதியை வைபவரீதியாக திறந்து வைத்தனர். இது தொடர்பான வைபவம் 31ஆவது மைல் கல் பகுதியில் இடம்பெற்றது. வாகரையிலிருந்து வாழைச்சேனை நோக்கி வந்த பஸ்வண்டி இவ்வீதியில் முதலாவது பயணத்தை ஆரம்பித்தது.

இந்த வீதி காலை 6.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை பொதுமக்கள் போக்குவரத்திற்காக தின்மும் திறக்கப்பட்டிருக்குமென படையினர் அறிவித்துள்ளனர். கடந்த இருபது வருடங்களாக இவ்வீதி மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ)



ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள் குழு நேற்று யாழ். செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதனைச் சந்தித்து உரையாடிய போது எடுக்கப்பட்ட படங்கள்.

(படங்கள்: தேவராஜன்)

அம்பாறை மாவட்டம் எங்கும் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

நிந்தவூர்,பெப்.22

ஈராக்கிற்கு எதிரான அமெரிக்காவின் போக்கைக் கண்டித்து அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று பாரிய ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச். எம். எம்.ஹரிஸ், சட்டத்தரணி எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் ஆகியோர் அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்களுக்கு விடுத்த கோரிக்கையின் பேரிலேயே நேற்று அமெரிக்க எதிர்ப்புத்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அத்துடன், அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்துப் பள்ளிவாசல்களிலும் விசேட 'துஆ' பிரார்த்தனையும் நடைபெற்றது.

நேற்று ஜும்ஆ தொழுகையின் பின் ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கல்முனைக்குடி, சம்மாந்துறை, அட்டாளைச் சேனை, ஒலுவில், பாலமுனை, கற்பிட்டி முனை, மருதமுனை முதலான பிரதேசங்களில் நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் இயங்கும் பல்வேறு அமைப்புகளினாலும் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசமெங்கும் அமெரிக்க எதிர்ப்பு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

(ஒ)

சமாதானத்தை வலியுறுத்தி புத்தளத்தில் மாணவிகள் பேரணி

புத்தளம்,பெப்.22

"எமக்குத் தேவை சமாதானமே!" "யுத்தம் எமக்குத் தேவையில்லை!" "சமாதானம் மூலமே அமைதி ஏற்படும்" என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் புத்தளம் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவிகள் நேற்று நகரில் பேரணி ஒன்றை நடத்தினார்கள்.

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு இப்பேரணி இடம் பெற்றது.

காலை 10 மணிக்கு ஆரம்பித்த பேரணி நகரின் முக்கிய வீதிகளூடாகச் சென்று கல்லூரியை மீண்டும் அடைந்தது.

சமாதானத்தின் அவசியம் பற்றிய பல நிகழ்வுகளும் கல்லூரியில் இடம் பெற்றன.

(ஒ)

அரச - புலிகள் இடையேயான

உடன்படிக்கை நீக்கப்படும் வரை தொடர்ந்து போராட்டம் நடக்கும்

ஜே.வி.பி. பொதுச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.22

அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான உடன்படிக்கை நீக்கப்படும் வரை தொடர்ந்து ஆர்ப்பாட்டம் செய்யப்போவதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

கொழும்பில் செய்தியாளர்களிடம் நேற்று வெள்ளிக்கிழமை பேசிய ஜேவிபியின் பொதுச்செயலர் ரில்வின் சில்வா இதனைத்தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அமைதியாக நாம் நேற்று முன்தினம் நடத்திய ஊர்வலம், அரசின் உத்தரவின்பேரில் கொடூரமாக கலைக்கப்பட்டுள்ளது. அமைதியான முறையில் கூட்டங்களை நடத்துவதரகான மனித உரிமையை அரசு அழித்து விட்டது என்பதையே இது காண்பிக்கிறது. இந்தச் சம்வத்தைப் பற்றிய தகவல்களை திரட்டவந்தவல ஊடகவியலாளர்களும் காயமடைந்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் இந்தச் சம்பவம் குறித்து விசேட அறிக்கை ஒன்றை வெளியிடுவதற்கு ஜே.வி.பி. கேட்டுக் கொண்டது. ஆனால், அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

- இவ்வாறு ரில்வின் சில்வா தெரிவித்தார்.

(ஒ-9)

சப்ரகமுவ மாகாண சபை வழங்கிய 40 ஆசிரிய இடமாற்றங்கள் நிறுத்தம்

கேகாலை மற்றும் தெம்பிலிட்டி கல்வி வலயத்துக்குட்பட்ட 40 ஆசிரியர்களுக்கு சப்ரகமுவ மாகாண சபையினால் வழங்கப்பட்ட இடமாற்றங்களை இடைநிறுத்தவைக்கும்படி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான மார்க் பெர்னாண்டோ, டி.பி.எஸ்.குணசேகர, டிபி.வீரசூரிய ஆகியோரே கடந்த 19ஆம் திகதி மேற்படி உத்தரவைப் பிறப்பித்தனர். சப்ரகமுக மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் எம்.எஸ்.எம். உசைன், மாகாண கல்வி அமைச்சர் நவரட்ண உட்பட 7 பேர் எதிர்மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

15 வருட சேவையை நிறைவு செய்துள்ள எமக்கு 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் 13 ஆம் திகதி இடமாற்றக் கடிதங்கள் கிடைத்தன. நாம் இடமாற்றங்களை கோரியிருக்கவில்லை. இடமாற்றங்கள் அம்பிலிப்பிடிய, கலவான, பலாங்கொட போன்ற தூரப்பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. நாம் ஐதேக ஆதரவாளர்கள் என்றபடியால் எமது அடிப்படை உரிமையை மீறும் வண்ணம் பொ.ஐ.மு. ஆட்சி நிலவும் சப்ரகமுவ மாகாண சபை நடந்து கொண்டுள்ளது. என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைக் கருத்திற கொண்ட நீதியரசர்கள் விசாரணைகள் முடியும் வரை இடமாற்றங்களை இடைநிறுத்திவைக்க உத்தரவிட்டனர்.

BEST WISHES

WE WISH JAFFNA MEDICAL ASSOCIATION ALL THE BEST FOR THEIR ANNUAL SESSIONS

FROM

TORRENT PHARMACEUTILALS LTD, INDIA.

MAKERS OF TOCOFER (VITE).

(14819)

மகளிர் தின போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.22

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி அரியாலை அபிவிருத்திச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள கட்டுரை, பேச்சுப் போட்டிகள் இன்றும் நாளையும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.(ஒ-3)

கல்வியமைச்சின் சமாதான கைநூல்

கொழும்பு,பெப்.22

நாட்டில் கடந்த இருதசாப்த காலப் போரில் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 60 ஆயிரம் முதல் 80 ஆயிரம் வரையிலானதாகும். போரினால் நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் 75 ஆயிரம் ரூபா கடனாளியாக மாறியுள்ளனர். இத தகவல்கள் கல்வியமைச்சு நாடாளவிய ரீதியில் நேற்று பாடசாலைகளில நடத்திய சமாதானக் கூட்டத்தில் விநியோகித்த கைநூலில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கோப்பாய் ஆலயத்தில் சமாதான வழிபாடு

யாழ்ப்பாணம்.பெப்.22

போரற்ற ஓராண்டு நிறைவேற்றதை அடுத்து கோப்பாய், இருபாலை கர்ப்பகப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

அத்துடன் பண்டிதர் த.இராசரத்தினத்தின் உரையும், மாதர் சிறாம முன்னேற்றச்சங்கத்தின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

மருதடி ஆலயத்தில் இன்று விசேட வழிபாடு

அரியாலை,பெப்.22

சமாதான தினத்தை முன்னிட்டு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடு இன்று சனிக்கிழமை முற்பகல் 11.30 மணி தொடக்கம் நடைபெறும்.

சமூக ஜோதி கா.கணேசதாசன், ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ ப.ஜெயகுமார குருக்கள் ஆகியோரின் பிரார்த்தனை உரைகளும் ஆசிரியை செல்வி து.சரோஜினிதேவியின் "சமாதானம் மலரட்டும்" என்ற கவிதை நிகழ்வும், மருதடி அநநெறிப்பாடசாலை மாணவர்களது கூட்டுப்பஜனை வழிபாடும் நடைபெறவுள்ளன. (ஐ-17)

ராஜா யாழ்ப்பாணம்

6 ஆவது வாரமாக

விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல்

வசீகரா

10.30, 2.30, 6.30

21 - 24 வரை

SPIDER MAN இரவு 9.30க்கு மட்டும்

நாகம்ஸ் சுன்னாகம்.

இன்று முதல்

ஜாம் பிராதர்ஸின், ரகுவரன், P.தேவன் நடித்த

மாயன்

காட்சிகள் தினசரி: 11.00, 3.00, 6.30 (மு.ப.)

நிறைஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல் (22.02.2003)

சரத்குமார் (இராமராஜ்), மீனா, குஷ்பு, நடித்த

நாட்டாமை

காட்சி நேரம். 11.00, 2.45, 6.00 (புதியநேரம்) வெள்ளி, சனி, ஞாயிறு இரவு (8.45) (புதிய நே.)

M.I.2

(C-2664)

லக்ஷ்மி இணுவில்

பிரசாந், சிம்ரன் நடித்த

ஜோடி

தினசரி 11.00, 3.00, 7.00 (மு.ப.)

குருநகர் மீன்வாடி தேநீர்ச்சாலையை நடத்த படைத்தரப்பில் அனுமதிமறுப்பு

குருநகர்,பெப்.22

குருநகர் மீன்பிடிப்பகுதியில் இயங்கி வந்த தேநீர்ச்சாலை தொடர்ந்து இயங்குவதை படையினர் தடை செய்துள்ளமையால் கரைதிரும்பும் மீனவர்கள் பாதிப்படைய நேரிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

குருநகர் சீநோர் மீன்வாடி புதிதாக இயங்கத்தொடங்கியது முதல் இத்தேநீர்ச்சாலையை நடத்த இராணுவத்தினர் அனுமதித்திருந்தனர். ஆனால், இத்தேநீர்ச்சாலையை நடத்த படையினர் தற்போது அனுமதி மறுத்துள்ளனர்.

தொழிலுக்காக கடலுக்கு சென்று கரைதிரும்பும் மீனவர்களுக்கு உணவு மற்றும் தண்ணீர் போன்ற உடனடித் தேவைகளை பூர்த்தி செய்த இத் தேநீர்ச்சாலை செயற்படாததனால் மீனவர்கள் உடற்சோர்வுடனேயே மீன் பிடித்து வரும் கடலுணவுகளை மீன் வாடிக்கு தூக்கி செல்லநேரிடுவதாக கூறப்படுகிறது.

இத்தேநீர்ச்சாலையை தொடர்ந்து செயற்பட அனுமதிக்குமாறு குருநகர் இராணுவமுகாம் பொறுப்பதிகாரிக்கு தாம் மகஜர் சமர்ப்பித்துள்ளதாக குருநகர் மீனவர் சங்கங்கள் தெரிவித்தன.

(ஒ-51)

ஜே.வி.பி. ஊர்வலத்தின்போது

செய்தியாளர் தாக்கப்பட்டதற்கு சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

கொழும்பு,பெப்.22

நேற்று முன்தினம் ஜே.வி.பியினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் மீது பொலீஸார் மேற்கொண்ட தாக்குதல் குறித்து சுதந்திர ஊடக இயக்கம் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

தாக்குதலுக்கு உள்ளாகிய ஓர் ஊடகவியலாளர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றொருவரின் புகைப்படக்கருவி பொலீஸாரால் சேதமாக்கப்பட்டது.

மானிப்பாயில் இரு வாரங்களுக்கு முன்னர் படையினர் செய்தியாளர் மீது தீவிர தாக்குதல் நடத்தியிருப்பதாகவும் இவ்வியக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த இரு சம்பவங்களின் போதும் பாதுகாப்புப் படையினர் ஊடகவியலாளர்களின் தொழில் உரிமைகளை மீறியுள்ளதாகவும் -

இத்தகைய சம்பவங்களைத் தடுப்பது ஜனநாயக அரசின் கடமை என்றும் - சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜே.வி.பியினரின் ஊர்வலம் தொடர்பான சம்பவம் பற்றி பொலீஸ் தலைமையகம் அளித்த விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டதாவது:-

அனுமதி அளிக்கப்படாத ஊர்வலத்தை திறந்துவது குறித்து ஜே.வி.பி. தலைவர்களுடன் வினாவிய பின்னர் அவர்கள் காலிபகொடவில் இருந்து நகர மண்டபத்தின் அருகிலுள்ள வீரன் சதுக்கம் வரை ஊர்வலம் நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

ஆனால், இந்த அனுமதியை ஆர்ப்பாட்டக்காரர் மீறியதால் கொழும்பு நகரில் பாரிய போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. அவர்கள் ஒழுக்கக் கட்டுப்பாட்டை மீறியபோது கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீச வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஒ-5-9)

துயர் பகிர்கின்றோம்

எமது நிறுவனத்தின் உபபோஷகரும் பிரபல சமூக சேவையாளரும் தேசப்பற்றாளருமாகிய

கார்த்திகேசு சந்திரராசா

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்கி அவரது ஆத்மாசாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

[illegible]

(14842)

மரண அறிவித்தல்

கந்தையா - சண்முகலிங்கம்

(ஓய்வு பெற்ற மரக்கூட்டுத்தாபன ஊழியர்)

அரியாலை, ஆனந்தன் வடலி வீதியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட சின்னவன்னை என அன்பாக அழைக்கப்படும் கந்தையா சண்முகலிங்கம் நேற்று (21.02.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - செல்லாச்சி தம்பதிகளின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும் ஜீவந்தினி (பிரான்ஸ்), பிரபாகரன் (நோர்வே), ஆனந்தி (லண்டன்), ரீதரன் (லண்டன்), ஜெயந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் (உத்தரவு பெற்ற வர்த்தகர் - தபாற்கட்டைச்சந்தி), பாலசிங்கம் (ஓய்வு பெற்ற அதிபர்), தியாகராசா (ஓய்வு பெற்ற எழுதுநர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்), மற்றும் நல்லம்மா, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரஜனி, சுஜ்சினி, நந்தசுதன், வினோதினி ஆகியோரின் அன்பு மாமனாரும் சந்தானலட்சுமி, சிவஞானவதி (ஓய்வுபெற்ற ஆசிரியைகள், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை (ஓய்வுபெற்ற காசாளர் - சமுதாக் கூட்டுத்தாபனம்), அருளம்பலம் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்), இந்திரனம், லட்சுமி மற்றும் சின்னம்மா, சோமசுந்தரம் (ஓய்வு பெற்ற ஆராட்சியாளர், மாநகர சபை) ஆகியோரின் மைத்துனரும் ரஜீந்தன், கிருஷாந், சௌமியா, கபிலன், துவாரகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

தகவல்:

248, ஆ.வ.வீதி, அரியாலை.

க.நல்லம்மா (சகோதரி), கி.நகுலேஸ்வரி (சகோதரி).

(14843)

இயல்பு வாழ்க்கையில் முன்னேற்றம் இல்லாததால்

உடன்படிக்கையின் ஒருவருடப் பூர்த்தியை கொண்டாடும் நிலையில் தமிழர்கள் இல்லை

வவுனியா வெகுசன அமைப்புகள் பிரதமருக்கு கடிதம்

வவுனியா,பெப்.22

இயல்புவாழ்க்கையில் முன்னேற்றம் இல்லாததால் புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஒருவருடம் பூர்த்தியை கொண்டாடும் நிலையில் தமிழர்கள் இல்லை.

-இவ்வாறு தெரிவித்துள்ளது வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம்.

இதுதொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒன்றியம் அனுப்பியுள்ள கடித்ததிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு இன்றுவரை எமது தமிழினம் பல வழிகளிலும் சாத்வீகப் போராட்டங்கள் மூலமாக தமது அபிலாஷைகளையும் சுயநிர்ணய உரிமைகளையும் பெறுவதற்காக பல ஒப்பந்தங்கள் செய்தும் அவை நிராகரிக்கப்பட்ட சூழ்நிலையில் - பெரும்பான்மை இனம் தன்னாதிக்கம் கொண்டவேளையில் - தமிழினம் தமது பாதுகாப்பை இழக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதன் அடிப்படையில் தம்தலைவிதியை நிர்ணயிப்பதற்கு வேறுவழியின்றி தமிழீழமே தமிழினத்தின் கடைசித் தீர்வென தமிழ்மக்களால் பிரகடனப் படுத்தப்பட்டது.

அதனை அரசு சட்டரீதியாக ஏற்காத காரணத்தினால் துரதிர்ஷ்டவசமாக தமிழினம் தமது அபிலாஷைகளை பெறுவதற்காக ஆயுதம் ஏந்திப்போராடவேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த ஆயுதப் போராட்டமானது கால் நூற்றாண்டுகாலமாக கொடிய அழிவுகளுக்கு மத்தியில் நடைபெற்றது. இந்த யுத்தத்தினால் பல்லாயிரக்கணக்காண தமிழ் மக்களும் பலகோடி ரூபா பொருளாதார அழிவுகளும் வரலாறு காணாத சமூக, சமுதாய சீரழிவுகளும் ஏற்பட்டன. அவ்வேளையில் சிங்கள அரசு யுத்தத்தின் மூலம் வெற்றி காணமுடியாத நிலையில் 2002 ஆம் ஆண்டு யுத்தநிறுத்த உடன்படிக்கை தமிழ்பேசும் மக்கள் சார்பாக தமிழினத்தின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனாலும் சிங்கள தேசத்தின் சார்பாக ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினாலும் கைச்சாத்திடப்பட்டது.

இருந்தும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் காட்டப்பட்ட பிரகாரம் தமிழ்மக்களின் இயல்பு வாழ்க்கையில் திருப்திகரமான முறையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. பல பேச்சுகள் பல நாடுகளில் பல இராஜதந்திரிகள் மத்தியில் நடைபெற்றவேளையில் பேச்சுகளில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் கூட அமுல்படுத்தப்படவில்லை. எனவே இன்றைய சூழலில் தமிழினம் பலம்வாய்ந்த ஒரு கொடியின் கீழ் ஒரு விருட்சமாக இருந்தும் கூட அரசு இதை பேச்சிலேயே இழுத்துக்கொண்டு செல்லுகின்றதே தவிர நிரந்தர சமாதானத்திற்கான தீர்வை ஏற்படுத்தும்வகையில் செயற்படவில்லை.

இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து ஒரு வருடகாலமாகியும் கூட தமிழ் இனத்தை அரசு இனவாத நோக்கோடு உற்றுநோக்குகின்றது. எனவே, உடன்படிக்கையின் காரணமாக நன்மையடைவது அரசு மட்டும்தான். தமிழினத்தின் அபிலாஷைகளும், விருப்புகளும், உரிமைகளும் நிறைவேற்றப்படவில்லை. இதனடிப்படையில் தமிழினம் எப்படி சமாதான ஓர் ஆண்டு பூர்த்தியை கொண்டாடமுடியும்? எனவே இந்நிகழ்வை கொண்டாட முடியாத நிலையிலேயே எம்மக்கள் உள்ளனர் என்றுள்ளது. (ஒ)

இன்றைய ஆட்டங்கள் - பெப். 22

தென்னாபிரிக்கா	Vs	பங்களாதேஷ்	2.00p.m.
இங்கிலாந்து	Vs	பாகிஸ்தான்	6.30p.m.

மரண அறிவித்தல்

திருமதி தருமலிங்கம் இரத்தினபூபதி

வண்ணார்பண்ணை, துரைராசா வீதியைச் சேர்ந்த திருமதி தருமலிங்கம் இரத்தினபூபதி நேற்று (21.02.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2003) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 4மணியளவில் கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

10, துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (14843)

தகவல்: த.பாலேந்திரன் (மகன்).

படையின ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போராட்டத்துக்கு யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் ஆதரவு தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

சகல துறைகளைச் சேர்ந்தவர்களையும் இந்தப் போராட்டத்தில் பங்கு பற்றுமாறு ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. (ஒ

இறந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

டம் கோரினோம்.

இலங்கை அரசு கடலங்களை ஏற்க மறுத்துவிட்டது. அக்கடலங்களை இராணுவ மரியாதையுடன் கொக்காவில் பகுதியில் அடக்கம் செய்தோம் - என்று தெரிவித்தார்.

படையினர் அடக்கம் செய்யப்பட்ட இடத்துக்குச் சென்று அஞ்சலிசெலுத்த விரும்புவதாக பொலீஸார் அப்போது கேட்டுக்கொண்டனர். இதனையடுத்து அவர்கள் அங்கு கூட்டிச் செல்லப்பட்டனர்.

அங்கு தங்கள் சகாக்களுக்காக உருக்கமாக அஞ்சலி செலுத்தினர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் ஏ-9 வீதியூடாக வன்னிக்கு வந்த முதலாவது பொலீஸ் கோஷ்டி இது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-3-164)

அந்தியேட்டி அழைப்பும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம் 09 - 06 - 1934

மறைவு 18 - 01 - 2003

திருமதி கமலாம்பிகை அம்மா கனகலிங்கம்
(முகமாலை)

"கனிவின் கருவாய் அருவாய் உருவாய்
திருவாய் மலராய் வருவாய் அம்மா!"

கடந்த 18.01.2003 அமரத்துவமடைந்த எமது குடும்ப குல விளக்கு திருமதி கமலாம்பிகை அம்மா அவர்களின் அந்தியேட்டியும், ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் நாளை (23.02.2003) ஞாயிறு காலை 10 மணியளவில் எமது கற்போதைய வதிவிடமாகிய 158, பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கில் நடைபெறவுள்ளது. உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரையும் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

நிரந்தர முகவரி:
முகமாலை,
எழுதுமட்டுவாள். (14543)

தற்போதைய முகவரி:
இல.158, பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

-குடும்பத்தினர்.

முகமாலை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் முகமாலையில் தனது கடமையைப் பொறுப்பேற்கச் செல்லும் சமயமே தவறுதலாக புலிகளின் பகுதிக்குள் பிரவேசிக்க நேர்ந்தது என்றும் அவர் சார்பில் ஆஜரான சட்டவாளர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

தெல்லிப்பழையிலிருந்து நேற்று முன்தினம் படையினரின் வாகனம் ஒன்றில் ஏறி யாழ்.நகருக்கு வந்த இவர் அங்கிருந்து முகமாலைக்கு போக்குவரத்துச் சபை பஸ்ஸில் சென்றார் என்றும் -

முகமாலையில் முன்னரங்க நிலைக்குச் சென்ற இவரை அங்கிருந்த படையினர் வழிமறித்து விசாரித்துவிட்டு மேலும் சிறிது தூரம் முன்னோக்கிச் செல்லுமாறு தெரிவித்தனர் என்றும் - கூறப்படுகிறது.

இதையடுத்து அந்த கான்ஸ்டபிள் படையினரின் முன்னணி நிலையைத் தாண்டி புலிகளின் பகுதிக்குள் சென்ற பஸ் ஒன்றில் ஏறி அங்கு சென்று இறங்கினார் எனவும் கூறப்பட்டது.

புலிகளின் முன்னரங்க நிலை எங்குள்ளது என்ற விவரத்தை தெரிந்திராத காரணத்தினாலேயே அவர் புலிகளின் பகுதிக்குள் பிரவேசிக்க நேர்ந்தது என்று சட்டவாளர் விளக்கமளித்தார்.

பிரஸ்தாப கான்ஸ்டபிள் மீதான புலன் விசாரணைகள் பூர்த்தியாகவில்லை என்று காவல் துறையினர் மன்றில் தெரிவித்ததை அடுத்து அவரை அடுத்த மாதம் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதியாளர் உத்தரவிட்டார்.

குறிப்பிட்ட கான்ஸ்டபிள் விளக்கமறியலில் இருக்கும் சமயம் சட்டவாளரையும், குடும்பத்தினரையும் சந்திப்பதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (ஐ-3)

இராணுவமும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லெபனான் போன்று இங்கு சமாதானப் படை செயற்படவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இரு தரப்பினரின் பொறுப்புணர்வு போதுமானது.

இரு தரப்பினரும் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கமாட்டார்கள் என நான் நம்புகிறேன். தீவிரவாதப் போக்குடையவர்கள் மட்டில் நாம் கவனமாக இருக்கவேண்டும். இரு தரப்பினரிலும் இத்தகையவர்கள் இருப்பது பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும்.

இவ்வாறு ரொன் புறூவ் கோவ்டேயினார். (ஒ)

திறப்பு விழா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணை ஒன்றை விவாதிக்கச் சந்திரசேகரன் சபாநாயகரிடம் அனுமதி கேட்டபோது அதை நேற்று ஒத்திவைப்புப் பிரேரணையாக சமர்ப்பிக்க சபாநாயகர் அனுமதி அளித்தார்.

அதை அடுத்து காலை முதல் சபையில் அமர்ந்திருந்தார் சந்திரசேகரன். சபை ஒத்திவைப்பு வேளை வந்ததும் பிரேரணையை முன்மொழியுமாறு சந்திரசேகரனை சபையில் அழைத்தார் குழுக்களின் பிரதித் தலைவர். அப்போது சந்திரசேகரன் சபையில் இல்லை.

அப்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் "எங்கே சந்திரசேகரன்? ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு சென்று விட்டாரா? என்று கேள்வி எழுப்பினர்." (ஒ)

'ஹெல்மெட்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸ்காரரிடம் விசாரணை மேற்கொண்டேன். பின்னர் அவர் லஞ்சமாகப் பெற்ற பணத்தினை மீளப் பெற்று உரியவரிடம் ஒப்படைத்தேன்.

இந்தச் சோதனைச் சாவடியில் இத்தகைய சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருவதாக எனக்கு ஏற்கனவே முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றார் என்றார் அவர்.

- இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட பொலீஸ்காரர் தொடர்பாக மேலதிகாரிகளுக்கு முறையிடப்போவதாகவும் ஆர்.பி.சந்திரசேகர மேலும் தெரிவித்தார். (ஒ-5)

வாகனங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனங்களை மீளக்கையளிக்க மறுக்கும் தலைவர்களுக்கு எதிராக தனித்தனியே சட்ட நடவடிக்கை எடுப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

சபைகளின் செயற்பாடுகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது. (ஒ-8-10)

குடாநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

கள் தரப்பில் பலவிதமான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த வகையில், குடாநாட்டில் இன்று காலை 10 மணிவரை சகல சேவைகளையும் ஸ்தம்பிதம் அடையச்செய்யும் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்தப்போராட்டம் தொடர்பாக மனித நேய அமைப்புகளின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒருவருடம் நிறைவடையும் வேளையில் வடக்கு - கிழக்கு வாழ் மக்களின் வாழ்க்கையில் இயல்பு நிலை இதுவரை ஏற்படாததற்கு அதிருப்தியை தெரிவிக்கும் வகையில் குடாநாட்டு மக்கள் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிவரை ஏ - 9 பாதை உட்பட மற்றும் தனியார் போக்குவரத்துக்கள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புக்கள் உட்பட தமது இன்றைய அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தி குடாநாட்டை ஸ்தம்பிக்கவைத்து ஏகோபித்த, ஒன்றுபட்ட அதிருப்தியையும் ஏமாற்ற உணர்வலைகளையும் அரசுக்கும் சர்வதேசத்துக்கும் தெரிவிக்கவேண்டும்.

எனவே தமிழ் மக்கள் அனைவரும் தமது இன்றைய செயற்பாடுகள் அனைத்தையும் காலை 10 மணிவரை நிறுத்தி ஒன்றுபட்ட அதிருப்தியை தெரிவிக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட மனித நேய அமைப்புகளின் ஒன்றியம் அன்புடன் கேட்டுக்கொள்கிறது- என்றுள்ளது.

இன்றைய போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம், வடமாகாண அதிபர்கள் சங்கம் உட்பட பல அமைப்புகள் அறிக்கைகள் வெளியிட்டுள்ளன. (ஒ-3-10-17-30-40)

முக்கிய அறிவித்தல்

இலங்கையின் முன்னணி ஆசிரியர்கள் கலந்துகொள்ளும் விசேட கருத்தரங்கு

BIOLOGY
By:-நாகநாதன்

C.MATHS
By:-குணசிங்கம்

ஆரம்பம் : 25.02.2003
9.00a.m.
பதிவுகளை உடன் மேற்கொள்வீர்.

NEW SCIENCE CENTRE

(4709)

இரத்தம் உடன் தேவை

தீவிர சிக்சைப் பிரிவிலுள்ள நோயாளிக்கு O⁻ இரத்தம் உடன் தேவை. வழங்க முன்வருவோர் கீழ்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

0777-111035
021-2263048
(14837)

பெற்றோர்கள், மாணவர்கள் கவனத்திற்கு

யாழ் மாவட்டத்தில் எமது கணனிப் பயிற்சிக் கல்லூரி

ASIAN COMPUTER SYSTEMS

2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

எனும் முகவரியில் மட்டுமே அமைந்துள்ளது.

எமக்கு யாழ் குடா நாட்டில் வேறு கிளைகள் கிடையாது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.02.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உத்தரவு வந்தால் போதும் படைகள் தயார் நிலையில்

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்

ரம்ஸ்பீல்ட்

வாஷிங்ரன்,பெப்.22

வளைகுடாப் பகுதிக்கு போதுமான அளவு துருப்புக்கள் அனுப்பப்பட்டுவிட்டன. இனித் தாக்குதலுக்கான உத்தரவு மட்டுமே கிடைக்க வேண்டும் என்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க மற்றும் ஏனைய துருப்புக்கள் எப்போதும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பதற்குத் தயாராக வளைகுடாவில் தரித்து நிற்பதாக ரம்ஸ்பீல்ட் தெரிவித்தார்.

மறுபுறத்தில் ஈராக்குக்கு எதிரான போருக்கு அனுமதி கோரும் புதிய தீர்மானம் ஒன்றை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அடுத்த வாரம் தாம் சமர்ப்பிக்கப்போவதாக அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் கொலின் பவல் தெரிவித்தார். ஈராக்குக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்கனவே அதிகாரம் கிடைத்துள்ளபோதும் தான் இதனைச் செய்யப்போவதாக அவர் சொன்னார். கடந்த நவம்பரில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி பேரழிவுதரும் ஆயுதங்களை ஈராக் ஒழிக்கவில்லை எனவே, அதன் மீது நடவடிக்கை எடுக்க அத் தீர்மானத்தின்படி எமக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கின்றது என்றார் அவர்.

அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கு நேர்விரோதமான நிலையை பிரான்ஸ் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. ஈராக்கில் ஆயுத சோதனையில் ஈடுபடும் பரிசோதகர்களுக்கு, பேரழிவு தரும் ஆயுதங்களைக் கண்டுபிடிக்க உதவும் வகையில் அது ஏற்கனவே இரு உளவு விமானங்களை அங்கு அனுப்பிவைத்துள்ளது.

இந்நிலையில், "நாம் குறிவைத்து வட்டோம். இப்போது அதிபர் புஷ் தீர்மானிக்கவேண்டியதுதான் எஞ்சியுள்ளது. போரை ஆரம்பிக்கவேண்டிய அனைத்தையும் பாதுகாப்புத் திணைக்களம் தயாரித்தாகிவிட்டது" - என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க விசேட கொமாண்டோக்கள்

அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து வளைகுடாப் பகுதியில் ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட துருப்புக்களைக் குவித்து வைத்துள்ளன. டசின் கணக்கான யுத்தக் கப்பல்கள் அங்கு நிறுத்தப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான விமானங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மேலும் துருப்புக்களும் தளபாடங்களும் அப்பகுதி நோக்கி அனுப்பப்பட்டுவருகின்றன.

போதுமான அளவு தயார்ப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அப்படியாயின் எப்போது போர் ஆரம்பிக்கப்படும் என்று கேட்கப்பட்டபோதே ரம்ஸ்பீல்ட் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதிபர் புஷின் உத்தரவுக்காக படைகள் காத்திருக்கின்றன என்றார் அவர்.

இதேவேளை -

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் பாதுகாப்புச் சபையில் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்பட இருக்கும் தீர்மானம் பற்றி கூறும் போது, அது ஈராக் தொடர்பாக முறைப்பாடுகளைத் தெரிவிக்கும் தீர்மானமாக இருக்காது. தற்போதைய நிலைமையின் சாரமாக அது அமைந்திருக்கும் என்றார். "பாதுகாப்புச் சபையின் தீர்மானத்துக்கு ஈராக் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்ற விடயத்தையே தீர்மானம் குறிப்பிட்டுக் காட்டும்" - என்றார் பவல்.

கொலின் பவல்

இதற்கிடையில், அமெரிக்க இராணுவ திட்டமிடலாளர்கள், ஈராக் தொடர்பான போரில் துருக்கியின் தெளிவான நிலைப்பாடு குறித்து அறியக் காத்திருக்கிறார்கள். ஈராக்கின் தென்புறத்தில் இருக்கும் துருக்கி, அமெரிக்காவின் நட்பு நாடு. எனினும், பாதுகாப்புச் சபையின் ஆதரவின்றி நடக்கும் தாக்குதலுக்கு தான் ஆதரவு தரமாட்டேன் என்று முன்னர் தெரிவித்திருந்தது. (மு)

இஸ்ரேலியர் தாக்குதலில் மூன்று பலஸ்தீனர்கள் பலி!

ஜெருசலேம்,பெப்.22

இஸ்ரேலிய இராணுவத்தினரின் தாக்குதலில் மூன்று பலஸ்தீனர்கள் நேற்றுக் கொல்லப்பட்டனர்.

மேற்குக்கரை நகரான நப்லுஸில் இஸ்ரேலியப் படைகள் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் 17 வயதான பலஸ்தீனச் சிறுவன் ஒருவனும் அவனது பேரனாரும் கொல்லப்பட்டனர்.

தம்மீது சிலர் வெடிகுண்டுகளைத் தூக்கி வீசியதனாலேயே தாம் திருப்பிச் சுடவேண்டி வந்ததாக இஸ்ரேலிய இராணுவத்தினர் தெரிவித்தனர்.

மூன்றாவது பலஸ்தீனர், முன்னதாக மேற்குக்கரை நகரான துல்கரத்தில் இஸ்ரேலியத் துருப்பினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று இறந்தவர்களுடன் சேர்த்து கடந்த சனிக்கிழமைக்குப் பின்னர் இதுவரை 27 பலஸ்தீனர்கள் இஸ்ரேலிய இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளனர். சனிக்கிழமையன்று பலஸ்தீன ஆயுததாரிகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் இஸ்ரேலிய பாங்கி ஒன்று சிக்கியதில் மூன்று இராணுவத்தினர் உயிரிழந்தனர். அதற்குப் பழிவாங்கும் வகையில் நடந்த தாக்குதல்களிலேயே இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டன.

இதற்கிடையில், காஸா பிரதேசத்தைத் தன் பாதுகாப்புக் கருதி இஸ்ரேலியப் படை மூன்று வலயங்களாகப் பிரித்துள்ளது. பலஸ்தீன ஆயுததாரிகள் இஸ்ரேல் படைகள் மீது காஸாவில் ரொக்கெட் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து இந்த நகர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், காஸாவுக்கு வெளியே இருந்து இஸ்ரேலிய நிலைகள் மீது மீண்டும் பல தடவைகள் ரொக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதேவேளை, லண்டனில் நான்குக்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சமாதானப் பேச்சு ஏற்பாட்டாளர்கள் பலஸ்தீன அதிகாரசபை அமைச்சர்களுடன் பேச்சு நடத்தினர். வன்முறைகளைத் தவிர்த்து சமாதானத்தைக் கொண்டு வருவது எப்படி என்று அவர்கள் விவாதித்தனர். அந்தக் குழுவில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா, ஐ.நா. ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கியிருந்தனர்.

மேற்குக்கரை மற்றும் காஸா பிரதேசத்தில் இஸ்ரேல் மேலும் மனிதாபிமான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்று அவர்கள் கேட்டுள்ளனர். (மு)

பிலிப்பைன்ஸில் அமெரிக்கச் சிப்பாய் ஒருவர்.

இரவு விடுதியில் தீ விபத்து 100 இற்கும் மேற்பட்டோர் காயம்!

நியூயோர்க்,பெப்.22

அமெரிக்காவின் கிழக்கு மாகாணத்தில் இரவு விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் குறைந்தது பத்துப் போ உயிரிழந்தனர்; 100இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

தீ விபத்து ஏற்பட்டபோது அந்தக் கட்டடத்துக்குள் பல நூற்றுக்கணக்கான மக்கள் குழுமி இருந்தனர்.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகம் என்று வேறு சில செய்திகள் தெரிவித்தன.

கடந்த ஞாயிறன்று சிக்காக்கோவில் உள்ள இரவு விடுதி ஒன்றில் இடம்பெற்ற சண்டையைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடியில் சிக்கி 21 பேர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

கிளின்ரனின் இந்திய விஜயம் ரத்து

நியூயோர்க்,பெப்.22

இந்த மாதம் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின்ரனின் விஜயம் பாதுகாப்புக் காரணங்களால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்கப் பாதுகாப்புத் துறையின் கோரிக்கையை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கிளின்ரனின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஈராக் பிரச்சினை மற்றும் அமெரிக்கப் பிரஜைகள் மீது தீவிரவாதிகளின் தாக்குதல் அச்சுறுத்தல் ஆகிய விடயங்களைக் கருத்தில் கொண்டு அமெரிக்கப் பாதுகாப்புத் துறை விடுத்த கோரிக்கையின்பேரில் அவரது விஜயம் ரத்துச் செய்யப்பட்டது என்றார் கிளின்ரனின் அதிகாரியான டேவிட் ஸ்லேட். (ம)

அணிசேரா நாடுகள் பொது முடிவை ஈராக் விவகாரத்தில் எட்டவேண்டும்

கோலாலம்பூர்,பெப்.22

ஈராக் பிரச்சினை தொடர்பாக அணிசேரா நாடுகள் ஒரு பொது முடிவை எட்டவேண்டும் என்று அணிசேரா நாடுகள் அமைப்பில் இடம்பெற்றுள்ள மலேஷியா கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக அனைத்து நாடுகளும் கூடி விரைவில் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவேண்டும் என்றும் அது கூறியுள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் மற்றும் மனித உரிமை மீறல்கள் போன்ற விடயங்களில் மூன்றாம் உலக நாடுகளுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் இரட்டைவேடம் போடுகின்றன மேற்குலக நாடுகள் என்றும் மலேஷியா குற்றஞ்சாட்டியுள்ளது.

அணிசேரா நாடுகளின் மாநாடு நாளைமறுதினம் 24ஆம் திகதி மலேஷியாவில் ஆரம்பமாகின்றது. 114 நாடுகள் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றன. அதில் இலங்கையும் ஒன்று. இந்த மாநாட்டுக்கு முன்னோடியாக அணிசேரா நாடுகளின் அதிகாரிகள் நிலையிலான கூட்டம் கடந்த வியாழனன்று கோலாலம்பூரில் ஆரம்பித்தது. அதில் உரையாற்றிய மலேஷிய வெளிவிவகார அமைச்சர் மேற்கண்ட கோரிக்கையை அங்கு முன்வைத்தார்.

ஈராக் பிரச்சினை தொடர்பாக தமக்கான ஒரு பொது நிலைப்பாட்டை அணிசேரா நாடுகள் மேற்கொள்ள வேண்டும். அரசுமுறைப் பேச்சுக்கள் மூலம் பிரச்சினையைத் தீர்க்க வழி இருக்கும்போது யுத்தத்தின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயற்சிக்கக் கூடாது. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பேச்சு மூலம் தீர்வுகாணவேண்டும் என்பதே எமது கோரிக்கை.

மனித உரிமை மீறல்கள் குறித்து மூன்றாம் உலக நாடுகளுக்கு மேற்குலக நாடுகள் போதனை செய்கின்றன. ஆனால், இனவெறி, நிறவெறி என்ற அடிப்படையில் மேற்குலக நாடுகளில் மக்களிடையே பாரபட்சம் மிக மோசமாக உள்ளது. மனித உரிமைகள் பிரச்சினையில் மேற்குலக நாடுகள் இரட்டைவேடம் போடுகின்றன.

இதேவேளை -

அணிசேரா நாடுகள் அமைப்பில் மேலும் இரு நாடுகள் புதிதாக இணைந்துள்ளன. கிழக்குத் திமோர், செயின்ட் வின்சென்ட் ஆகிய நாடுகளே புதிதாக இணைந்துள்ளன. இதனையடுத்து அமைப்பின் மொத்த எண்ணிக்கை 116ஆக உயர்ந்துள்ளது. (ம)

காஸாவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் ஆயுததாரிகள்.

தீவிரவாதத்துக்கு எதிரான போரில் பிலிப்பைன்ஸில் அமெ. துருப்புகள்

பிலிப்பைன்ஸில் தீவிரவாதிகளுக்கு எதிராகப் போரிட்டு வரும் அந்த நாட்டுப் படைகளுடன் அமெரிக்கப் படையினரும் இணைந்து கொண்டுள்ளனர். நூற்றுக்கணக்கான அமெரிக்கத் துருப்பினர் தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் பிலிப்பைன்ஸ் படைகளுடன் இணைந்து செயற்பட ஆரம்பித்துள்ளனர் என்று வாஷிங்ரனில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தென் பிலிப்பைன்ஸ் தீவான ஜோலோவில் உள்ள ஆபு சாயப் இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு எதிராக அரச படைகள் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளன. அந்த நடவடிக்கையில் அமெரிக்கத் துருப்பினரும் இணைந்துள்ளன. அமெரிக்க கடற்படையினரும் இதற்கு ஆதரவு வழங்குகின்றனர்.

தமது துருப்பினர் பிலிப்பைன்ஸ் இராணுவ உயரதிகாரிகளின் கட்டளைக்குக் கீழேயே பணியாற்றுவர்கள். ஆனால், சண்டையில் ஈடுபடுவர்கள் என்று வாஷிங்ரனில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிலிப்பைன்ஸில் அமெரிக்கப் படைகள் மீண்டும் தரையிறங்கிய போது, அவை பிலிப்பைன்ஸ் படையினருக்கு பயிற்சிகளை வழங்குவதுடன் அவர்களுடன் இணைந்து தீவிரவாதத்துக்கு எதிரான போர் குறித்து பயிற்சிகளை மட்டுமே மேற்கொள்வர்கள் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. இப்போது அதற்கு மாறாக அங்கு அமெரிக்கப் படையினர் தாக்குதல்களில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் அமெரிக்காவின் முன்னாள் குடியேற்றநாடு. தன் மண்ணில் வேற்றுநாட்டுப் படைகள் சண்டையிடுவதை பிலிப்பைன்ஸ் அரசியல் சட்டம் தடுக்கின்றது.

இதனால், அமெரிக்கப் படைகள் பயிற்சியில் மட்டுமே ஈடுபடுகின்றன. சண்டையில் ஈடுபடவில்லை என்று பிலிப்பைன்ஸ் இராணுவ அதிகாரிகள் கூறிவருகின்றனர். (ம)

கண்ணீர் அஞ்சலி

கல்வித் திணைக்கள முன்னாள் நிர்வாக உத்தியோகத்தரும், வலிகாமம் மேற்கு முன்னாள் பிரதேச செயலரும், மேலதிக அரச அதிபரும் தற்போது ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிக நிறுவன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தரும், யாழ். மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராக தேர்தல் களத்தில் நின்றவரும் தாம் வகித்த பதவிகளில், பிரதேச செயலராக இருந்த காலத்தில் மக்களின் தேவைகளையறிந்து மக்கள் தொண்டே மகேசன் தொண்டென மதித்து மக்களுக்கும் கிராமத்துக்கும் சேவைசெய்து மக்கள் மனங்களில் அணையாத ஒளிவிளக்காய் விளங்கியவருமான

கார்த்திகேசு சந்திரராசா

அவர்கள அகாலமரணமானார் என்ற செய்திகேட்டு மிகுந்த வேதனையடைந்தோம். அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

2ஆம் வட்டாரம், அராலி கிழக்கு. (14817)

- ஐயனார் கடற்றொழிலாளரும், கூட்டுறவுச் சங்கமும், மக்களும்.

அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயில்

காளையன் தோட்டம், வதிரி - கரவெட்டி

சமாதான தினத்தன்று விசேட வழிபாடு

தேசிய சமாதான தினத்தையொட்டி இன்று (22.02.2003) சனிக்கிழமை முற்பகல் 9மணிமுதல் மேற்படி ஆலயத்தில் விசேட பூஜை, பிரார்த்தனை, அமுது வழங்கல் என்பன நடைபெறும்.

(சி-26648) - தேவஸ்தானம்.

இளங்கலைஞர் மன்ற இசைவிழா

இன்றைய (22.02.2003) நிகழ்ச்சிகள்

மாலை 4.00 - 8.30

- ☆ மங்கள இசை - R.சிவகுமார் குழுவினர்
- ☆ மங்கள விளக்கேற்றல் - கவிஞர் சோ.பத்மநாதன்
- ☆ வீணை இசை - தயானி அறிவழகன்
- ☆ இசைப்போட்டி~2003 பரிசளிப்பு வைபவம் - பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை (துணைவேந்தர், யாழ்பல்கலைக்கழகம்)
- ☆ இசைக்கச்சேரி - V.K.நடராசா
- ☆ நர்த்தனாஞ்சலி - திருமதி ஆனந்தஜோதி தர்சனனின் மாணவிகள்.

(14811)

மேசன் (Meson) தேவை

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் கட்டடப் பணிகளுக்கு அனுபவம் வாய்ந்த மேசன் தொழிலாளர்கள் உடனடியாகத் தேவை.

தொடர்பு: கே.கே.ஆர்.பில்டேர்ஸ்

புதிய தபால் நிலைய கட்டடம்.
(யாழ்.பிரதான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு முன்பாக)

(14809)

சிறுநீரகதானம்

சுவிஸிலுள்ள சபாரட்ணம் செல்வகுமார் என்பவருக்கு A POSITIVE,O இரத்தம் கொண்டவருடைய சிறுநீரகம் தேவை. தானம் செய்பவருக்குத் தகுந்த சன்மானத்துடன் போக்குவரத்து வசதிகளும் செய்துதரப்படும்.

தொடர்பு: திரு. நா.சபாரட்ணம்
தொட்டிலடி,
சங்கானை.

தொலைபேசி: 021 222 5413.
222 3185.
070 212 875

(14800)

முக்கிய அறிவித்தல்

கைதடி வணிகர் கழக வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவும் - 2003

மேற்படி கூட்டம் நாளை (23.02.2003) ஞாயிறுக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு கழகத் தலைவர் திரு.நா.திருச்செந்திநாதன் அவர்கள் தலைமையிலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு.சிவநாத் அவர்கள் முன்னிலையிலும் கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

முக்கிய குறிப்பு:- வணிகர் கழக உறுப்பினர் மட்டும் குறித்த நேரத்திற்கு தவறாது சமுகந்தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நா.திருச்செந்திநாதன் தலைவர். (14815) க.பரமேஸ்வரன் செயலாளர்.

வடமராட்சி - தென்மராட்சி மக்களுக்கு இது ஓர் அரிய சந்தர்ப்பம்!

எம்மிடம் மேசைத்தொலைபேசிகள் விற்பனைக்கு உண்டு. நேரடித் தொடர்புகொள்வதற்கு ஏற்றவாறு இணைப்புகள் செய்துதரப்படும். மாதவாடகை உங்கள் பெயரிலேயே பதிவுசெய்து உங்கள் முகவரிக்கே அனுப்பிவைக்கப்படும்.

தொடர்பு: *தயாரகை தொலைத் தொடர்புநிலையம்*
லூர்து மாதா கோயிலடி,
நும்பளை, பருத்தித்துறை.

(14807) ☎ 070 213074, 0777 182369, 570244

மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ்.மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் க.இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகரும் சட்டத்தரணியுமான ஜனாப் எம். எம்.சபூர்டீன் கலந்துகொள்வார்.

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.22

கரணவாய் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் சி.நற்குணலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரனும், சிறப்பு விருந்தினராக முன்னாள் அதிபர் செ.சதானந்தனும் கலந்துகொள்வர்.

★ ★ ★

சாவகச்சேரி,பெப்.22

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் திங்கள் பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானத்தில் அதிபர் க.கைலேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமி கலந்துகொள்வார். (மு-31)

பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.22

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி திறந்தவெளியரங்கில் அதிபர் எஸ். சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் கலந்து கொள்வார். (மு-5)

ஆலய புனரமைப்பு வேலைகள் ஆரம்பம்

அராலி,பெப்.22

அராலி மத்தி குமுக்கன் குளம் நாச்சிமார் ஆலய புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெருந்தொகையான கூலித்தொழிலாளர்கள் வசித்துவரும் இப்பகுதியில் பகலில் ஊறுவடைவேலைகளில் ஈடுபடும் இவர்கள், இரவில் மின்சாரவெளிச்சத்தில் கல்லறிதல், அத்திபாரம் வெட்டுதல் போன்றவேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (மு-14)

தொலைக்கல்வி பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,பெப்.22

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் ஆசிரியர் தொலைக்கல்விப் பாடநெறி இறுதிப் பரீட்சை (பகுதிII) இன்றும் நாளையும் யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரையும் பின்னர் நண்பகல் ஒரு மணிமுதல் 4மணிவரையும் நடைபெறவுள்ள இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (மு-8)

சமுர்த்தி வங்கி திறப்புவிழா

யாழ்ப்பாணம்,பெப்.22

உடுவில் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளில் சமுர்த்தி வங்கிகள் இன்று சனிக்கிழமை வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

சமுர்த்தி உதவி ஆணையாளர் என்.சிவபாதசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வங்கிகளை திறந்து வைப்பார்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி வங்கி இன்று காலை 10 மணிக்கும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவின் சமுர்த்தி வங்கி பிற்பகல் 2 மணிக்கும் திறந்து வைக்கப்படவுள்ளன. (மு-8-10-86)

எமது புதிய வீடியோ CD வெளியீடு

பாண்டியராஜன் ரவாரின்

அன்புத்தொல்லை

திரை அரங்கிற்கு முன்னுரிமை.

கோபி வீடியோ சென்ரர்
குருநகர். (14808)

கண்ணீர் அஞ்சலி

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராகவும், யு.என்.எச்.சி.ஆர். நிறுவன ஆலோசகராகவும், கலை இலக்கிய வளர்ச்சியின் முன்னோடியாகவும் திகழ்ந்த,

கார்த்திகேசு சந்திரராசா

அவர்களின் அகாலமரணம் எமது பிரதேச மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருடன் நாமும் துயர் பகிர்வதோடு, எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலி.தென்மேற்கு பிரதேச செயலகம், சண்டிலிப்பாய். (C/26650)

உதவி பிரதேச செயலர்களும், நலன்புரிச்சங்க அங்கத்தவர்களும்.

கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளராக இருந்து வலிகாமம் மேற்கு பிரதேச மக்களுக்கு அரும்பெரும் சேவையாற்றியவரும் யு.என்.எச்.சி.ஆர். நிறுவன மாவட்ட இணைப்பாளராகப் பதவி வகித்து மாவட்டத்துக்கு அளப்பரிய சேவைகள் செய்தவருமான,

கார்த்திகேசு சந்திரராசா

அவர்களின் அகாலமரணம் எமது சமுதாயத்துக்கு ஒரு பேரிழப்பாகும். அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தாரோடு இணைந்து எமது கண்ணீர்ப் பூக்களைக காணிக்கையாக்குகின்றோம்.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைகருணை வேண்டிநிற்கும்:

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலர்களும் அனைத்து உத்தியோகத்தர்களும்.

(சி.26646)

மரண அறிவித்தல்கள்

முருகர் வேலாயுதம்

(ஓய்வுபெற்ற அதிபர், யா/குப்பிளான் விக்னேஸ்வரா ம. வி.)

கிளானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகர் வேலாயுதம் அவர்கள் நேற்று (21.02.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகர் - சின்னப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற சீனிட்டிபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாதேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/புன்னாலைக்கட்டுவன் அ.த.க.பாடசாலை) பாசமிகு கணவரும் ஜீவரூபன் (பகுதிநேர விரிவுரையாளர், யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி), முத்துரூபன் (AROD), சிவரூபினி (U.K.), தயாரூபினி, கர்வரூபினி (நுண்கலைப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்), தர்சாயினி (யா/வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீபரன் (U.K.), பரமானந்தம் (K.S.A.) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் விஸ்வாதிகா, சோபிராம் ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (22.02.2003) சனிக்கிழமை நடைபெற்று, பி.ப.1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக விலங்கன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மு.நடராஜா (சகோதரன் - ஆசிரியர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம். (14796)

திருமதி சின்னப்பு தங்கம்மா (குப்பிளான்)

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னப்பு தங்கம்மா 20.02.2003 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் - சின்னப்புவின் (கோல்டன் பிறஷ்ஷர் கொம்பனி) அன்பு மனைவியும் திருமதி வேலாயுதம் - கமலாதேவி (கனடா), சிவானந்தன் (இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தற்போது கனடா), பத்மாசலன் (சச்சிதானந்தா சொக்மென் பசுபதி அன் கொம்பனி), இராசகுலேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற வேலாயுதம், புஸ்பலட்சுமி, பரமேஸ்வரி, நீலலோஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (20.02.2003) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்

விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

பத்மாசலன் *(பாலு)*.
இராசகுலேந்திரன் *(குலம்)*.

(14810)

திருமதி சுப்பையா நல்லம்மா

கல்வயலைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பையா நல்லம்மா 19.02.2003 புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 20.02.2003இல் இந்தியாவில் நடைபெற்று அவரது பூதவுடல் அங்கேயே நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீனாட்சி அம்மன் கோவில் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல்: அஜித்காந்த் (பேரன்)

(14815)

யுத்தநிறுத்தத்துக்கு ஒரு வயது பூர்த்தி இதுவரை கிடைத்த பயன்கள் என்ன?

யுத்தநிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு இன்றுடன் ஓராண்டு பூர்த்தியடைகிறது. இந்த உடன்பாட்டால் கிடைத்த பயன்களை நடுநிலைமையுடன் ஆராய்கிறார் பிரபல சிந்தனையாளரும் பத்திரிகையாளருமான சுனந்த தேசப்பிரிய. 'ஞாயிறு லங்காதீப'வில் வெளியான அவரது கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

ஸ்ரீலங்கா அரசுக்கும், விடுதலைப் புலிகள் அமைப்புக்குமிடையேயான போர்நிறுத்த உடன்படிகை நடைமுறைக்கு வந்து இம்மாதம் 23 ஆம் திகதி ஓராண்டு பூர்த்தியாகிறது. நாட்டின் வரலாற்று நோக்கில் ஒரு வருடம் என்பது நீண்டதொருகாலம் அல்ல. ஆனால், இருபது ஆண்டுகாலமாக தொடர்ச்சியாக யுத்தம் இடம்பெற்ற நாடொன்றில் எதுவித யுத்த நடவடிக்கையுமின்றி ஓராண்டு காலம் கழிந்தமை மிகவும் முக்கியமான நிகழ்வே. இவ்விதம் நோக்குமிடத்து, போர்நிறுத்த உடன்பாட்டின் ஓராண்டு நிறைவு ஸ்ரீலங்காவின் வரலாற்றை விட எதிர்காலம் தொடர்பான மிக முக்கியமான சந்தர்ப்பமாக அமைகிறது.

போர்நிறுத்த உடன்பாடும் அதன் பலனாக இடம்பெற்றுவரும் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகவும் வெளிவரும் பொய்யான விமர்சனங்கள் போன்றே நிஜமான விமர்சனங்கள் தெரிவிக்கப்படுவதை நாம் அறிவோம். அவைபோன்றே சமாதான முயற்சிகளினபோது பாரதூரமான சவால்களுக்கும் முகங்கொடுக்க வேண்டி நேரிடுகிறது. இக்கருத்து மோதல்கள் மற்றும் விமர்சனங்கள் தொடர்பாகவும் தெளிவு பெறும் நோக்கில், போர் நிறுத்த உடன்பாட்டின் பயனாய் நாம் அடைந்த முக்கியமான 10 வெற்றிகள் எவை என ஆராய்தல் இத்தருணத்தில் பொருத்தமுடையது.

01) 2002 பெப்ரவரி 22 ஆம் திகதி முதல் 2003 பெப்ரவரி 22 ஆம் திகதி வரையான ஓராண்டு காலம் நாட்டில் போர் நடவடிக்கைகள் ஏதும் இடம்பெறாத காலமாகும்.

இதன் கருத்து யாது? கடந்த 20 ஆண்டு காலமாக சராசரியாக நாளொன்றுக்கு எட்டுப் பேரைப் பலி கொண்ட இந்நாட்டின் இனப்போர் நிறுத்தப்பட்டமை முக்கியத்துவம் வாய்ந்தது. இதன்மூலம் 3 ஆயிரம் வரையான மனித உயிர்கள் காப்பாற்றப்பட்டன. யுத்தத்தினால் அங்கவீனமடையவிருந்த மேலும் ஆயிரக்கணக்கானோர் அப்பயங்கர விபத்தினின்றும் காப்பாற்றப்பட்டனர். பாதுகாப்புப் படைகளில் கடமையாற்றிய வீரர்களின் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் உயிராபத்துபற்றிய அச்சமின்றி கடந்த ஒரு வருட காலத்தைக் கழித்தனர். யுத்தப்பிரதேசத்தின் எல்லைப்புறக் கிராமத்தில் வாழ்ந்து வரும் மாணவர்கள் பயமின்றி, சமாதானச் சூழலில் மகிழ்ச்சியுடன் பாடசாலை சென்றுவர முடிந்தது. அதேபோன்று யுத்தப் பிரதேசமான வடக்கு - கிழக்கு பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கு விமானக்குண்டு வீச்சுக்கள் தொடர்பாக இருந்த பயம் ஒழிந்தது. அவர்களது வாழ்வில் படிப்படியாக இயல்புநிலை தோன்ற ஆரம்பித்தது. நாம் அறிந்த வரையில் வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கு வெளியிலும் யுத்தம் காரணமாக மரணப்பயத்தையும், குண்டுத் தாக்குதலால் ஏற்பட்ட வெடிமருந்து நெடியையும் காண முடியவில்லை.

(போர் நிறுத்தத்தால் பெறப்பட்ட பாரிய வெற்றி இதுவே. அதாவது, இந்நாட்டுப் பொதுமக்கள் யுத்த அச்சுறுத்தலின்றி ஓராண்டுகாலத்தைக் கழிக்க வழியேற்பட்டது. இது மனிதாபிமான வெற்றியென்பதால் இன்று எந்த அரசியல்கட்சி ஆட்சி பீடம் ஏறினாலும் மீண்டும் யுத்தத்தை அவர்களால் ஆரம்பிக்கமுடியாத நிலை உருவாகியுள்ளது.

02) வடக்கு - கிழக்கு வாழ் பொதுமக்கள் மீது சுமத்தப்பட்டிருந்த பொருளாதாரச் சுமைகள் நீங்கின.

1980களின் நடுப்பகுதி முதல் யுத்தத்தை முன்னெடுத்துச் செல்லும் உபாயங்களில் ஒன்றாக ஸ்ரீலங்கா அரசினால் வடக்கு - கிழக்கு பகுதிகளில் கடுமையான விதத்தில் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது. ஆனால், இப்பொருளாதாரத் தடைகள் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்பைப் பலவீனப்படுத்த முடியவில்லை. உண்மையில் ஸ்ரீலங்க அரசுக்கு எதிரான உணர்வுகள் உருவாவதற்கும் விடுதலைப் புலிகள் பக்கம் ஈர்க்கப்படுவதற்கும் தமிழ் மக்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை இந்தப் பொருளாதாரத் தடை வழிவகுத்தது. யுத்தம் இடம்பெற்ற கால கட்டத்தில் யுத்தப்பிரதேசத்தில் ஒரு பனடோல் குளிகை 10ரூபாவுக்கும் ஒரு போத்தல் பெற்றோல் 300 ரூபாவுக்கும் மற்றும் ஒரு சைக்கிள் 15 ஆயிரம் ரூபாவுக்கும் விற்கப்படுவதற்கும் இப்பொருளாதாரத் தடையே காரணமாகும்.

வன்னிப் பிரதேசம் முழுமைக்குமாக ஒரு எக்ஸ்ரே இயந்திரமே பாவனையில் இருந்தது. யாழ்ப்பாணத்தில் அத்தியாவசியமான மருந்து வகைகளைப் பெறமுடியவில்லை. பொருளாதாரத்தடை காரணமாக வடக்கு - கிழக்கு பகுதி மக்கள் துன்பங்களை அனுபவிக்கவேண்டியிருந்தது. யுத்த நிறுத்த உடன்பாடானது மேற்கூறப்பட்ட தடைகளை நீக்குவதற்கு வழிவகுத்தது. வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்களின் நோக்கில் இது ஒரு பெரு வெற்றியாகும்.

03) ஒருவாறு தரைவழிப் பாதை திறக்கப்பட்டது.

1990களில் இருந்து கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கோ அல்லது தெற்கிலிருந்து வடக்கிற்கோ தரைமார்க்கப் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்திற்குச் செல்வதாயின் திருகோணமலையிலிருந்து கப்பல்மூலமோ அல்லது இரத்மலானையிலிருந்து விமானம் மூலமோ அப்படி அல்லது விடுதலைப் புலிகள் அமைப்பின் போக்கு வரத்துச் சேவை மூலம் வன்னியூடாகவோதான் பிரயாணம் செய்யவேண்டியிருந்தது.

திருகோணமலையிலிருந்து கப்பல் மூலமான பிரயாணம் மிகுந்த சிரமங்கள் நிறைந்ததாகும். 500 பிரயாணிகள் பயணம் செய்யும் கப்பலில் ஒரேயொரு கழிவறையே அமைக்கப்பட்டிருந்தது. அதுமட்டுமன்றி பிரயாணத்திற்காக அலையவேண்டி இருந்தது. விமானத்தில் ஒரு தடவை செல்லுவர 6ஆயிரம் ரூபா செலவுசெய்ய நேர்ந்தது. அதற்குக்கூட பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதி பெறவேண்டியிருந்தது. பல தடவைகள் நீண்ட 'கியூ' வரிசையில் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது. பலாலி மார்க்கமாக பிரயாணம் செய்வது உயிரைப் பணயம் வைக்கும் செயலாய் அமைந்திருந்தது.

போர்நிறுத்த உடன்பாடு, ஏ-9 பாதை திறப்புக்கு வழிவகுத்தது. கடந்த ஓர் ஆண்டில் ஆகக் குறைந்தது 5 லட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஏ-9 பாதையூடாக யாழ்குடாநாட்டிற்கு சென்று திரும்பியுள்ளனர். சுதந்திரமான போக்குவரத்துக்கான சிரமங்களைக் குறைப்பது உண்மையில் இத்தரைவழிப் பாதை திறப்புக்கு வழிவகுத்தது. அது மட்டுமன்றி, பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இத்தரைவழிப் பாதையை திறந்து பேணிவருவதற்கு இப்போர் நிறுத்த உடன்பாடு உறுதுணையாயிற்று. இது நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும்.

04) நாடு புராவிலும் உள்ள வழிபாட்டுத் தலங்களுக்கும் உல்லாச நிலையங்களுக்கும் சென்று வர நாட்டு மக்கள் அனைவருக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

சிங்களப் பௌத்தர்கள் யாழ்ப்பாணத்தில் பௌத்த வழிபாட்டுத் தலமான நாகதீபத்திற்கு வழிபாட்டிற்குச் சென்றுவரும் வாய்ப்பு இனி எப்போது கிடைக்கும் என்பது பற்றி யுத்தம் இடம்பெற்ற காலத்தில் தென்பகுதி மக்களிடையே விமர்சனங்கள் இடம்பெற்றன. அதேபோன்று, வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த இந்துக்களிடையே தென்பகுதிக் கதிர்காமம் பற்றியும் கத்தோலிக்க மக்களிடையே மன்னார் மடுமாதா ஆலயம் பற்றியும் விமர்சனங்கள் இடம்பெற்றன.

போர்நிறுத்த உடன்பாட்டை அடுத்து நாட்டில் சகல பொதுமக்களும் இவ்வழிபாட்டுத் தலங்களுக்குத் தலயாத்திரை மேற்கொள்ளும் வாய்ப்பு உருவாகியது. ஆகக்குறைந்தது 10 ஆண்டுகளுக்குப் பின்னர் முதற்றடவையாக லட்சக் கணக்கான பொதுமக்கள் தத்தம் வழிபாட்டுத் தலங்களுக்குத் தலயாத்திரை மேற்கொண்டனர். இதன்மூலம் சமய நம்பிக்கை மீண்டும் துளிர்ப்பதற்கு இடம் ஏற்பட்டது. அதுபோன்றே, பல தரப்பட்ட பொதுமக்கள் பிறிதோர் இன மக்கள் வாழும் பிரதேசங்களுக்குச் சுதந்திரமாகச் சென்று, அம்மக்களுடன் அன்னியோன்னியமாக உறவை வளர்க்கும் பொருட்டு பயம் எதுவும் இன்றி பயணஞ்செய்ய வாய்ப்பு ஏற்பட்டது.

மற்றொரு வகையில் பார்க்குமிடத்து எந்த இன மக்களும் ஓய்வு, கொண்டாட்டம் மற்றும் மன மகிழ்ச்சி ஆகியவற்றை நாடுவது இயல்பே. எமது நாட்டில் செலவு குறைந்த உள்நாட்டு உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளுவதால் இந்நோக்கம் நிறைவடைகிறது. போர் நிறுத்த உடன்பாட்டை அடுத்து வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள எழில் மிக்க கடற்கரைகள் பல சகல பொதுமக்களின் உல்லாசப் பொழுதுபோக்குக்கான இடங்களாக மாறியுள்ளன. அதேபோன்று, வடக்கு - கிழக்கில் வாழும் உல்லாசப் பயணப் பிரியர்கள் நுவரெலியா மற்றும் கொழும்பு ஆகிய இடங்களுக்குச் சென்று உல்லாசமாகப் பொழுது போக்க வழி ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை யுத்தத்தால் பெற்றுக்கொள்ள இயலாத எதையும் சமாதானத்தால் பெற்றுக் கொள்ள இயலும் என்ற விதத்தில் வெற்றியாக அமைகிறது.

05) சிங்கள மற்றும் தமிழ் மக்கள் மேன்மேலும் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளவும், அன்னியோன்னிய உறவை வளர்த்துக்கொள்ளவும் ஆரம்பித்தனர்.

யுத்தத்தின் மூலம் நாடு நிலரீதியாக மட்டும் பிளவுபட்டிருக்கவில்லை. நாட்டு மக்கள் மனஉணர்வு ரீதியாகவும் பிளவுபட்டிருந்தனர். நாட்டில் வாழும் பல்வேறு இனங்கள் மத்தியில் அவநம்பிக்கை வளர்ச்சியற்று இனங்கள் வெவ்வேறு துருவங்களாகப் பிரிந்து நின்றன. போர் நிறுத்த உடன்பாட்டின் இவ் ஓராண்டு காலத்துள் இந்நிலைமையை மீண்டும் முன்னைய நிலைக்கு மாற்றுவதில் வெற்றிபெற இயலாது போய்விட்டாலும், ஆகக்குறைந்து துருவங்களாக பிரிந்து நின்ற இனங்கள் உணர்வு ரீதியில் மேலும் பிளவுறுவதைத் தடுத்து நிறுத்துவதில் வெற்றியடைய முடிந்தது.

தமிழில்: வீயெஸ்ரி

சிங்கள, தமிழ் மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பலதரப்பட்ட அரச நிறுவனங்களாலும், பொது அமைப்புகளாலும் ஒழுங்கு செய்யப்பட்ட உல்லாசச் சுற்றுலாக்களில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்குகொண்டனர். முதற்தடவையாக வடபகுதியிலிருந்து வந்த விளையாட்டு வீரர்கள் தென்பகுதியில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றினர்; உறவுப் பாலம் அமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

ஒருவகையில் சமாதான சூழலையும், அன்னியோன்ய நல்லுறவையும் கட்டி வளர்க்கும் நோக்கில் ஒழுங்குசெய்யப்படும் இவ்வகை ஏற்பாடுகள் வெவ்வேறு இன மக்களிடையே பரஸ்பர நட்புறவையும், நம்பிக்கையையும் உருவாக்கும் இந்த வகையில் பல் இன மக்கள் சமுதாயத்தில் ஒவ்வொருவரும் மற்றவர்களை மதித்து, கௌரவித்து நடக்கும் பண்பை விருத்தி செய்வதற்கான வழிவகுக்க இப்போர்நிறுத்த உடன்பாடு ஒரு காரணமாய் அமைந்துள்ளது.

06) பல ஆண்டு காலமாக அகதிகளாக வாழ்ந்த மக்கள் தத்தமது இடங்களுக்குத் திரும்பிச் சென்றுள்ளனர்.

இந்நாட்டில் இடம்பெற்ற இனப்பிரச்சினை காரணமாக யுத்தம் இந்நாட்டு மக்களின் 1/16 பங்கினரை அகதிகளாக்கியுள்ளது. இவ்வகையில் உள்நாட்டில் மட்டும் எட்டு லட்சம் மக்கள் அகதிகளாக வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் மீண்டும் மீண்டும் அகதிகளாக நேர்ந்தவர்கள்.

போர்நிறுத்த உடன்பாடு காணப்பட்டு இற்றைவரையான காலப் பகுதியில் இவர்களில் 3 லட்சத்து 50 ஆயிரம் பேர்வரையில் தமது முன்னைய சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்றுள்ளனர். இதுபற்றி அவர்களிடம் கேட்டால் தாங்கள் மகிழ்ச்சியாக இல்லை என்றே கூறுவார்கள் எனக் கொள்ளமுடியும்.

அவர்கள் இப்போது மீண்டும் தமது வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு இச்சமாதானச் சூழ்நிலை தொடரவேண்டுமெனவே விரும்புகின்றனர். அவர்களது வாழ்க்கைநிலை உயர்வடைய சமாதானச் சூழ்நிலை போதுமானதாக இல்லாதபோதும் அவர்களது அத்தியாவசிய தேவைகள் பலவற்றை நிறைவுசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. விசேடமாக அவர்களது காணிகளை நேர்சீர்செய்து கொடுப்பதற்கும் அவசிய பொருளாதார உதவிகள் வழங்குவதற்கும் இச்சமாதான நடவடிக்கைகளில் உயர் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. அதேபோன்று, அவர்கள் தமது இடங்களில் குடியேறுவதற்காக, அப்பகுதிகளில் காணப்படும் நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகள் கடந்த ஒரு வருட காலமாக இடம்பெற்றுள்ளன.

இவையாவும் வெற்றியளிக்கும் நடவடிக்கைகள் அல்ல என எவராவது கூறமுடியாமா?

07) சர்வதேச சமூகம் ஸ்ரீலங்காவின் சமாதான முயற்சிகளுக்கு முழு அளவிலான தனது ஆதரவை வழங்கியது.

உலக வரலாற்றில் கடந்த பத்தாண்டு காலத்தில் எமது நாட்டுச் சமாதான முயற்சிகளுக்கு வழங்கப்படும் ஆதரவு போன்று சர்வதேச சமூகத்தால் இரு சந்தர்ப்பங்களில் மட்டுமே ஆதரவு வழங்கப்பட்டன. தென்னாபிரிக்க சமாதான முயற்சிகளின் போதும், மத்தியகிழக்கு சமாதான முயற்சிகளின்போதுமே சர்வதேச சமூகம் இவ்வாறான ஆதரவை வழங்கியது. எமது நாட்டில் மேற்கொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டின் பயனாய் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் காரணமாக இன்று வரலாற்றில் மீண்டுமொரு தடவை சர்வதேச சமூகம் தன் ஆதரவை வழங்க முன்வந்துள்ளது. ஸ்ரீலங்காவின் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் வழங்கிவரும் அனுசரணை, ஒத்துழைப்பு மற்றும் ஆசீர்வாதம் குறித்து சகல ஸ்ரீலங்கா மக்களும் பெருமைகொள்ள இயலும். ஏனெனில், உலகமயமாக்கப்பட்ட இன்றைய உலகத்தில் எந்தவொரு நாடும் நீண்டகாலம் இவ்விதம் இயங்கஇயலாது. இச்சர்வதேச சமூகத்தின் உதவிகளின் வரையறைகள் மிகவும் தெளிவானவை. அதாவது, ஸ்ரீலங்கா 'பிளவுபடாத ஒரே நாடு என்ற விதத்தில் பேணப்பட வேண்டும். அதேபோன்று இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சு மூலமான அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பவையே அந்த வரையறையாகும். இவ்வட்டகையில் பலம்வாய்ந்த நாடான இந்தியாவும், உலகத்தின் பலம் வாய்ந்த நாடான அமெரிக்காவும் இந்த அடிப்படை விடயங்களை ஏற்றுக்கொண்டுள்ளன. ஐரோப்பிய பொருளாதார சமூகமும் ஜப்பானும் இப்போர்நிறுத்த மூலம் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முன்னெடுப்புகளுக்கு ஆதரவு வழங்குகின்றன. உலகநாடுகள் மட்டுமன்றி, பல பிரபல்யம் மிக்க பொது அமைப்புக்களும் கடந்த ஆண்டில் இந்நாட்டில் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளின் பங்காளர்களாகத் தம்மை இணைத்துக்கொண்டன. கனடாவின் "போரம் ஒவ் டெரேஷன்", ஜேர்மனியின் "பீஸ் ரோக்" மற்றும் பிரித்தானியாவின் "ஸ்ரீலங்கா வேக்கிங் குறூப்" ஆகியவை இதற்கு உதாரணங்களாகும்.

08) ஸ்ரீலங்காவின் எதிர்காலம் பற்றி உருவாகும் நம்பிக்கையால் உயர்ந்து சென்ற பொருளாதாரப் பின்னடைவு நிறுத்தப்பட்டது.

இருபது வருடகால யுத்தத்தின் பெறுபேறாக 2001ஆம் ஆண்டில் மந்தகதியிலான பொருளாதார முன்னேற்றத்துடன் தீவிர மோதல் நிலைக்கும் முகங்கொடுக்கவேண்டிய நிலைமையை ஸ்ரீலங்கா எதிர்கொண்டது. யுத்தத்துக்கான செலவு அதிகரித்தமையால் நாடு திவாலாகும் நிலை ஏற்பட்டது.

போர்நிறுத்த உடன்பாடு காரணமாக இப்பயங்கரமான நிலை தடுக்கப்பட்டது. கடந்த ஆண்டு முழுவதிலும் நாம் யுத்தத்தில் தொடர்ந்து, ஈடுபடநேர்ந்திருப்பின் ஸ்ரீலங்காவின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையை அடைந்திருக்கும். போர்நிறுத்த உடன்பாடு காரணமாக ஸ்ரீலங்காவின் பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளமையை மறுப்பது, உண்மைக்கு முன்பாக அரசியல் நிற மூக்குக்கண்ணாடியை அணிந்துகொண்டு கண்களை இறுக மூடிக்கொள்வது போன்ற செயலாகும்.

வடபகுதியில் மரக்கறிவகை, நெல் மற்றும் தானியவகை உற்பத்தி உயர்வடைய ஆரம்பித்துள்ளமையைக் கொண்டும் இதனை எம்மால் தெரிந்துகொள்ளமுடியும். பங்குச் சந்தை வியாபாரத்திலும் இவ்வகை நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. போர்நிறுத்த உடன்பாடு காரணமாகக் கிடைக்கவேண்டிய பூரணமான பொருளாதார சுபீட்சம் கிடைக்கவில்லையெனக் கருதினாலும், கடந்த ஆண்டு முழுவதும் யுத்தம் தொடர்ந்து இடம்பெற்றிருப்பின் எமக்கு எந்நிலை ஏற்பட்டிருக்குமென நாம் சிந்தித்துப் பார்த்தல் அவசியமாகும்.

09) முதற்றடவையாக ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப் புலிகள் அமைப்பும் இந்நாட்டின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி முறையை உருவாக்க இணக்கம் கண்டன.

அரசியல் தீர்வின் அடிப்படை வரையறையாக (ஒரே நாட்டினுள்) சமஷ்டி முறை உருவாக்கத்திற்கு ஒஸ்லோ நகரில் இடம்பெற்ற பேச்சுக்களில் இரு தரப்பினரும் இணக்கம் கண்டனர். இவ்வேளையில், 1927இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க, 1944இல் ஜே.ஆர்.ஜயவர்த்தனா, பீட்டர் கெனமன் மற்றும் வைத்தியலிங்கம், 1948இன் பின்னர் செல்வநாயகம் மற்றும் தொடர்ந்த ஆண்டுகளில் சமாதானத்தில் நாட்டம் கொண்ட பொது அமைப்புக்களின் தலைவர்கள் ஆகியோர் ஸ்ரீலங்காவின் எதிர்காலம் பற்றிக் கண்ட கனவின் பயனாய் அறிவை ஏற்படுத்தும் யுத்தத்தின் பின்னர் மீண்டும் இணக்கப்பாடொன்று எட்டப்பட்டது.

ஈழம் என்ற தமது தனிநாட்டுக் கோட்பாட்டினின்றும் விடுதலைப் புலிகள் அமைப்பு கீழிறங்கியதும், ஒரே நிர்வாகம் அல்லது தனியான நிர்வாகம் என்ற தமது நிலைப்பாட்டினின்றும் ஸ்ரீ லங்கா அரசு கீழிறங்கி வந்ததும் வரலாற்று முன்னேற்றமாகும். இவ்வித முடிவுக்கு வராது விடின் ஸ்ரீலங்காவுக்கு எதிர்காலமே இல்லாதுபோய்விடும் என்பது இப்போது தெளிவாகியுள்ளது. நாடு துண்டாடப்பட்டுவிடும் என்ற சிங்கள மக்களின் அச்சமும், சிங்களபெரும்பான்மை அரசின்கீழ் வாழநேரிடும் என்ற தமிழ்மக்களின் அச்சமும் இதன்மூலம் அற்றுப்போய்விடும். இந்த இணக்கப்பாடு சமாதான நடவடிக்கைகளின் மிக முக்கியமான நீண்டகால அரசியல் வெற்றியாகும்.

10) (விமர்சனங்களுடன் கூடிய, ஆனால்) சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச்செல்லப்படவேண்டுமென ஜனாதிபதியும், முஸ்லிம் சமூக அரசியல் தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர்.

போர்நிறுத்த உடன்பாட்டின் ஓராண்டுகால இடைவெளி ஸ்ரீலங்காவில் புதிய அரசியல் நெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதாவது, முக்கிய அரசியல் கட்சிகள் இரண்டும், அரச அதிகாரத்தை வகிக்கும் வேளையில் போர்நிறுத்த உடன்பாடும் சமாதான முயற்சிகளும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் நிலையாகும். முன்னெப்போதும் இந்நாட்டில் இவ்வாறானதொரு நிலையை இடம்பெறவில்லை. ஜனாதிபதியும், பிரதமரும் தமது தனிப்பட்ட கட்சி பேதங்களைக் கணக்கெடுக்காது கடந்த ஆண்டு முழுமையும், பேர்

(VIஆம் பக்கம் பார்க்க)

அளவெட்டி - மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான

அறிவித்தல்

வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998-05-19 ஆம் திகதிய 1028 / 6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியடப்பட்டதுமான "வடக்கு - கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விதிகள்" இதற்கு அமைய யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 1997-02-17ஆம் திகதி 963/1 இலக்கங்கொண்ட அதிவிசேட வர்த்தமானிமூலம் எற்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக் குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- ✦ இதற்கமைய இக்கூட்டங்களிற் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.
- ✦ கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4)பங்கினர் அல்லது 25பேர் எது குறைவோ அத்தொகையாகும்.
- ✦ தவிசாளர் குறித்த கிளையின் பொதுச் சபையிலிருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது(09) உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருபவர். இவர்களுள் ஆகக்குறைந்தது இருவர் (02) 18வயதிற்கும் 35வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல்வேண்டும்.
- ✦ சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின்மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.
- ✦ இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டுமூலம் தெரிவுமேற்கொள்ளப்படும்.
- ✦ தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையில் பொதுச் சபையில் பிரகடனப்படுத்துவதுடன், சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்துமூலம் அறிவிப்பார்.

A தகுதியுள்ள கிளைப் பொதுச் சபை அங்கத்தினருக்கு கிளைக்குழு தெரிவு தொடர்பான அறிவித்தல்கள் தனித்தனி அனுப்பிவைக்கப்படுகின்றன. இந்த அறிவித்தல்கள் கிடைக்கப்பெறாத எவரேனும் தகுதியுள்ள அங்கத்தவர்கள் இந்த அறவித்தலை ஏற்றுக்கொண்டு இக்கிளைப் பொதுச் சபை நடைபெறும் திகதியில் தங்களுக்குரிய கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்குச் சமுகமளித்து கிளைக்குழுவைத் தெரிவுசெய்யுமாறு வேண்டுகிறோம்.

கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்:

கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும் 01.03.2003 சனிக்கிழமை முற்பகல் 10 மணி

தொடர் இல.	கிளை இல.	கிளையின் பெயர்	தவிசாளர் பெயர்	கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடத்தப்படும் இடங்கள்
01	01	அளவெட்டி கூட்டுறவாளர் வீதி	திரு. செ. திருச்செல்வம்	அளவெட்டி மகாஜனா சபை மண்டபம்.
02	02	தபாற்கந்தோரடி, அளவெட்டி	திரு. வி. கே. அருந்தவநாதன்	கிளை 2 கட்டடம்.
03	03	ஆலடி, அளவெட்டி தெற்கு	திரு. தா. கணபதிப்பிள்ளை	அருணாசலம் வித்தியாசாலை, அளவெட்டி தெற்கு.
04	04	முதலியார் கோயிலடி, அளவெ.	திரு. ஐ. நாகேஸ்வரன்	முதலியார் கோயிலடி, சனசமூகநிலைய மண்டபம்.
05	05	அளவெட்டி வடக்கு	திரு. க. குமரகுருலிங்கம்	அளவெட்டி வடக்கு, சனசமூக நிலைய மண்டபம்.
06	06	கனேஸ்வரம், அளவெட்டி	திரு. பி. எஸ். ராஜா	அளவெட்டி வடக்கு, அமெரிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, கனேஸ்வரம்.
07	07	அளவெட்டி தெற்கு	திரு. எம். எஸ். சண்முகநாதன்	அருணாசலம் வித்தியாசாலை, அளவெட்டி தெற்கு.
08	08	மல்லாகம் சந்தி, மல்லாகம்	திரு. பீ. சிறிக்குமார்	விசாலாட்சி வித்தியாசாலை, மல்லாகம்.
09	09	கல்லாரை, மல்லாகம்	திரு. வொ. தெட்சணாமூர்த்தி	கிளை 9 கட்டடம்.
10	9A	கே.கே.எஸ். வீதி, மல்லாகம்	திரு. ஆர். புவன்ராஜ்	விசாலாட்சி வித்தியாசாலை, மல்லாகம்.
11	10	குளமங்கால், மல்லாகம்	திரு. வி. கைலைநாதன்	கிளை 10 கட்டடம்.
12	11	சுலைநகர், அளவெட்டி தெற்கு	திரு. எஸ். ஐயாத்துரை	கலைவாணி சனசமூக நிலையம், அளவெட்டி தெற்கு.
13	12	நீதிமன்ற வீதி, மல்லாகம்	திரு. சி. சபாரட்ணம்	கிளை 12 கட்டடம்

கூ.அ.உ. ஆணையாளர் பணிமனை
857, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
14.02.2003

ஒப்பம்: செ.கனகசபாபதி
கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர்,
யாழ்.மாவட்டம்.

கிளைக்குழு உறுப்பினராகத் தெரிவுசெய்யப்படத் தகுதியற்றவர்கள்

01. கிளையினது வாக்காளர் பட்டியலில் பெயர் காணப்படாத ஒருவர்.
02. 18 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள்.
03. உடன் முன்சென்ற மூன்று ஆண்டுகளுள் தீய ஒழுக்கச் செயலுக்காகக் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டவர் அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனைக்குத் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள்.
04. கடனைத் தீர்க்க வகையற்றவர் எனப் பிரகடனம் செய்யப்பட்டவர் அல்லது அவ்வாறு ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள்.
05. இச்சங்கத்திற்கு அல்லது பதிவுசெய்யப்பட்ட வேறு எக்கூட்டுறவுச் சங்கத்திற்கும் எக்கடனையாவது திருப்பிக் கொடுக்காதவர் அல்லது வேறு எவ்விதத்திலும் தவறு செய்தவர்.
06. இச்சங்கத்தில் வியாபாரி எனப் பதிவுசெய்யப்பட்டவர் அல்லது சங்கத்தின நல உரிமைகளுக்கு முரண்பட்டவகையில் ஒரு வியாபாரத்தை நடத்துபவர்.
07. சங்கத்தில் ஆதாயம் கருதி ஏதாவது ஒரு பதவியை அல்லது இடத்தினை வகிப்பவர் அல்லது ஆணையாளரின் முன் னனுமதியின்றி ஏதாவது தகைமைக் கொடையைப் பெறுபவர்.
08. இச்சங்கத்தில் அல்லது இச்சங்க உறுப்புரிமை வகிக்கும் வேறு எந்தச் சங்கத்திலும் ஊதியம் பெறும் ஊழியராய் இருப்பவர்.
09. ஒர் உறுப்பினர் என்ற முறையில் தவிர மற்றப்படி சங்கத்துடன் செய்யப்பட்டிருக்கும் எந்த ஒப்பந்தத்திலோ அல்லது சங்கத்தினால் செய்யப்படும் எந்த விற்பனையிலோ, கொள்வனவிலோ அல்லது சங்கத்தின் நிதியோடு சம்பந்தப்பட்டு அதனால் செய்யப்படவிருக்கும் அல்லது பேச்சளவில் இருக்கும் ஏதாவது ஒப்பந்தத்தில் அல்லது கொடுக்கல் வாங்கல்களில் மறைமுகமாகவோ, நேர்முகமாகவோ அக்கறை கொண்டிருப்பவர்.
10. கூட்டுறவுச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளுக்கமையத் தமது பதவியை அல்லது வேலையை கடந்த ஐந்து ஆண்டுகளில் விட்டகலவேண்டிய நிலைக்கு ஆளானவர்.
11. இயக்குநர் சபையினால் அல்லது கிளை நிர்வாக சபையினால் உறுப்பினராகக் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாத அல்லது மேன்முறையீடு இயக்குநர் சபையினால் அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் பிரிவு ஆறு (02) இன் கீழ் ஆணையாளரால் மீளாய்வு மூலம் அல்லது இவ்விதியின் 2:4 அல்லது 2:6இன் கீழ் அல்லது வாக்காளர் அட்டவணையில் பேர் சேர்க்கப்படாத ஒருவர்.
12. நாடாளுபன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள்.
13. அங்கத்தவராகச் சேர்ந்து ரூபா 100/-ஐப் பங்குப் பணமாகச் செலுத்தி முடிக்காதவரும் அங்கத்தவராகச் சேர்ந்த ஒருவருடம் பூர்த்தியாகாதவருமான ஒருவர்.

[சங்கத்தின் துணைவிதிப் பிரிவு 22 (1)]

(பி-26642)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பல இன கலர் மீன்கள், மீன் தொட்டிகள், மோட்டார்கள், மீன் தொட்டிக்குரிய அழகு சாதனப் பொருள்கள் மற்றும் Love Birds குருவிகள், கூடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (14341)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, முடமாவடி.(14806)

காணி விற்பனைக்கு

நவாலி வடக்கு, மானிப்பாயில் 9 பரப்பு வெறும் காணி அட்டகிரி கோயிலுக்கு அருகில், நன்னீர்க் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆனந்தபவன், மயிலு ஒழுங்கை, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. (14795)

மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாக 8 பரப்பு காணி, உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இசதீஸ்வரன், பொன்னாலை வீதி, மானிப்பாய் சந்தி (மானிப்பாய் கிராமிய வங்கிக்கு அருகில்).(14799)

வீடு விற்பனைக்கு

நீர்வேலி மேற்கு, இராச பாதையில் 4ஆம் கட்டைக்கு அண்மையில் 10பரப்புத் தோட்ட நிலத்துடன் சகல வசதிகளும்கொண்ட வீடு விற்பனைக்குண்டு. மாலை 5 மணிக்குப் பின்னர். தொடர்பு: க.மகேஸ்வரன், இல.59, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (14781)

Prima Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து, உங்களுக்குத் தேவையான நிறைகளில், நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), நல்லூர். (13977)

தவறிவிட்டது

ஆறுமுகம் ஞானப்பிரசாகம் என்பவரது தேசிய அடையாள அட்டையும் (502402560V), சாரதிப் பத்திரமும் (DL 303562) யாழ்.வைத்தியசாலையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கானான் ஜெப ஆலயம், இருபாலை, கேப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (14790)

மணமகள் தேவை

யாழ்.இந்து வெளாள குடும்பத்தைச் சேர்ந்த, 5'4" உயரமுடைய, திருவோணம், குறைந்த விரக பாலமுடைய, 32வயது, படித்த மணமகளுக்கு லண்டன், சுவிஸ், நோர்வே, பிரான்ஸ் நாடுகளில் பிரஜாவுரிமை பெற்று தொழில்புரியும் மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். விபரம் பா இல.1795, C/o உதயன். (14797)

திருமண சேவை

வெளிநாடுகளில் தொழில் புரியும், வெளியூர் செல்ல விரும்பும், உள்ளூர், அரச தொழில்புரிவோரும், வியாபாரம், சொந்தத் தொழில்செய்யும் மணமகன்கள் உண்டு. கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த சகலரும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு: திரு.நா. ஆறுமுகஐயா, இல.36/12, காட்டுக் கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (14798)

சிங்களம்

எழுத, பேச, வாசிக்க

புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 25.02.2003

மாலை 4.15.

ஆசிரியர்:

லீலாகிருஷ்ணன்

K.T.C. ஸ்ரேசன் ரோட்,

கோண்டாவில்.

(14889)

கட்டுத்துவக்கு வெடித்ததில் குடும்பஸ்தர் படுகாயம்

பன்றி வேட்டைக்காக 'இடியன்' துப்பாக்கி தயார் செய்துகொண்டிருந்தவேளை திடீரென வெடித்ததில் ஒருவர் இடதுகையில் படுகாயமடைந்தார்.

பனைப்பகுதியில் தேர்தல்முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கிளாலியைச் சேர்ந்த நீக்கிலாப்பிள்ளை ஜெயரட்ணம் (வயது59) என்பவரே படுகாயமடைந்தவராவார். படுகாயமடைந்தவர் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஈ15)

உள்நாட்டில் யுத்த கர்ஜனை செய்பவர்கள் ஈராக் விடயத்தில் சமாதானம் பேசுகின்றனர்!

'தமிழர்கள் படுகொலையுண்டபோது இவர்கள் எங்கே?' கேள்வி எழுப்புகிறார் ரவிராஜ்

பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் கண்காண முடியாத தூரத்தில் இருக்கும் ஈராக் நாட்டிற்காக இங்கே இருந்து கண்ணீர் வடிப்பவர்கள், உள்ளூரில் ஆயிரம், ஆயிரமாக தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டபோதும், உடைமைகள் அழிக்கப்பட்டபோதும் வாய்மூடி மௌனிகளாக இருந்தது ஏன்? - என்று தமிழர் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பி.ரவிராஜ் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

சர்வதேச மட்டத்தில் தம்மை சமாதானத்தின் தூதுவர்கள் போன்று போதனை செய்பவர்கள் உள்நாட்டில் அதனைச் செயலில் காட்ட முன்வராதது வேதனையாக இருக்கின்றது என்றும் அவர் சாடினார்.

ஈராக் மீது அமெரிக்கா யுத்தம் தொடுப்பதைக் கண்டித்தும், அதனால் ஏற்படும் பின் விளைவுகளுக்கு முகம்கொடுக்க அரசு தயாராகவேண்டும் என வலியுறுத்தியும் எதிர்க் கட்சிகள் ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தன.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ இந்தப் பிரேரணையை முன்வைத்தார். இந்த விவாதத்தில் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்களும், ஆளும்கட்சி உறுப்பினர்களும் -

யுத்தம் ஒன்று ஏற்பட்டால் ஏற்படும் அனர்த்தங்களுக்கும், அதனால் ஏற்படும் பேரழிவுகளுக்கும் நாமும் முகம் கொடுக்க வேண்டும். மத்திய கிழக்கில் தொழில் புரியும் பல லட்சம் இலங்கையர்களின் நிலைமை நிர்க்கதியாகும். எனவே, உயிரழிவுகளைத் தடுக்கவேண்டும். அதேவேளை, இலங்கைத் தேயிலை ஏற்றுமதியும் பாதிக்கப்படும். பொருளாதாரத் தாக்கம் ஏற்படும் என்றெல்லாம் கண்ணீர் வடிக்காத நிலையில் கவலையுடன் பேசினார்கள்.

அனுரா கவலை

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரான அனுரா பண்டாரநாயக்கா, இவர்கள் எல்லோரையும் விட உச்ச நிலைக்கே போய்விட்டார்.

இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பின் உலகின் எந்தவொரு பகுதியிலும் யுத்தம் ஏற்படக்கூடாது. பிரச்சினைகள் ஏற்பட்டால் பேசித் தீர்க்க வேண்டும் என்ற நோக்குடனேயே ஐக்கிய நாடுகள் சபை அமைக்கப்பட்டது.

இந்த ஐக்கிய நாடுகள் சபையும் உலக வல்லரசுகளும் அமெரிக்காவின் செயலைக் கண்டித்துள்ளன. ஐ.நா.பாதுகாப்பு சபையும் அமெரிக்கப் படையெடுப்பைக் கண்டித்துள்ளது.

ஆனால், இவற்றையெல்லாம் உதாசீனம் செய்துவிட்டு அமெரிக்கா ஈராக் மீது படையெடுக்கத் தயாராகின்றது.

அப்படியானால், இந்த ஐக்கிய நாடுகள் நிறுவனமும் பாதுகாப்பு சபையும் உருவாக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறாமல் போய்விடும். அதனால், பிரயோசனமும் இல்லை.

ஆயுதப் பரிசோதனை என்ற பெயரில் அதிபர் சதாம் ஹுசைனின் அந்தப்புறத்தையும் மாளிகையையும் கூட பரிசோதித்துவிட்டனர்.

ஆனால், எந்தவிதமான மயங்கர ஆயுதங்களும் கண்டுபிடிக்கப்படவில்லை.

அப்படி இருந்தும் அமெரிக்க ஜனாதிபதி, தான்தோன்றித்தனமாக படையெடுக்க முயல்கிறார். அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான ஜிம்மி காட்டர், பில் கிளின்டன் ஆகியோர்கூட அமெரிக்காவின் படையெடுப்பு முயற்சிகளைக் கண்டித்துள்ளனர். அமெரிக்காவின் செயல் மூன்றாவது உலக மகாயுத்தத்தையே உருவாக்கும். ஆனால், அதனால் ஏற்படும் உயிரிழப்புக்களுக்கும் அமெரிக்கா பொறுப்பேற்க வேண்டும் என அனுரா பண்டாரநாயக்கா குறிப்பிட்டார்.

எப்போதுமே யுத்தம் வேண்டும், போராட்டம் வேண்டும், சமாதானம் வேண்டாம் போராட்டமே எமது இலட்சியம் என்று வீரமாகப் பேசும் ஜே.வி.பி.யினர் கூட இன்று வளைகுடா யுத்தம் ஏற்பட இடமளிக்கக் கூடாது. பாரிய உயிர் அழிவுகளைத் தடுக்க வேண்டும். உடைமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று ஜீவகாருண்யம் பேசியதும் புதுமையாக இருந்தது. ஜே.வி.பி. உறுப்பினரான விஜித ஹேரத் பேசும்போது சர்வதேச சமூகமே யுத்தம் வேண்டாம் என்று கூறும்போது அமெரிக்க ஜனாதிபதி மட்டும் போர் தொடுத்தே தீருவேன் என்பது விவேகமற்ற செயல். இந்தக் கொடிய யுத்தத்தால் ஏற்படும் உயிர் அழிவுகளைப் பற்றிச் சிந்திக்கவேண்டும் என்று கூறினார்.

இவர் இப்படிப் பேசும்போது, கடந்த மாதம் ஒஸ்லோ சமாதான மாநாடு தொடர்பான ஒத்திவைப்பு வேளையில் இவரும் இவரது சகாக்களும் ஆற்றிய உரைகளும் நினைவுக்கு வரத்தான் செய்தன.

சர்வதேச சமூகமும் ஏனைய அமைப்புக்களும் இலங்கை இனப் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சின் மூலம் தீர்வு காணப்படவேண்டுமென வலியுறுத்தும்போது, இவர்கள் மட்டும் அரசும் புலிகளும் செய்துகொண்ட சமாதானம் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட வேண்டும்; யுத்தத்தின் மூலமே புலிகளை ஒடுக்கவேண்டும் என கர்ஜனை செய்தனர். 'ஊருக்கு மட்டும் உபதேசம் எமக்கில்லையடி அது' என்பதுபோல் இருந்தது ஜே.வி.பி.யினரின் இன்றைய பேச்சு.

ரவிராஜ் பதிலடி

எதிர்க்கட்சியினரின் இந்த ஒப்பாரிகளுக்கும் ஓலங்களுக்கும் பதிலடி கொடுத்தார் யாழ்மாவட்ட எம்.பி. ரவிராஜ்.

தமிழர்கள் எப்போதும் சமாதானத்தையே விரும்புபவர்கள்; உலக சமாதானத்தை வரவேற்பவர்கள். உலக நாடுகளில் 500இற்கும் மேற்பட்ட அமைப்புக்கள் வளைகுடா யுத்தத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்கின்றன; ஊர்வலங்களை நடத்துகின்றன. வடக்கு - கிழக்கு வாழ் தமிழர்களும் இவர்களுடன் கைகோர்த்து சமாதானக் குரல் எழுப்புகின்றனர்.

அமெரிக்காவும் பிரிட்டனும் ஈராக்கை அச்சுறுத்துகின்றன. அதேவேளை, கத்தோலிக்கரான போப் பாண்டவரும், இஸ்லாமியரான ஈராக் பிரதிப் பிரதமரும் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக வத்திக்கானில் பேச்சு நடத்துகின்றனர்.

இங்கே வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர்கள் 20 வருட யுத்தத்தால் கொன்று குவிக்கப்பட்டனர். எமது பிரதேசம் சாம்பல்மேடானது.

உள்நாட்டில் வாழும் தமிழர்களாகிய நாம் இவ்வளவு சித்திரவதைகளை அனுபவித்தபோது, இந்த ஜே.வி.பியினரும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினரும் எங்கே போயிருந்தார்கள்?

கடந்த 15 மாதங்களாக தமிழர்களாகிய நாம் சற்று நிம்மதியாக இருக்கிறோம். ஆனால், அதுகூட இவர்களுக்குப் பொறுக்கவில்லை. சமாதான ஒப்பந்தத்தை எதிர்த்துப் பேரணி நடத்தும் இவர்கள் உலக சமாதானம் பற்றியும் யோதிக்கின்றனர்.

ஈரான் - ஈராக் யுத்தம், பலஸ்தீன - இஸ்ரேல் யுத்தம் தொடர்பாக எல்லாம் அனுரா பண்டாரநாயக்கா மணிக்கணக்கில் பேசினார். ஆனால், உள்நாட்டில் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டபோது இவர் பாராமுகமாக இருந்ததுதான் வேதனையாக உள்ளது என்று உறைப்பாகக் கூறினார் ரவிராஜ் எம்.பி.

வழமையாகவே ரவிராஜ் எம்.பி. பேசும்போது எதிரணியினர் குறுக்கீடு செய்வார்கள். ஆனால், இன்று அவர்கள் 'கப்சிப்' என்று இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

ஹக்கீம் உரை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் தனது பங்கிற்கு சமாதானத்தை வலியுறுத்தினார்.

இன்று உலகில் இரண்டு வல்லரசுகள் இருக்கின்றன. ஒன்று அமெரிக்கா. மற்றது சர்வதேச மக்களின் குரல். சர்வதேச மக்களின் குரலை அமெரிக்காவால் தோற்கடிக்கமுடியாது என்று, அமைச்சர் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டார்.

டிரோன் பதில்

இப்பிரேரணைக்குப் பதில் அளித்துப் பேசினார் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ.

இலங்கை அணிசேராக் கொள்கையில் இருந்து ஒருபோதும் விலகிச் செல்லாது. வளைகுடா யுத்தம் ஒன்று ஏற்படுவதை நாம் கண்டிக்கிறோம். அமெரிக்காவின் தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யும்படியும் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

நாம் உள்நாட்டிலும், சர்வதேச அரங்கிலும் அமைதியும் சமாதானமும் ஏற்பட சகல பங்களிப்பையும் செய்வோம் என்றார் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ.

வளைகுடா யுத்தத்தின் எதிரொலி நாடாளுமன்றத்திலும் ஒலித்தது என்றே கூறவேண்டும்.

கவன ஈர்ப்புப் பிரேரணை

காலையில் நாடாளுமன்றம், சபாநாயகர் மைக்கல் ஜோசப் பெரேரா தலைமையில் கூடியபோது ஜே.வி.பி. உறுப்பினரான விமல் வீரவன்ஸ, சபாநாயகரின் அனுமதியுடன் கவன ஈர்ப்புப் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்தார்.

போக்குவரத்துத் துறையில் அரசு கடைப்பிடித்து வரும் தவறான கொள்கைகளை அதில் அவர் சாடினார். ரயில்வே திணைக்களம் தாமத சேவை இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளது என்றார் அவர்.

50மைல் வேகத்தில் ஓடிய ரயில்கள் இப்போது 30 மைல் வேகத்தில் தான் ஓடுகின்றன. கொழும்பு - மட்டக்களப்பு ரயில் சேவை ஏன் தாமதமடைகிறது என்று கேள்வி எழுப்பிய அவர், வாழைச்சேனைக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் மீண்டும் ரயில் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக அறிக்கை தயாரிக்கத் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு இரண்டு கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இப்பணத்தில் அரைவாசியையாவது ரயில்வே திணைக்களப் பொறியியலாளர்களுக்கு வழங்கியிருந்தால் அவர்கள் இந்நேரம் வாழைச்சேனைக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் ரயில் சேவையை ஆரம்பித்திருப்பார்கள். இப்படி ரயில்வே திணைக்களத்தில் பாரிய மோசடிகள் இடம்பெறுகின்றன. அவற்றைப் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்யவேண்டும் என விமல் வீரவன்ஸ எம்.பி. வலியுறுத்தினார்.

வீடமைப்பு நிதிக் கம்பனி

நாட்டு மக்களுக்கு நல்லை அளிக்கும் வகையில் வீடமைப்பு நிர்மாணத் துறை, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானால் முன்வைக்கப்பட்ட பிரேரணை ஒன்றும் அங்கீகரிக்கப்பட்டது.

இதுவரைகாலமும் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என்ற பெயரில் இயங்கிய கடன் வழங்கும் சபை, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கம்பனி என மாற்றி அமைக்கப்படும்.

அதன்மூலம் எந்தவிதமான அரசியல் ஊடுருவல்களும் இன்றி இலகுவாகக் கடன்களைப் பெறமுடியும்.

குறைந்த வருமானம் பெறுபவர்கள் - அதாவது மூவாயிரம் பேர் முதல் அதற்கு மேல் வருமானம் பெறுபவர்கள் - மூன்று லட்சம் முதல் 15 லட்சம் ரூபாவரை கடன்களைப்பெற முடியும்.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் இந்த ஆலோசனைகள் நேற்று நாடாளுமன்றத்தில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன.

இது, வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வீடு கட்டுவதற்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமையும்.

நாடாளுமன்றம் மீண்டும் இன்று காலை பத்து மணிக்குக்கூடும்.

(ம)

மூன்றாம் அரசு முஸ்தீபை இலங்கை கண்டிக்கவேண்டும்

எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள்

ஈராக் மீது அமெரிக்கா யுத்தம் ஒன்றை தொடுக்கும்போது அது மூன்றாவது உலகயுத்தம் ஒன்றிற்கே வழிவகுக்கும். எமது சகோதர நாடான ஈராக் மீது அமெரிக்கா தான்தோன்றித்தனமாகப் படையெடுப்பதை இலங்கை அரசு வன்மையாகக் கண்டிக்கவேண்டும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் நேற்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார். சபை ஒத்திவைப்பு வேளையில் ஈராக் மீது அமெரிக்கா யுத்தம் தொடுக்கத் தயாராவதைக் கண்டிக்கும் ஒத்திவைப்பு பிரேரணை ஒன்றை முன்மொழிந்து உரையாற்றும்போதே இப்படிக் கூறினார்.

தொடர்ந்து பேசிய எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ மேலும் கூறியதாவது:-

இலங்கையில் உற்பத்தி செய்யும் தேயிலையில் கூடுதலான தொகையை இறக்குமதி செய்யும் நாடு ஈராக். காலங்காலமாகவே இரு நாடுகளுக்கும் இடையில் பாரம்பரிய வர்த்தக தொடர்புகள் உள்ளன. சட்டரீதியாக சுமார் 300பேர் ஈராக்கில் தொழில் செய்தாலும், ஆயிரத்திற்கும் அதிகமான இலங்கையர்கள் அங்கு வாழ்கின்றனர் என்பதை மறுக்கமுடியாது.

ஈராக் மீது அமெரிக்கா ஏன் யுத்தம் தொடுக்கிறது என்பதை அமெரிக்கர்களே புரியாத நிலையில் இருக்கின்றனர்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான ஜிம்மி காட்டர், பில் கிளின்டன் ஆகியோர் ஈராக் மீது யுத்தம் தொடுப்பதைக் கண்டித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் ஈராக் மீது அமெரிக்கா யுத்தம் ஒன்றை தொடுத்தால், அது மத்திய கிழக்கு நாடுகள் அனைத்தையுமே பாதிக்கும். ஈராக்கின் எண்ணெய்க் குதங்களைத் தாக்கிப் பொருளாதார ரீதியாக ஈராக்கை அழித்து ஒழிப்பதே ஜனாதிபதி புஷ்ஷின் நோக்கம். இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் மத்திய கிழக்கு நாடுகளில் வாழும் இலங்கையர்களின் நிலைமை என்ன? அவர்களுடைய உயிருக்கு உத்தரவாதம் அளிப்பது யார்?

அமெரிக்காவின் இந்த செயலை முழு உலகமுமே கண்டிக்கின்றது. ஆனால், அமெரிக்க ஜனாதிபதி உலக நாடுகளின் கோரிக்கைகளை உதாசீனம் செய்துள்ளார்.

எனவே, அமெரிக்காவின் இந்தச் செயலை இலங்கை அரசும் வன்மையாகக் கண்டிக்கவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தினார்.

(ம)

யுத்தத்தின் கோரத்துக்கு மருந்தளிக்க உலக நாடுகளின் நிதி மட்டும் போதாது

கூட்டமைப்பின் ஜோசப் பரராஜசிங்கம் கூறுகிறார்

கொழும்பு,செப்.22

வடக்கு-கிழக்கு பகுதிகளில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளை உலக நாடுகள் வழங்கும் நிதி உதவியினால் மட்டுமே புனரமைத்து விட முடியாது.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சும் அதற்கு மேலும் தொகையான பணத்தை ஒதுக்கி கொடுக்கப்பட வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 50 ஆயிரத்திற்கும் அதிகமான வீடுகள் யுத்தத்தினால் சேதமடைந்துள்ளன. இதனை மறுசீரமைப்பதற்கு, பொறுப்பான அமைச்சர் நிதி ஒதுக்கவேண்டும். வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன திருத்தச் சட்டமூல விவாதத்தின்போது தேசியக் கூட்டமைப்பின் எம்.பி.ஜோசப் பரராஜசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஓராண்டு பூர்த்தியாகி விட்டது. இதனை நல்ல சகுனமாகக் கருதி எமது பகுதிகளில் சேதமடைந்துள்ள வீடுகள் மறுசீரமைக்கப்படவேண்டும்.

வறிய, நடுத்தர மக்களுக்கான வீடமைப்புத் திட்டங்கள் கிழக்கில் ஆராய்விக்கப்படவேண்டும்.

அமைச்சர் முன்வைத்துள்ள திருத்தச் சட்டத்தினால் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் வங்கிகளின் தரத்திற்கு உயர்த்தப்படுகிறது. இது வரவேற்கக்கூடியது.

வீடமைப்பு கடன் வசதிகளை எல்லா மக்களும் இலகுவாக பெறக்கூடிய விதத்தில் வங்கி நியதிகளை மாற்றியமைக்கவேண்டும். யுத்தத்தினால் வீடுகளை இழந்த மக்கள் கடன்களுக்கு விண்ணப்பிக்கும்போது, அவர்களுக்கு முன்னுரிமை வழங்குவது அவசியமாகும்.

- இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

(ம)

2500 ஆசிரியர்கள் விரைவில் வடக்கு - கிழக்கில் நியமனம்

யாழ்ப்பாணம்,பெப்.22

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிலவிவரும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் நோக்கில் சுமார் 2ஆயிரத்து 500 ஆசிரிய நியமனங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளதாக வடக்குக் கிழக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழு உறுதியளித்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

பட்டதாரி ஆசிரிய நியமனங்களைத் தவிர சுமார் 400 தகுதிகாண் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் -

அவற்றில் உடற்கல்வி மற்றும் மீன்பிடியியல் டிப்ளோமா மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் ஆயிரம்பேரும் ஜி.சீ.ஈ. உயர்தரம் மற்றும் போட்டிப் பரீட்சைகளின் அடிப்படையில் ஆயிரம்பேரும் நியமனம் பெறுவர்.

இது தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் நமகாசிவம் கூறியதாவது.

கல்வி அமைச்சு ஏற்கனவே உறுதியளித்துள்ளபடி வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு இன்னும் 400 தகுதிகாண் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். இதுதவிர 6ஆயிரத்து 500இற்கும் அதிக ஆசிரிய வெற்றிடங்கள் வடக்கு - கிழக்கில் உள்ளன. இவற்றை நிரப்புவதற்கு உலக வங்கி, கல்வி அமைச்சு ஆகியன கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளன. பொதுச் சேவைகள் ஆணைக்குழுவும் விரைவில் நியமனம் வழங்கப்படுமென உறுதியளித்துள்ளது - என்றார்.

(ஒ-9-5)

கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ்ப்பாணம் அமெச்சூர் மெய்வன்மை சங்கத்தின் வருடாந்தக்கூட்டம் கிறொச்சியில் தமிழீழ தேசிய விளையாட்டுவிழா நடைபெறுவதன் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

சங்கானை ஆஸ்பத்திரியில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் பனடோல் உட்பட சகல மருந்துகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால், வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

கொழும்பில் இருந்து கடந்த ஆண்டுக்கான இறுதிக் கந்தாய மருந்து வகைகளும் இந்த ஆண்டுக்கான ஆரம்பக்கந்தாய மருந்து வகைகளும் பெப்ரவரி மாதம் முடிவடையும் நிலையிலும் அனுப்பிவைக்கப்படவில்லை. இதனாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத்தினைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை-

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் வட்டுக்கோட்டை, தொல்புரம் ஆகிய இடங்களிலுள்ள அரசினர் வைத்திய சாலைகளில் வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறையால் குறிப்பிட்ட சில தினங்களில் குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே இயங்குகின்றன. இதனால் சங்கானை அரசினர் வைத்தியசாலை சுமார் 60 ஆயிரம் மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கின்றது.

நாளொன்றுக்கு இவ்வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சுமார் 300 நோயாளர்கள் சிகிச்சைக்காக செல்கின்றனர். (ம-175)

சங்கானையில் சாரணர் விழா

யாழ்ப்பாணம்,பெப்.22

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கம், சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய ஆதரவில் நடத்தும் உலக சாரணர் தின விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் ச.கைலாசநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக சங்கனை உதவிப் பிரதேச செயலர் மு.சிவப்பிரகாசம், கௌரவ விருந்தினராக மாவட்ட ஆணையாளர் ந. சௌந்தரராஜனும், சிறப்பு விருந்தினர்களாக காங்கேசன்துறை மாவட்ட சாரணக் கிளைத்தலைவர் அதற்பரானந்தன், செயற்குழுத் தலைவர் தநா. போஜன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.22

உடுவில் கல்விக்கோட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப்போட்டிகள் இன்று சனிக்கிழமை முதல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில நடைபெறவுள்ளன.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

காலை 8 மணி -

✪ 15 வயதுப் பிரிவு - இராமநாதன் கல்லூரி எதிர் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.

✪ 17 வயதுப்பிரிவு - உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் எதிர் ஏழாலை மகாவித்தியாலயம்.

இராமநாதன் கல்லூரி எதிர் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்.

✪ 19 வயதுப்பிரிவு - ஏழாலை மகாவித்தியாலயம் எதிர் உடுவில் மகளிர் கல்லூரி.

10.30 மணி -

✪ 17 வயதுப்பிரிவு இராமநாதன் கல்லூரி எதிர் ஏழாலை மகாவித்தியாலயம்.

✪ 19 வயதுப்பிரிவு - உடுவில் மகளிர் கல்லூரி எதிர் இராமநாதன் கல்லூரி.

ஏழாலை மகாவித்தியாலயம் எதிர் இராமநாதன் கல்லூரி.

★ ★ ★

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களிடையிலான ஆண்கள், பெண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும். (5-152-86)

யுத்தநிறுத்த...

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தத்தையும், சமாதான முயற்சிகளையும் முன்னெடுத்துச் செல்வதில் பங்காற்றினர். இவ்விருவரில் எவரும் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பதில் ஆர்வம் காட்டவில்லை. இனிவரும் காலத்திலும் ஆர்வம் காட்டப் போவதுமில்லை. இது பெரியதொரு வெற்றியாகும்.

தீவிரப்போக்குடைய அரசியல் தலைவர்கள் சிரமங்களைச் சந்திக்க நேர்ந்திருப்பதும், முஸ்லிம் சமூக அரசியல் தலைவர்கள் இச்சமாதான முயற்சிகளுக்கு உறுதியான ஆதரவளிப்பதும் மற்றொரு முன்னேற்றமான நிலைமையாகும். ரவூப் ஹக்கீம், அதாவுல்லா மற்றும் பேரியல் அஷ்ரப் ஆகிய முஸ்லிம் அரசியல் தலைவர்கள் நாடு மீண்டும் யுத்தத்தின் பாதையில் செல்வதை தற்போது அனுமதிக்கமாட்டார்கள். இவ்வகை அரசியல் நிலைப்பாட்டுக்கு அவர்கள் வருவதற்கு வழி வகுத்தது இந்த யுத்த நிறுத்தமும் அதன்மூலம் முன்னெடுக்கப்பட்ட ஏனைய நடவடிக்கைகளுமாகும்.

இவ்வெற்றியை பறுந்தள்ளி போர் நிறுத்த உடன்பாட்டை முறிவடையச்செய்ய இன்று இந்நாட்டின் பொறுப்பு மிக்க எந்த அரசியல்வாதியாலும் இயலாது. போர்நிறுத்தத்தின் ஓராண்டு காலத்தில் கிடைத்த வெற்றிகள் அதிகம். இம்முன்னேற்றத்தைத் தடை செய்ய முயற்சியெடுக்கும் எவரையும் வரலாறு மன்னிக்காது.

★ ★ ★

சதுரங்கப் போட்டி - 2003 நேரமாற்ற அறிவித்தல்

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் இன்று (22.02.2003) சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவிருந்த சதுரங்கப் போட்டி நண்பகல் 12.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகிறோம்.

- ரி.அருணகிரிநாதன்.
(செயலாளர்) (சி-26643)

யாழ்.சதுரங்க சம்மேளனம்.

கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையத்தின் நிர்வாகசபை உறுப்பினரும் எமது சேவைக்கு பல வழிகளிலும் ஒத்தாசை புரிந்த மகத்தான சேவையாளருமான

கார்த்திகேசு சந்திரராசா

அவர்களின் இழப்பையிட்டு கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(14825) யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையம்
நிர்வாகசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்.

துயர் பகிர்வு

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதற்கு இலக்கணமாய் வாழ்ந்த

கார்த்திகேசு சந்திரராசா (SLAS)

அவர்களின் திடீர் மறைவு எமக்கு மட்டுமன்றி யாழ். சமூகத்திற்கே பெரும் பேரிழப்பாகும். அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதோடு, அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

UNHCR அலுவலர்களும்,
(14822) UNHCR செயற்றிட்ட அலுவலக ஊழியர்களும்.

இதய அஞ்சலி

வலி.மேற்கு பிரதேச செயலாளராகவும், யு.என்.எச்.சி.ஆர். நிறுவன அதிகாரியாகவும் இருந்து எமது பாடசாலைக்கும், பிரதேச மக்களுக்கும் அளப்பரிய சேவையாற்றி இறைவனடி சேர்ந்த

அமரர் கார்த்திகேசு சந்திரராசா

அவர்களுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
(14814) யா/சுழிபுரம் மத்திய சங்க மைசவ வித்தியாசாலை.

மரண அறிவித்தல்

ஆறுமுகம் நடராசா (O.M.A.)

(ஓய்வுபெற்ற சுகாதார எழுதுநர்)

தும்பளை, நெல்லண்டையைச் சேர்ந்த ஆறுமுகம் நடராசா நேற்று (21.02.2003) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசமணியின் அன்புக் கணவரும் சிவானந்தம், இராஜநேரு, அருந்ததி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆ.குகராசா, யசோதா, சூரியசாந்தி ஆகியோரின் மாமனாரும் பாமினி, சத்தியா, வாணி, வேல்குமார், ராதை, சுனிதா (யாழ்.பல்கலைக்கழகம், முகாமைத்துவம்), திருக்குமரன், ரமணன், தாட்சாயினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2003) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 4 மணியளவில் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை, கோரியடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லண்டை ரோட்,
தும்பளை. பருத்தித்துறை. (14824)

தகவல்:
ந.இராஜநேரு (மகன்)

கம்பியூட்டர் எக்ஸ்ப்ரஸ் 'உதயன்' நாளிதழின் ஊடக அனுசரணையுடன்

இலங்கையின் முதற்தர கணனிச் சஞ்சிகை நடத்தும்

மாபெரும் தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கும் கண்காட்சியும் - 2003

1. யா/இராமநாதன் மகளிர் கல்லூரி (மருதனார்மடம்)
   காலம்: 23.02.2003 காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை.
2. வீரசிங்கம் மண்டபம் (யாழ்ப்பாணம்)
   காலம்: 01.03.2003 காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை.
3. நெல்லியடி மத்திய கல்லூரி (நெல்லியடி)
   காலம்: 08.03.2003 காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை.

கருத்தரங்கில் உள்ளடங்கும் விடயங்கள்

1. தகவல் தொழில்நுட்பமும் நாமும்
2. இயக்க அமைப்புகள் வின்டோஸ் 98/2000/xp
3. இணையமும் மின் அஞ்சலும்
4. தகவல் தொழில்நுட்பத்தில் காணப்படும் கற்கை நெறிகள்
5. இலங்கையில் பிரபல்யமான கணனிக் கற்கை நெறிகளும் அதனைத் தொடர்வதற்கு வேண்டிய தகைமைகளும்.
6. சான்றிதழ் வழங்கும் வைபவம்

பங்குபற்றும் அனைவருக்கும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழும் பாடக்குறிப்பேடுகளும் வழங்கப்படும்.

ரிக்கெட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக்கொள்ளலாம்.

கட்டணம்: பாடசாலை மாணவர்களுக்கு 50/- ஏனையோருக்கு 100/-

கண்ணி கண்காட்சியில் கணனிகளை குறைந்த விலையில் கொள்வனவு செய்யலாம்.

ஊடக அனுசரணை: உதயன்

(c/26647)

Powered by:

அனுசரணை: INSTITUTE OF INFORMATICS STUDIES — WINTECH COMPUTERS Total Computers Solution

AIZEN INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
NO:07, 57th Lane, Colombo - 06, Tel: 01-361381, 0777 397962